விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 186 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 17, திங்கட்கிழமை 30.05.2016



வாசனா சம்பத
இன்றைய சுப்பர் பரிசு
ரூ. 100 இலட்சம்
[10,000,000.00]
வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
NLB


# வாக்காளர் எண்ணிக்கை யாழில் வீழ்ச்சியுறும் அபாயம்

## வலி. வடக்கு, வலி.கிழக்கில் வாக்காளர் பட்டியல் மீளாய்வுப் பணிகள் இடம்பெறவுள்ளதால்

யாழ்ப்பாணம், மே 30
வலி.வடக்கு, வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடந்த ஆண்டு மக்கள் மீள்குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில், வாக்காளர் பெயர்ப் பட்டியல் மீளாய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.
இதன் காரணமாக யாழ்.மாவட்டத்தின் வாக்காளர் எண்ணிக்கை கணிசமான அளவில் வீழ்ச்சியடையக் கூடும் என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்களின் முழுமையான மீள்குடியமர்வு இடம்பெறாத நிலையிலேயே, இந்த மீளாய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள் பக்.25

## பிரதமரின் கருத்தால் சம்பந்தன் அதிருப்தி

கொழும்பு, மே 30
போரின் இறுதிக் காலப் பகுதியில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்காக அமைக்கப்படவுள்ள பொறிமுறைகளில், சர்வதேச நீதிபதிகள் எவரும் இடம் பெறமாட்டார்கள் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ள கருத்துக்கு, எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் அதிருப்தி வெளியிட்டுள்ளார். பக்.23

# மத்திக்கும் - வடக்குக்கும் தொடர்கிறது முரண்பாடு

## யாழ். பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் நேற்று எதிரொலிப்பு

“வடக்கு அரசின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முடிவடைந்துவிட்டது என்று தெரிவித்து வெளியேறிய பின்னரும், மத்திய அரசின் பிரதிநிதியான இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டத்தை தொடர்ந்தும் நடத்தியுள்ளார்.”

யாழ்ப்பாணம், மே 30
மத்திக்கும் - வடக்கு மாகாணத்துக்கும் இடையிலான பிரச்சினை, யாழ்ப்பாணப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் நேற்று எதிரொலித்தது.
வடக்கு மாகாண அரசின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முடிவடைந்துவிட்டது என்று தெரிவித்து வெளியேறிய பின்னரும், மத்திய அரசின் பிரதிநிதியான இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை தொடர்ந்தும் நடத்தியுள்ளார்.
யாழ்ப்பாணப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. மாவட்டத்தின் பக்.25

முச்சந்தி முரளி



தவறாமல் அனைவரும் வாக்காளராகப் பதியுங்கோ...

# புதிய அதிபர்களுக்கு பாடசாலைகள் வழங்க வடமாகாண சபை இடையூறு

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு முதலமைச்சர் உள்ளிட்ட சகலருக்கும் கடிதம்

யாழ்ப்பாணம், மே 30
வடக்கில் புதிதாக நியமனம் பெறவுள்ள அதிபர்களுக்கு பொறுப்பாகப் பாடசாலைகளை வழங்குவதைத் தடைசெய்யும் வகையில் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு, இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.
அத்துடன், மாகாண சபையின் இந்த நடவடிக்கை மிகத் தவறான பக்.23

# பெருந்தொகை வெடிபொருள்கள் கிளிநொச்சி வீடொன்றில் மீட்பு



கிளிநொச்சி,மே 30
கிளிநொச்சியில் ஆள்கள் நடமாட்டம் இன்றிக் காணப்பட்ட வீடு ஒன்றில் இருந்து வெவ்வேறு நிறைகளைக் கொண்ட 10 கிளைமோர்கள் உட்பட 66 கைக்குண்டுகள் மற்றும் 42 மோட்டார் பியூஸ் என் பன மீட்கப்பட்டதாக கிளிநொச்சி 57ஆம் படைப் பக்.25

# பிணையில் வந்த சந்தேகநபர் திருட்டுக் குற்றச்சாட்டில் கைது

## அவரிடமிருந்து நகைகள் உள்ளிட்டவை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 30
பல திருட்டுக்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் இருந்த நபர் சில நாள்களுக்கு முன்னர் பிணையில் வந்து மீண்டும் நகைகள் உள்ளிட்ட பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரி பக்.25

## காணி, பொலிஸ் அதிகாரங்கள் குறித்து பரிசீலிக்க அரசு தயார்

*நீதி அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, மே 30
புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு வருகின்ற நிலையில், அதில் அரசியல் தீர்வை உள்ளடக்கவும் அவ்வாறு உள்ளடக்கப்படும் அரசியல் தீர்வில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் புதிய கோணத்தில் பரிசீலிப்பதற்கும் அரசு தயாராக பக்.25

# விரைவில் யாழ். வருவார் பொலிஸ்மா அதிபர் பூஜித்

## வன்முறைகளைத் தடுப்பது குறித்து நேரில் ஆராய்வதற்கு

யாழ்ப்பாணம், மே 30
குடாநாட்டில் இடம்பெறும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் நேரில் சென்று ஆராயவேண்டும் என பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுள்ளதாக அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.
இந்த நிலையில் அடுத்த மாதம் பக்.23

# கிழக்கு முதலமைச்சர் விவகாரம்; அரசுக்கு இராஜதந்திர நெருக்கடி

கொழும்பு, மே 30
பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால், கிழக்கு முதலமைச்சர் விவகாரத்தில் எடுக்கப்பட்ட நிலைப்பாடு இராஜதந்திர மட்டத்திலும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.
அத்துடன், பொறுப்புக் கூறல் விவகாரங்களில் அரசின் நிலைப்பாடு பக்.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# தமிழ், சிங்கள மாணவர் முரண்பாடு; ஏட்டிக்குப் போட்டியாக போராட்டங்கள்

கொழும்பு, மே 30

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தில் தமிழ், சிங்கள மாணவர்களுக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டதையடுத்து, ஏட்டிக்குப் போட்டியான இரண்டு கவனவீர்ப்புப் போராட்டங்கள் கடந்த வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் நடத்தப்பட்டுள்ளன.

தமிழ் மாணவர்களால் வந்தாறுமூலை வளாகத்தில் கடந்த 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் தினம் நினைவு கூரப்பட்டது. இந்த நிகழ்வு தொடர்பான படங்களைத் தனது முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்திருந்த தமிழ் மாணவன் மீது, சிங்கள மாணவர்கள் சிலர் கடந்த செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தினர் என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவாகியுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்கள் மீது, நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி, தமிழ் மாணவர்கள் வளாகத்தின் முன்பாக ஒன்று கூடி கடந்த வியாழக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஏற்கனவே சிங்கள மாணவர்களில் சிலர் இனரீதியான செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தனர் என்றும் தமிழ் மாணவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தமிழ் மாணவன் மீதான தாக்குதல் தொடர்பாக இரு சிங்கள மாணவர்களுக்கு பல்கலைக் கழக நிர்வாகத்தால், வெள்ளிக்கிழமை முதல் விரிவுரைகளுக்கு வருவது தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடையை நீக்கக்கோரி சிங்கள மாணவர்கள் வெள்ளிக்கிழமை பிற்பகல் வளாகத்தின் பிரதான வாயிலை முற்றுகையிட்டு கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

சிங்கள மாணவர்களின் போராட்டம் காரணமாக சுமார் 3 மணித்தியாலங்கள் விரிவுரையாளர்கள் உட்பட எவரும் வளாகத்துக்கு உள்ளேயிருந்து வெளியேற முடியாத நிலை காணப்பட்டது. அங்கு காணப்பட்ட அமைதியற்ற சூழ்நிலை காரணமாக கலகம் அடக்கும் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

(ற-ஜ-5)

# பரீட்சையில் சித்தியடையாதோருக்கு பதவி இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்

கொழும்பு, மே 30

பதில் அதிபர்கள் கடமையாற்றும் பாடசாலைகளுக்கு அதிபர் சேவையில் சித்தி பெற்றவர்களைப் பதிலாகவும், இதுவரை பதில் அதிபராகவுள்ளவர்களை- அதிபர் பரீட்சையில் சித்தியடையாதவர்களை அதிபர்களாகவும் நியமிக்குமாறு வடமாகாண சபையில் பேசப்பட்ட விடயத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கை அதிபர் சேவை யாப்பின் படி அதிபர் சேவைக்கு பரீட்சை மூலம் 3 ஆயிரத்து 822 பேர் தெரிவு செய்யப்பட்டு கடந்த 9 ஆம் திகதி முதல் ஜூன் 17 ஆம் திகதி வரை பயிற்சியளிக்கப்படுகிறது.

இதில் சுமார் 300 பேர் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள். பதில் ஆசிரியர்கள் கடமையிலுள்ள பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்களை நியமிக்கவே இந்த 300 பேருக்கும் பயிற்சியளிக்கப்படுகின்றது என இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

வடமாகாண சபையில் இது தொடர்பில் பேசப்பட்ட விடயம், அதிபர் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கு அநீதி இழைப்பதாக அமைந்துள்ளது.

இந்த விடயம் குறித்து எமது சங்கம் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்துடன் பேச்சு நடத்தியுள்ளது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் வடமாகாண சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் விளக்கக் கடிதமொன்றையும், அனுப்பி வைக்கவுள்ளது என்று ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

(ற-ஜ-4)



முறிகண்டி பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக நேற்று நடந்த வாகன விபத்துச் சம்பவம் ஒன்றில் கிளிநொச்சியிலிருந்து முறிகண்டி நோக்கிப் பயணித்த படிவாகனம் தடம்புரண்டு சேதங்களுக்கு உள்ளானது. (ற-ஜ-21)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு ஆங்கில மொழியில் கடிதம்

## காணாமற்போனவர்களைத் தேடிக் கண்டறியும் ஆணைக்குழுவிலிருந்து

கொழும்பு, மே 30

காணாமற் போனவர்களைத் தேடிக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவிலிருந்து காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கு ஆங்கில மொழியில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த ஆணைக்குழுவின் பணிகள் முடிவுக்கு வரவுள்ள நிலையிலேயே இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

விசாரணைகள், தேடுதல்கள் இடம்பெறுகின்றன என சிலருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிலரது கடிதங்களில் விசாரணைகள், தேடுதல்கள் நிறைவுற்றது எனவும், நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ள அந்தந்த பிரதேச செயலங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் பரணகம ஆணைக்குழுவிடமிருந்து தமக்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள் தமிழ் மொழியில் அனுப்பப்பட்டிருந்தது என்று தெரிவிக்கும் காணாமற்போனவர்களின் உறவினர்கள், தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதங்கள் ஆங்கில மொழியில் உள்ளமை தொடர்பில் பல் வேறு கேள்விகள் எழுகின்றன என்றும் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கடிதங்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களில் உள்ள காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டமை தொடர்பில் இதுவரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இறுதியாக இடம்பெற்ற பரணகம ஆணைக்குழு விசாரணையில் இவ்வாறான கடிதம் ஒன்று தமக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்று குறித்த கடிதத்துடன் வருகை தந்த தாய் ஒருவர் ஆணைக் குழுவிடம் தெரிவித்தார்.

இவ்வாறான கடிதம் தமது அலுவலகத்தில் இருந்து அனுப்பி வைக்கவில்லை எனவும், இது தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது என்று பரணகம தெரிவித்ததுடன் தம்மிடம் இருந்த கடிதத்தைப் பெற்றுக் கொண்டு அதற்குப் பதிலாக வேறு கடிதம் ஒன்றை எழுதிக் கையளித்தார் என்றும் அந்தத் தாய் தெரிவித்துள்ளார்.

(ற-ஜ-5)

# சிவிலுடையில் கைது செய்யச் சென்ற பொலிஸாரால் பதற்றமான நிலைமை

## வாக்குவாதத்தை அடுத்து பொலிஸார் சூடு

யாழ்ப்பாணம், மே 30

நீதிமன்ற பிடியாணைப் பத்திரமும் இன்றி பொலிஸ் சீருடையுமின்றிச் சிவில் உடையில் சென்றிருந்த பொலிஸார் ஒருவரைக் கைது செய்ய முற்பட்டனர் என்றும் அதன்போது துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்த நடவடிக்கையால் கைது செய்ய வந்தவர்கள் பொலிஸாரா? வேறு எவரா? என தாம் அஞ்ச வேண்டிய நிலை ஏற்பட்டது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் முள்ளியவளைப் பிரதேசத்தில் நடந்துள்ளது.

சட்ட விரோத செயல் ஒன்று தொடர்பில் ஒருவரைத் தேடிச் சென்ற பொலிஸார் அவரை அவரது வீட்டில் வைத்துக் கைது செய்துள்ளனர். கைது செய்யும்போது குறித்த நபருக்கும் சிவில் உடையில் சென்றிருந்தவர்களுக்கும் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாகத் துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தப்பட்டது என்று கைது செய்யப்பட்டவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கைது செய்யப்பட்டவரின் தாய் தெரிவித்ததாவது;

முள்ளியவளைப் பொலிஸ் பிரிவுக்குள் வசிக்கும் எனது மகனின் இல்லத்துக்கு நேற்று முன்தினம் மாலையில் சிவிலுடையில் சென்ற பொலி ஸார் எனது மகனைக் கைது செய்வதாகக் கூறியுள்ளனர். அதன்போது நீங்கள் யார் கைது செய்வதற்கான காரணம் என்ன என்று மகன் வினவியுள்ளார். நீதிமன்ற பிடியாணைக்கு மதிப்பளித்து வருகின்றேன் நீதிமன்ற பிடியாணையைக் காண்பியுங்கள் எனக் கோரியுள்ளார். அதனையும் பொலிஸார் வைத்திருக்கவில்லை.

அதன்காரணத்தினால் சந்தேகமடைந்த தனது மகன் அவர்களுடன் கூடப்பயணிக்க அச்சப்பட்டுள்ளார். நீங்கள் நீதிமன்ற ஆணையும் இன்றி சீருடையும் இன்றி உள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்று கூறியுள்ளார். இதுதொடர்பில் விவாதித்துக் கொண்டிருந்தவேளையிலேயே பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

அதன்பின்னர் மாலை முள்ளியவளைப் பொலிஸாரிடம் சென்று வினவியபோதே நீதிமன்ற பிடியாணையைக் காண்பித்தனர். அவ்வாறு எனக்குக் காண்பித்த பிடியாணைப் பத்திரத்தைப் பொலி ஸார் கடமைக்காக வரும்போதோ அல்லது அவர் கள் பணி நேரம் சீருடையில் வருகை தந்திருந் தாலோ வீணான முரண்பாடுகளைத் தவிர்த்திருக்க முடியும்.- என்று தெரிவித்தார்.

(ற-4,101)

சர்வதேச புகைத்தலுக்கு எதிரான தினம் மே 31

வரமுன் காத்திட நினைப்போர்
வலிகள் தடுத்திட நினைப்போர்
மறந்திடுவார் புகைத்தலையே
நினைத்திடார் புகை நாற்றத்தையே!!

தன் முனையில் நெருப்பேந்தி
உன் வாழ்வை இருளாக்கும் புகை
உன் குடும்பப் பகை என
உணர்வது எப்போது?

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யாழ். மாநகர சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் புதிய விதிமுறைகள் நடைமுறைக்கு

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, மே 30

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நபர் ஒருவரைக் கைதுசெய்யும்போது, பின்பற்ற வேண்டிய புதிய விதிமுறைகளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நபர்களைக் கைதுசெய்வதற்கென நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் பின்பற்றுவதற்காகவே இந்தப் புதிய விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்படும்போது, அடிப்படை உரிமைகள் பின்பற்றப்படுவதையும், பாதுகாக்கப்படுவதையும் உறுதிசெய்வதற்காகவே இந்த விதிமுறைகளை அறிவித்துள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

1979ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 48ஆம் பிரிவின்கீழ், எவரையும் கைது செய்யக்கூடாது. மேலும் அவ்வாறு கைதுசெய்யவேண்டிய சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் உரிய சட்டம் மற்றும் நடைமுறையைப் பின்பற்றி, அதற்கென அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரே கைதை மேற்கொள்ள முடியும்.

மேலும் கைதுசெய்பவர் தன்னை தனது பதவிநிலையைக் குறிப்பிடவேண்டும். அதனை அவர், கைது செய்யப்படும் நபர் மற்றும் அவரது குடும்பத்தினரிடம் காண்பிக்கவேண்டும். கைதுசெய்வதற்கான காரணங்களைத் தெரிவிக்க வேண்டும். அத்துடன், கைது செய்ததை உறுதிப்படுத்துவதற்கான ஆவணத்தை வழங்க வேண்டும்.

மேலும் குறிப்பிட்ட ஆவணத்தில், கைதுசெய்யும் அதிகாரியின் பெயர், திகதி போன்றவைகள் காணப்படவேண்டும். அந்த ஆவணத்தைப் பெற்றுக்கொண்டவர், அதில் கைச்சாத்திட வேண்டும். அத்துடன், கைதுசெய்யப்படுபவரின் சொந்த மொழியிலேயே இந்த ஆவணம் காணப்படவேண்டும். கைதுசெய்யப்பட்டவர் தனது குடும்பத்தவர்களுடன் பேசுவதற்கு அனுமதிக்கவேண்டும்.

அதேவேளை, கைது செய்யப்பட்ட நபர் எங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்ற விவரம் தெரிவிக்கப்படவேண்டும் எனவும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(வ–சி)

# சந்தைக்குச் சென்ற வியாபாரியிடம் அதிகாலை வழிமறித்துக் கொள்ளை

## உப்புவல்லைச் சந்தியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 30

அதிகாலை சந்தைக்குச் சென்ற வியாபாரியினை உப்புவல்லைச் சந்திப் பகுதியில் வழிமறித்த கொள்ளையர் வாள்முனையில் அச்சுறுத்தி 25 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது. உடுப்பிட்டிபகுதியினைச் சேர்ந்த சந்தை வியாபாரி ஒருவரே இவ்வாறு பணத்தைப் பறிகொடுத்துள்ளார்.

நெல்லிடியடிச் சந்தைக்கு சென்றுகொண்டிருந்தபோது, உப்புவல்லைப் பகுதியில் இடைமறித்த கும்பல் சாதாரணமாகக் கதைதொடுத்துள்ளனர். திடீரென வாளினைக் காட்டி மிரட்டியுள்ளனர். உயிருக்குப் பயந்து சந்தைப் பொருள்கள் கொள்வனவு செய்வதற்கு வைத்திருந்த 25ஆயிரம் ரூபாபணத்தினைக் குறித்த வியாபாரி கொடுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வியாபாரி நெல்லியடி பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில் ஏற்கனவே உப்பு வல்லைப் பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்றினை அமைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் இந்தப் பகுதியில் இரு வேறு கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(வ–4,107)

# தமிழகத்தின் ஆதரவையே வடக்கு அரசு விரும்புகிறது

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க கருத்து

கொழும்பு, மே 30

வடக்கு – கிழக்கு இணைப்பு தொடர்பில் அரசின் ஒத்துழைப்பை விடவும் தமிழகத்தின் ஆதரவையே வடக்கு மாகாண சபை விரும்புகின்றது.

இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தமிழக முதல்வருக்கு அனுப்பிய பராட்டுக் கடிதத்தில் சமஷ்டித் தீர்வுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கோரியிருந்தார். அத்துடன் தமிழகத்துடன் கிட்டிய தொடர்பாடலை வைத்துக் கொள்ளவும் விரும்பியிருந்தார். இதற்கு தமிழக முதலமைச்சரும் இணங்கியுள்ளார். இந்த விடயம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன என்று வினவிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்



டுள்ளார்.

எவ்வாறு இருப்பினும், வடக்கு மாகாண சபையும் தமிழகமும் நட்புறவைப் பேணுவதால் அரசுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. வடக்கு – கிழக்கு இணைப்பு தொடர்பில், எமது அரசு தான் தீர்மானம் எடுக்க வேண்டுமே தவிர, தமிழக முதல்வர் ஜெயலலிதா அல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.

(வ–5)

### சட்டவிரோதமாக மின் இணைப்பை பயன்படுத்தியவர் கைது

யாழ்ப்பாணம், மே 30

சட்டவிரோதமாக மின் இணைப்பைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவரை நேற்று கைதுசெய்துள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலி நாவற்காடு பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பில் இருந்து வருகை தந்த மின்சார சபையின் புலனாய்வு அதிகாரிகளும், அச்சுவேலி பொலிஸாரும் இணைந்து நடத்திய திடீர் தேடுதலின் போது குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

அவர் மின்மானிக்கு ஊசி வைத்து அதன் வேகத்தினைக் குறைத்து சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்த பொலிஸார், குறித்த சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் கூறினர்.

(வ–4,107)

# சிறுவர் இல்லத்திலிருந்து தப்பிச் சென்ற சிறுமி மீட்பு

யாழ்ப்பாணம், மே 30

தெல்லிப்பழைப் பகுதியில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் இருந்து தப்பிசென்ற சிறுமியினை வறுத்தலைவிளான் பகுதியில் வைத்து மீட்டுள்ளதாகத் தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமியை நேற்றுமுன்தினம் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்திய போது, அதே இல்லத்தில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு நீதிமன்று உத்தரவிட்டது.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராமம் ஒன்றில் வசித்து வரும் குறித்த சிறுமி மீது, சிறுகுற்றச்செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளது. அதனால் சிறுமியின் எதிர்கால நலன்கருதி நன்னடத்தை உத்தியோகத்தர் மூலமாக பொலிஸரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

சிறுமியினை மீட்ட பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் கடந்த வாரம் முற்படுத்தியபோது, நீதிவான் தெல்லிப்பழைப் பகுதியில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் தங்கவைக்க கட்டளை பிறப்பித்திருந்தார். இந்த நிலையில் அந்தச் சிறுமி இல்லத்தினை விட்டு தப்பி சென்றிருந்தார். எனினும் அவர் கடந்த வெள்ளிக்கிழமை வறுத்தலைவிளான் பகுதியில் வைத்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார். அவரைத் தொடர்ந்தும் அதே இல்லத்தில் தங்க வைக்குமாறு மன்று கட்டளை பிறப்பித்தது.

(வ–4,107)

**வேலையாள் தேவை**
திருநெல்வேலி சந்தியில் இயங்கும் Phone and Book Shop கடை ஒன்றுக்கு வேலைக்கு பெண் பிள்ளைகள் தேவை.
077 6378892, 077 5730308

**உடன் தேவை**
ஊர்ச்சேவல், ஊர்ப்பேடு, கல்பேட், வான்கோழி என்பன கூடிய விலையில் கொள்வனவு செய்யப்படும். தாசன் பாம், 158/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 077 312 7498

**வீடு வாடகைக்கு தேவை**
சாவகச்சேரி, சங்கத்தானை, மீசாலை பகுதியில் ஒரு குடும்பத்துக்கு ஏற்ற வீடு வாடகைக்குத் தேவை..
தொடர்பு:
077 5269373, 077 481 5025







# புகையிலைசார் பொருள்கள் விற்கும் வர்த்தகர்களுக்கெதிராகப் போராட்டம்

## அராலியில் நாளை முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,மே 30

சிகரெட் உள்ளிட்ட புகையிலைசார் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கெதிராகப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகச் சமூக விழுமியக் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம் முன்பாக நாளை செவ்வாய்க்கிழமை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என அறிவித்துள்ள அந்தக் குழு, இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுள்ளது.

இது தொடர்பில் குறித்த சமூக விழுமியக் குழு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

எதிர்காலச் சந்ததியைக் காக்க வர்த்தகர்கள், பொதுமக்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். சமூக நலனில் அக்கறையின்றி, வருமானத்தை மட்டும் நோக்காகக் கொண்டு செயற்படும் வர்த்தகர்களுக் கெதிராகப் பொதுமக்கள் புறக்கணிப்புப் போராட்டம் நடத்த வேண்டும்.

புகையிலைசார் பொருள்களான சிகரட்,பீடி,சுருட்டு மற்றும் புகையிலையுடன் கூடிய வெற்றிலைக் கூறு என்பவற்றின் விற்பனையை சமூக நலன் கருதியும், எதிர்காலத் தலைமுறையின் நலன் கருதியும் விற்பனை செய்வதை வர்த்தகர்கள் நிறுத்த வேண்டும்.

இதன் தாக்கத்தை, எதிர்காலத் தலைமுறையினரை தவறான பாதைக்கு இழுத்துச் செல்லும் சமகால நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. புகை பிடிப்பதால், புகைப்பிடிப்பவரை விட பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள்,சிறுவர்கள் என புகைப் பிடிக்காதோரே அதிகம் பாதிப்படைகின்றனர். இதனால் பல குடும்பங்கள் மற்றும் மாணவர்களின் வாழ்வு அழிவடைகிறது.

சமூக நலனிலும் எதிர்காலத் தலைமுறையினரிலும் அக்கறை கொண்ட பல வர்த்தகர்கள், தம் புகையிலைசார் பொருள்கள் மற்றும் சமூகத்தைப் பாதிக்கும் பொருள்களை விற்பதில்லை என சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் உறுதிப்படுத்தி சான்றிதழ்களைப் பெற்று முன்மாதிரியான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு இலாபத்தைக் கருத்தில் எடுக்காது சமூகத்தின் மீது அக்கறை கொண்டு அனைத்து வர்த்தகர்களும் செயற்பட வேண்டும்.

நாளைமறுதினம் முதலாம் திகதி தொடக்கம் சகல வர்த்தகர்களும் புகையிலைசார் பொருள்களை விற்பனை செய்வதில்லை என்பதை உறுதிப்படுத்தி, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பதிவினை மேற்கொண்டு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

புகைத்தல் தொடர்பில் பொதுமக்கள் அக்கறையின்றி அமைதியாக இருப்பதால், உங்கள் பிள்ளைகள் வாழ்வுபாதாளத்துக்குச் செல்வதனை மறக்க வேண்டும் என்றும் அந்தக் குழு தெரிவித்துள்ளது.

(து–வ–4–ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு வாடகைக்குத் தேவை**

கோப்பாய், இருபாலை, கோண்டாவில், உரும்பிராய் ஆகிய பகுதிகளில் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.

**077 805 1655**

**தேவை**

வீட்டுவேலை செய்யக்கூடிய பெண் வேலையாள் தேவை.
நல்ல சம்பளம் வழங்கப்படும்.

**077 308 6894**

**SUMITOMO**
**Original Japan**

**பாதுகாப்பானவை நம்பகரமானவை**

உலகில் மிகப்பெரிய உற்பத்தி நிறுவனங்களின் ஒன்றான சுமிடோமோ ரப்பர் இன்டஸ்ரீஸினால் சுமிடோமோ டயர் ஜப்பானில் உற்பத்தி செய்யப்படுகின்றது.



• அதிஉயர்தரம் • அதிகூடிய தூரம் • உயர் தொழில்நுட்பம் • ஸ்திரத்தன்மை • நவீன வடிவமைப்புகள்

யாழ் நகரில் உங்கள் தேவைக்கு
**பொபியூலர் மோட்டர் ஸ்டோர்ஸ்**
270, ஸ்டேன்லி ரோட், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-222 3535, 021-222 2403 பெக்ஸ்: 021-2223535

**V.R. VADIVETKARASAN ENTERPRISES**
271, Sea Street, Colombo - 11.
Tel: 0112 434 800, 2 435 732 Fax: 2 435 731

# மாதாந்த தவணைக் கட்டணத்தில் மின் இணைப்பு

சாவகச்சேரி,மே 30

தென்மராட்சிப் பிரதேசத்தில் இதுவரை மின்சார விநியோகம் பெறாத குடியிருப்புகளுக்கு மாதாந்த தவணைக் கட்டண அடிப்படையில் மின்சார இணைப்பு வழங்கப்படவுள்ளது.

மின்சாரம் பெற விரும்புவோர் சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள இலங்கை மின்சார சபையின் வாடிக்கையாளர் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் மின்சாரம் என்னும் திட்டத்தின் கீழ் மின்சாரம் பெற விரும்பும் குடியிருப்பாளர்கள், வழமையான விண்ணப்பப் படிவம், கடன் விண்ணப்பப் படிவம், கடன் ஒப்பந்தப் படிவம், மின் இணைப்புக்கான படிவம் ஆகியவற்றைப் பெற்று, எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்குமுன்னர் விண்ணப்பிக்குமாறு இலங்கைமின்சாரசபையின் வட பிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். கடந்த ஜனவரி தொடக்கம் இந்தத் திட்டம்நாட்டில்நடைமுறையில் உள்ள போதிலும், தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், திட்டம் தொடர்பான விவரங்கள் தெரியாததால் விண்ணப்பிக்கவில்லை என சாவகச்சேரி வாடிக்கையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-ஐ-9)

**பிள்ளையார் இன் & பிள்ளையார் ஸ்ரோஸ்**

JCB வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

**021 222 2829**

யாழ்.மாவட்ட
**அழகுக்கலை நிலைய உரிமையாளர் ஒன்றியம் அங்குரார்ப்பணம்**

காலம் : 31.05.2016 (செவ்வாய்க்கிழமை)
நேரம் : பிற்பகல் 3.00 மணி
இடம் : யாழ்.பொது நூலக கேட்போர் கூடம்.

**நிகழ்ச்சி நிரல்**

*விருந்தினர் வரவேற்பு *மங்கல விளக்கேற்றல் *அக வணக்கம்
*வரவேற்புரை : திரு.S. பிரகாஸ் (மாவட்ட இணைப்பாளர் - நியூக் கினியஸ் பவுண்டேசன்)
*தலைமையுரை : திரு.S.J. கேதீஸ் (ஆலோசகர் - நியூக் கினியஸ் பவுண்டேசன்)
* பிரதம விருந்தினர் உரை * சிறப்பு விருந்தினர் உரை
* புதிய நிர்வாகக் குழுத் தெரிவு * புதிய ஒன்றியத் தலைவர் உரை
* நன்றியுரை

தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தங்களின் எதிர்கால நன்மை கருதி தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை:
**ஏஞ்சல்ஸ் அழகு நிலையம் & பயிற்சியகம்**

# INVITATION FOR BID
## District Secretariat, Jaffna

1. The Chairman, District Secretariat Procurement Committee (DPC) on behalf of the Jaffna Municipal Council, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for grade mentioned in the table below with the institute for Construction Training and Development (ICTAD)
4. **Interested bidders may obtain further information from Commissioner's office, Municipal Council, Jaffna. (T.No: 021 222 2019)** and inspect the bidding documents at the same place on any working days from 9.00 hrs to 16.00 hrs.
5. A Complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Commissioner's Office, Jaffna Municipal Council from 30.05.2016 until 20.06.2016 from 9.00 hrs to 14.00 hrs upon payment of a non - refundable fees of Rs. 2,000.00** the Method of payment should be by cash.
6. Bids shall be delivered to the address at **District Secretariat, Kandy Road, Jaffna on or before 21.06.2016 and 14.00 hrs.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| Se. no | Bid.No | Description of work | Engineer's Estimated Cost / Rs in million | Estimate cost with all Taxes / (Rs in million) | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount | Valid Period |
| 01 | JMC/WD/02/SP.PRO/2016/01 | Construction of recyclable waste collection cum operation centre at Nallur.<br>Construction of recyclable waste collection cum operation centre at Paasaiyoor<br>Renovation of recyclable waste collection cum operation centre at Gurunagar. | 5.998 | 6.850 | 6 Months | C 7 or above | 60,000 | 91 days |
| 02 | JMC/WD/02/SP.PRO/2016/02 | Construction of recyclable waste collection cum operation centre at Navanthurai<br>Renovation of recyclable waste collection cum operation centre at Ariyalai<br>Construction of recyclable waste store room at Kakaithevu. | 1.09 | 1.218 | 6 Months | C 8 or above | 37,000 | 91 days |

**N.Vethanayahan,**
**Government Agent /District Secretary,**
**Jaffna District**

(8/21354)(11,17,18)

HOME VISIT CLASSES
ENGLISH / TAMIL MEDIUM
O/L, A/L - ACCOUNTING
ENGLISH - ANY. Grade
**077 331 6406**

**நாஹா மருத்துவ நிலையம்**

நுண்ணிய இரத்த குழாய் அடைப்பு, பாரிச வாதம், கை, கால் விறைப்பு, இதயநோய் - நாடிசாத்திரத்தில் கண்டறிதலின் ஊடாக குணமாதல் Liver பாதிப்பினால் வரும் வயிறு வீக்கம், ஓமோன்ஸ் பிரச்சினை குழந்தையின்மைக்கான சிறப்பு சிகிச்சை

வங்கி முன்லேன்,
சாத்தாவத்தை வயிரவர்கோயிலடி
(ஜெகபதி வீடு) மானிப்பாய்.

**077 321 2740**

**வேலையாள் தேவை**

எமது ஸ்தாபனத்திற்கு கணினி அறிவுடைய வேலையாள் தேவை.
வயது: 18 தொடக்கம் 25 வரை
ஆண்கள் மட்டும்
**கிங்ஸ் எலெக்றோனிக்ஸ்**
11 - A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,

**021 222 3857**

**கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு**

யாழ்நகரில் முட்டாஸ் கடை, சந்திக்கு அருகில் சிறப்பான முறையில் உணவகம் நடத்தக்கூடிய கட்டடத்தொகுதி வாடகைக்கு உண்டு. முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

**077 722 2715**

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
**IELTS**
• Latest training materials. (BOOK 11)
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
**IELTS Life Skills**
திருமணம் செய்து நிரந்தர வீசாவில் UK செல்பவர்களுக்கானது, 2015 புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை
British Council'S IELTS Registration Centre
**Spoken English**
(Veta Fluency Diploma)
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் 021 222 4403 Hot Line :0777173517
நெல்லியடி 021 226 2470 | சாவகச்சேரி 021 227 0775 | சுன்னாகம் 021 224 1970 | கிளிநொச்சி 021 228 5655

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை

## தேசிய அரசு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவால்

கொழும்பு, மே 30
தேசிய அரசை அமைப்பதற்கான தீர்மானத்தை கேள்விக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றின் காரணமாக, உயர் நீதிமன்றத்தால், தனக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். இது சிறப்புரிமை மீறல் என்று தெரிவித்துள்ள பிரதமர் ரணில், இது தொடர்பில் தீர்ப்பு ஒன்றைச் சபாநாயகர் அறிவிக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.
தேசிய அரசை அமைப்பது குறித்து சபாநாயகரால் தீர்ப்பொன்று வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவான தீர்மானமொன்றும், நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான நிலையில் அந்தத் தீர்மானத்தை நீதிமன்றத்தின் கேள்விக்கு உட்படுத்துவது சிறப்புரிமை மீறலாகும். எனவே சபாநாயகர் இந்த மனு தொடர்பாக தீர்ப்பொன்றை உயர் நீதி மன்றத்துக்கு அறிவிக்க வேண் டும் என்று பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க கோரிக்கை விடுத்தார்.
இயற்கை இடர் தொடர்பான விசேட விவாதத்துக்காக சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் கூடியது. இதன்போது சிறப்புரிமைப் பிரச்சினையை முன் வைத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் உட்பட முழுச் சபையின் கவனத்துக்கும் இந்த விடயத்தைக் கொண்டு வந்திருந்தார். அவர் குறித்த மனு தொடர்பில் விளக்கவுரை ஆற்றும் போது தெரிவித்ததாவது:-
ரியர் அட்மிரல் சரத் வீரசேகர மற்றும் பேராசிரியர் விமலதர்ம ஏப விக்ரம ஆகியோரால் எனக்கு எதி ராக உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு வொன்றுக்கு அமைவாக, அரசமைப்புக்கு முரணான வகையில் எனக்கு அழைப்பாணையும் விடுக்கப் பட்டுள்ளது.
தேசிய அரசு தொடர்பான தீர்மானம் மற்றும் அந்த தீர்மானத்துக்கு எந்தெந்த அரசியல் கட்சிகள் அவசியம் என்பது குறித்தும், சபாநாயகரால் 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி தீர்ப்பொன்று வழங் கப்பட்டது. அதன் பிரகாரம்தான் தீர்மானம் சபையால் அங்கீகரிக் கப்பட்டது. தற்போது அந்த விடயம் அனைத்தும் நிறைவுக்கு வந்து விட்டன. சபாநாயகரின் தீர்ப்பை இனிக் கேள்விக்கு உட்படுத்த முடியாது. இது இந்தச் சபையின் அதிகாரங்களின் அங்கமாகும்.
சபாநாயகரால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக, பதிலளிப்பதற்காக என்னையோ அல்லது எனது சார்பான சட்டத்தரணியையோ நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராக வாக்களித்த ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் என்றும், மனுதாரர் தன்னை மனுவில் குறிப்பிட்டுள்ளார்.
தேசிய அரசொன்று எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்ற ஒட்டுமொத்தமான தீர்மானத்தையும் அவர் கேள்விக்குட்படுத்தியுள்ளார். எனினும் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அவர் இங்கு குறிப்பிடவில்லை. நாடாளுமன்றத்தால் மேற்படி செயல்நோக்குக் கொண்ட தீர்மானமானது, சட்டத்தின் பிரகாரம் நடைமுறையில் கிடையாது எனவும் மனுவில் மனுதாரர் சுட்டிக் காட்டியுள்ளார். இது போன்ற பல்வேறு விடயங்கள் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை அனைத்தும் அரசியல் அமைப்பால் எமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், சபாநாயகரால் வழங்கப்பட்ட தீர்ப்பையும் நாடாளுமன்றத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தையும் கேள்விக்குட்படுத்துவதற்கு ஒப்பானதாகவுள்ளன. இந்தச் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை கேள்விக்குட்படுத்துவதானது சிறப்புரிமையை மீறும் செய லாகும். அத்துடன் இது திட்டமிடப் பட்டுச் செய்யப்பட்ட செயலாகும். காரணம் சபாநாயகரால் வழங்கப்பட்ட தீர்ப்பு மனுவில் வெளிப்படுத்தப்படவில்லை.
மனுதாரர் இந்தச் சபையில் உறுப்பினராக இருந்தவர் என்ற வகையில், அது தொடர்பில் அவர் நன்கு அறிந்திருக்க வேண்டும். அதை விடுத்து தமக்குத் தெரியாது எனக் கூறமுடியாது. மேலும், சபைக்கு அளிக்கப்பட்டுள்ள நீதிமன்ற அதிகாரங்கள் உள்ளிட்ட நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் குறித்த மனுவில் வெளிப்படுத்தப்படவில்லை. எனவே மனுதாரர்கள் இரு வரும் வேண்டுமென்றே சிறப்புரிமை மீறல் விடயத்தைக் கவனத்தில் எடுத்துள்ளனர். அது தொடர்பில் தீர்ப்பொன்றை வழங்க வேண்டும். அந்தத் தீர்ப்பை உயர் நீதிமன்றத்துக்கும் அறிவிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (ற-ஐ-4)

# மீண்டும் பெய்யும் கன மழையால் ஆறுகளின் நீர் மட்டங்கள் உயர்வு

கொழும்பு, மே 30
நாட்டில் மீண்டும் ஏற்பட்டுள்ள கன மழையால் களனி கங்கை உட்பட பல ஆறுகளின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் இதன் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளதாவது:-
தற்போது நாட்டின் பல பாகங்களிலும் மழை பெய்து வருகின்றது.
தவலம பிரதேசத்தில் நீர் மட்டம் உயர்ந்து காணப்பட்டது. களனி கங்கையினதும் நீர் மட் டம் சில பிரதேசங்களில் அதிகரித்து வருகின்றது. நீர்ப்பாசன திணைக்களத்தின் கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே இந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
இருப்பினும், வெள்ள இடர் குறித்து இதுவரை எந்த அறிவிப்பும் விடுக்கப்படவில்லை. வெள்ள நிலைமை குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறுவேண்டுகின்றோம். மலைப் பிரதேசங்களில் வாழும் மக்கள் மண்சரிவு குறித்து அவதானமாக இருக்க வேண்டும். இன்றும் பல மாவட்டங்களில் மழை பெய்யும் சாத்தியம் உள்ளது- என்றார். (ற-ஐ-5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
பேராதனைப்
பல்கலைக்கழகத்தில்
26.05.2016 வியாழக்கிழமை
நடைபெற்ற 78 ஆவது
பட்டமளிப்பு விழாவில்
M.Sc IN SCIENCE
EDUCATION
பட்டம் பெறும்

திரு. இராசரட்ணம் டினேஸ்
அவர்களை மென்மேலும் பட்டங்களைப் பெற்று
சிறப்புற வாழ்க என வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர் : மாமா, மாமி, மைத்துனர்கள் ,
திரு.திருமதி கணேசமூர்த்தி
கோட்டைக்காடு,மல்லாகம்

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கத் திட்டம்

கொழும்பு, மே 30
இலங்கை மின்சார சபையும், தனிநபர் மின் உற்பத்தியாளர்களும் இணைந்து 10 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்க தீர்மானித்துள்ளனஎனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.
மின்வலு மின்சக்தி அமைச்சர் றஞ்ஜித் சியம்பலாபிட்டியவின் பணிப்பின் பேரில், மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ள வீடுகளின் சேதங்கள் தொடர்பாக கணிப்பீடுகள் நடைபெற்று வருவதுடன், மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றது என்றும் அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இதற்கு இலங்கை தனியார் மின் உற்பத்தியாளர் நிறுவனம் 7 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.
வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவொரு சுமையும் வழங்காமல், பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்பட வேண்டுமெனவும், அமைச்சரின் வழிகாட்டலில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.
(ற-ஐ-4)

மனதார வாழ்த்துகின்றோம்

லண்டனில் விரிவுரையாளரானார்.
லண்டன் Roehampton
றொகம்ரன் பல்கலைக்கழகத்தில்
கணக்கியல்துறை
விரிவுரையாளராகப்
பதவியேற்றிருக்கும் யாழ்ப்பாணம்,
திருநெல்வேலி தெற்கு மாரியம்மன்
வீதியைச் சேர்ந்த
Dr. புவனேந்திரன்
பிரேம்காந்
அவர்களின் பணி சிறக்க மனமுவந்து
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
யாழ்.பல்கலைக்கழக
நண்பர்கள்
2003 / 2004

## அம்பாந்தோட்டை துறைமுகத்தால் கடந்த வருடம் ரூ.677 கோடி நட்டம்

கொழும்பு, மே 30
புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகம் 2015 ஆம் ஆண்டு 677 கோடி ரூபா நட்டத்தை எதிர்நோக்கியுள்ளது. இதனால் இலங்கை துறைமுக அதிகாரசபை இந்த வருடம் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது என கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.
இந்தத் துறைமுகத்தில் எண்ணெய் தாங்கித் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கும், துறைமுக நிர்வாகம் மற்றும் பராமரிப்புக்காக செலவிட்டதாலும் இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் கணக்காளர் நாயகம் மேலும் சுட்டிக்காட்டி யுள்ளார். (ற-ஐ-4)

## விபத்தை ஏற்படுத்தியவருக்கு அபராதம்

ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய வைகயில் ஓட்டோவைச் செலுத்தி விபத்தை ஏற்படுத்தியதாகக் குற்றஞ் சுமத்தப்பட்ட சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றால் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், விபத்தில் பாதிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளோட்டிக்கு 30 ஆயிரம் ரூபா நட்ட ஈடு வழங்குமாறும் உத்தர விடப்பட்டது.
கடந்த மார்ச் 16 ஆம் திகதி சாவகச்சேரி மடத்தடிப் பகுதியில் மோட்டார் சைக்கிளை மோதிக் காயத்தை ஏற்படுத்தியமை தொடர்பாக ஓட்டோ சாரதி மீது சாவகச் சேரிப் பொலிஸார் நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.
வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குறித்த அபராதம் விதிக்கப்பட்டது. (ற-ஐ-9)

நீங்கள்
நாடக
ஆர்வலரா
சிறந்த நாடகம் ஒன்றில் பங்குபெற விரும்புகிறீர்களா
ஈழத்தின் மூத்த நாடக ஆசிரியர் கலாநிதி
குழந்தை மா.சண்முகலிங்கத்தின் தமிழ்மொழி
பெயர்ப்பில் Caucasian Chalk Circle கோக்கேசியன் வெண்கட்டி வட்டம்
நாடகம் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படவுள்ளது.
இதனை தயாரிப்பதற்கு இலங்கையின் முன்னணி நாடகக்குழுவான
"மக்கள்களரி" கலை,கலாசார மன்றம் முன்வந்துள்ளது.
யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி
ரதிதரன் மற்றும் மக்கள்களரியின் கலை இயக்குனர்
பாராக்கிரம நிரியல்ல ஆகியோர் களப்பயிற்சிகளிலும்
நாடக நெறியாள்கையிலும் பங்குபெறுவர்.
இதில் நடிப்பதற்கான நடிகர், நடிகையர் மற்றும் இசைக் கலைஞர்
தேர்வுக்கான களப் பயிற்சி எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவிருக்கிறது
தேர்வுக் களப்பயிற்சில் பங்கு பற்ற உங்கள் பெயர் முகவரியை கீழ் உள்ள
ஈமெயில் முகவரிக்கு அல்லது தொலைபேசி இலக்கத்திற்கு குறும் தகவல் அனுப்பவும்
களப் பயிற்சியில்
பங்குபற்றுவோருக்கு
சான்றிதழ்
உண்டு
UNESCO
மின்னஞ்சல் jaffnatamildrama@gmail.com
0776416794

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கிரகார காப்புறுதியில் புதியநடைமுறைஅறிமுகம்

கொழும்பு,மே 30
அரச ஊழியர்கள் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அக்கிரகார காப்புறுதி முறைமையை புதிய முறையில் நடை முறைப்படுத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்ஜித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதம் முதலாம் திகதியில்இருந்துபுதியமுறைமை நடைமுறையில் இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அங்கத்துவப் பணத்தை மாதமொன்றில் 125 ரூபாவாகவோ, 300 ரூபாவாகவோ, 600 ரூபாவாகவோ என்றவாறு தாம் விரும்பியவாறு செலுத்த முடியும்.

இந்தக் காப்புறுதியின் பயன்கள் அங்கத்தவருக்குப் போன்றே, குடும்ப உறுப்பினர்களுக்கும் கிடைக்கின்றது என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியர்களும் மாதாந்தம் 200 ரூபாவைச் செலுத்தி இந்தக் காப்புறுதிப் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடிவதோடு, அதன் பயன்கள் அங்கத்தவருக்கு மாத்திரமே கிட்டுமென்றும் அமைச்சர் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளின் கட்டணங்கள், வைத்திய நிபுணர்களுக்கான கட்டணங்கள், வைத்திய நிபுணர்களின் சேவைகளுக்கான கட்டணங்கள், நோயாளியை கூட்டிச் செல்லும் கட்டணங்கள், ஆயுள்வேத வைத்தியசாலையொன்றில் தங்கியிருந்து சிகிச்சையைப் பெறும் கட்டணங்கள், மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளும் கட்டணங்கள், குழந்தைப் பிறப்புக்களின் போது செலவாகும் வைத்தியசாலைக் கட்டணங்கள் உள்ளிட்ட பயன்களை இதிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

மேலும், இந்த விதம் அக்கிரகார காப்புறுதியை மீளமைப்புச் செய்யும் செயற்பாட்டால், ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைப் பிரகடனத்தில் வழங்கப்பட்டிருந்த வாக்குறுதியொன்று நிறைவேற்றப்படு கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஜ-22)

# டாக்கா- கொழும்புக்கு இடையில் விமானசேவையை ஆரம்பிக்கவும்

## ஜனாதிபதி கோரிக்கை

கொழும்பு, மே 30
பங்களாதேஷ் தலைநகர் டாக்காவுக்கும், கொழும்புக்கும் இடையில் நேரடி விமான சேவையை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பங்களாதேஷ் பிரதமர்ஷேக்ஹசீனாவிடம்கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜி-7 மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜப்பான் சென்றிருந்த இரண்டு நாடுகளின் தலைவர்களும், ஜப்பானின் நகோயா நகரில் உள்ள ஹில்டன் விடுதியில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சுக்களின் போது, கொழும்பு-டாக்கா இடையே நேரடி விமான சேவையை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால விடுத்த கோரிக்கையைக் கவனத்தில் எடுத்து ஆராய்வதாக பங்களாதேஷ் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமைகள் குறித்தும் இவர்கள் பேச்சு நடத்தியுள்ளனர்.

மருந்துப் பொருள்கள் மற்றும் சணல் பொருள்களை பங்களாதேஷில் இருந்து இறக்குமதி செய்யுமாறு ஜனாதிபதியிடம், பங்களாதேஷ் பிரதமர் கோரிக்கை விடுத்தார்.

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது என்றும் இரு நாடுகளின் தலைவர்களும் இந்தச் சந்திப்பின் போது இணங்கியுள்ளனர்.

அதேவேளை, டிசெம்பர் மாதம் பங்களாதேஷுக்கான பயணத்தை மேற்கொள்வதில் ஜனாதிபதி மைத்திரிபால ஆர்வத்தை வெளிப்படுத்தினார் என்று பங்களாதேஷின் வெளிவிவகாரச் செயலர் சஹிதுல் ஹக் தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

# பௌத்த தர்மத்தை போதிக்கும் போதகர்களும் சிறைப் பிடிப்பு

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஆதங்கம்



கொழும்பு, மே 30
இந்த அரசு 48 பிக்குகளை சிறையில் அடைத்ததுடன்நின்றுவிடவில்லை. பௌத்த தர்மத்தை போதனை செய்யும் சிறந்த போதகர்களையும் சிறைப் பிடித்துள்ளனர் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மீரிகம சிறி முனின்னாராம விகாரையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசு எங்களைப் பழிவாங்க வேண்டுமானால் பழிவாங்கட்டும். அதேபோன்று மக்களுக்கும் உதவிகளை வழங்க வேண்டும். இங்கு பழிவாங்கல் மட்டுமே இடம்பெறுகின்றது.

இன்று அரச சார்பற்ற நிறுவனங்கள் எமது கலாசாரத்தை சீரழித்து வருகின்றன. உடவே தம்மாலோக தேரர் சிறந்த சமயப் போதகர். அவரையும் இந்த அரசு சிறையில் போட்டுள்ளது. இன்று பெரஹரா நடத்துவதற்கும் யானைகள் இல்லை.

அனைத்து யானைகளையும் நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றுள்ளது அரசு- என்று கூறியுள்ளார். (ற-ஜ-5)

## முதியோர் சங்க ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,மே 30
சங்கானை ஜே/179 கிராம அலுவலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கத்தின் ஆண்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, சங்கானை நிகரை ஞான வைரவர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் சி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் வலி.மேற்கு சமூக சேவை அலுவலர் வ.அருந்தவராசா, கிராம அலுவலர் எஸ். சிறீஸ்கந்தராசா, பொருளாதார அபிவிருத்தி அலுவலர் செல்வி க.அமலேஸ்வரி, சமுர்த்தி அலுவலர் திருமதி எஸ். மயூரதி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஜ-29)

# கிழக்கு முதலமைச்சருக்கான தடையில் மாற்றம் ஏதுமில்லை

## கடற்படைத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 30
கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட்டை, எந்தவொரு முகாம்களுக்குள்ளேயும், நுழைவதற்கு அனுமதிக்க மாட்டோம். இந்த விடயத்தில் மிகத் தெளிவாக இருக்கிறோம் என்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதேவேளை, கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராக ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, மூத்த படை அதிகாரிகள் பாதுகாப்புச் செயலருக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற-ஜ-5)

## பல்கலை விடுதிக்குள் புகுந்த சிப்பாய் மடக்கிப் பிடிப்பு

கொழும்பு, மே 30
பல்கலைக்கழக மாணவர் விடுதிக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் சிப்பாய் ஒருவரைப் பிடித்து மாணவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

ராஜரட்ட பல்கலைக்கழக மாணவர் விடுதிக்குள் புகுந்த போதே அவர் பிடிக்கப்பட்டு அநுராதபுரம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். 28 வயதுடைய குறித்தநபர் கடந்த வெள்ளிக்கிழமை விடுதிக்குள் புகுந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-4)

# ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

தேசிய அரசின் கொள்கையை மீறிய, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூன்று பேருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளது என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. தென் மத்திய மற்றும் மேல் மாகாண பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் எதிர்வரும் வாரம் ஒழுக்காற்று முறைக் குழுவின் முன் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர்கள் தொடர்ந்தும் தேசிய அரசின் கொள்கையை மீறி அறிக்கைகளை வெளியிட்டுள்ளதால், இவர்களுக்கு எதிரான விசாரணைகளைத் துரிதமாக மேற்கொண்டு கட்சியின் ஒழுங்கு விதிகளுக்கமைய தண்டனைகளை வழங்கப்படவுள்ளது என்று ஐ.தே.கட்சியின் மூத்த பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

22 ஆவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை
(குப்பிழான் கற்கரை கற்பக விநாயகர் துணை)



அமரர் திருமதி
ஞானலட்சுமி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(B.A(Hons), English Trd)
(ஆங்கில ஆசிரியர்)
தவப்பேறு
11.01.1960
சிவப்பேறு
03.06.1994
திதி: நவமி (30.05.2016)

பண்பிலே தெய்வமாய் பாசத்தின் உறைவிடமாய்
இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்கா அன்பே ஞானா
இனி எப்பிறப்பிற் சந்திப்போம்.

ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(கணவர்).
சகோதரி, மைத்துனர், மாமா, மாமி, மக்கள், மருமக்கள்,உறவினர்.

246,4/A. கோயில் வீதி,
நல்லூர்.

ஆறாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் சந்திரசேகரம் நடேசபிள்ளை
(ஓய்வுபெற்ற அதிபர் - யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்)



தோற்றம்
21.03.1937
மறைவு
06.06.2010

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
இன்பமொழி பேசி எல்லாம் எமக்களித்து
பண்புடன் வாழ வழிப்படுத்திய - நீங்கள்
ஆண்டவன் அடி சேர்ந்து ஆறாண்டுகள் ஆனதுவோ!
நெஞ்சிருக்கும் வரை நாம் மறவோம்
உங்கள் நினைவில் வாழ்கின்றோம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
(J.1713) (13.18)
நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்கு உங்கள் உரிமை

## தேர்தல் ஆணைக்குழு ஏற்பாட்டில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம்,மே 30
தேர்தல் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் வாக்களர்களாகப் பதிவு செய்வது தொடர்பான துண்டுப் பிரசுரங்களும், ஒலிபெருக்கி மூலமான அறிவித்தல்களும் நேற்று வழங்கப்பட்டன. "வாக்கு உங்கள் உரிமை" என்னும் தலைப்பிலான துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.
அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது–
தேர்தல் இடாப்புகளின் மீளாய்வு 2016 ஆம் ஆண்டுக்கான வாக்காளர்களைக் கணக்கெடுத்தல் சர்வஜன வாக்குரிமை குடியுரிமையொன்றாகும்.
அரசமைப்பால் அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ள மக்களுக்குள்ள இறைமையை உண்மையாகச் செயற்படுத்த முடிவது வாக்குரிமையூடாகவேயாகும். இதற்காக வாக்காளர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்பட்டிருத்தல் இன்றியமையாததாகும்.
நாட்டினுள் வதிவொன்றைக் கொண்டுள்ள அனைத்து வீடுகளுக்கும், வாக்காளர் கணக்கெடுப்புப் படிவங்களை 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் பகிர்ந்தளிப்பதற்காக கிராம அலுவலர்கள் அல்லது விசேட கணக்கெடுப்பு அலுவலர்கள் நடவடிக்கை எடுப்பர்.
உங்கள் வீட்டுக்கு தேருநர் கணக்கெடுப்புப் படிவமொன்று கிடைக்கப் பெறவில்லையெனின், உங்கள் பிரிவின் கிராம அலுவலரிடம் அல்லது குறித்த மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகத்தில் அது தொடர்பாக விசாரிப்பதற்குத் தயவு செய்து நடவடிக்கையெடுக்கவும்.
உங்கள் வீட்டுக்குக் கிடைக்கப் பெறுகின்ற வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் படிவம் கிடைக்கப் பெற்றவுடனேயே அதனை முறையாகப் பூரணப்படுத்துவதற்குத் தயவு செய்து நடவடிக்கையெடுக்கவும்.
உங்கள் வீட்டுக்கு வழங்கப்பட்டுள்ள தேருநர்களைக் கணக்கெடுக்கும் படிவத்தை, ஜூலை மாதம் 15 ஆம் திகதி வரையிலும் முறையாகப் பூர்த்தி செய்து தேருநர்களைக் கணக்கெடுக்கும் அலுவலர்களிடம் கையளிக்க முடியவில்லையெனில், அதனை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் கையளிக்கவும்.
வாக்காளர் இடாப்பில் பெயரை உட்சேர்த்தலும், வாக்களித்தலும் மக்களுக்குள்ள உரிமையொன்றாகும். அதேபோன்று பொறுப்பொன்றாகும். – என்றுள்ளது.
இதேவேளை, பல்கலைக்கழக அனுமதி, பாடசாலை சேர்ப்பு, வெளிநாட்டுப் பயணம் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்கும் வாக்காளர் இடாப்பில் பதிவு அவசியம் என்பது குறித்த விழிப்புணர்வூட்டல் ஒலிபெருக்கி மூலம் வழங்கப்பட்டது.
(ஐ-9)

### குறுங்கால கற்கைகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியில் ஆறுமாத கால குறுங்கால கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அதன் பணிப்பாளர்தெரிவித்துள்ளார்.
தகவல்தொடர்பாடல்தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் கற்கை நெறி, கணினி வன் பொருள் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் கற்கைநெறி, உதவிக் கணிய அளவை யியலாளருக்கான தேசிய சான்றிதழ் கற்கை நெறி ஆகியவற்றுக்கு விண்ணப் பிக்க முடியும்.
மேலும் வேலை தேடுவோருக்கான ஆங்கிலக் கற்கை நெறியும் மற்றும் தரம் 10 சித்தியுடன் விசேடக் கொடுப்பனவுகளுடன் மரவேலை தொழில்நுட்பம், கட்டடத் தொழில்நுட்பம், வெல்டிங் தொழில்நுட்பம் போன்ற கற்கைநெறிகளும் கற்பிக் கப்படவுள்ளன.
இந்தக் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-ரி)

### ஒன்றிய ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 30
யாழ்ப்பாண மாவட்ட அழகுக் கலை நிலைய உரிமையாளர் ஒன்றியத்தின் ஆரம்ப நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழ இந்து நாகரிகத் துறை சிரேஷ்;ட விரிவுரையாளர் திருமதி.ப.விக்னேஸ்வரியும், சிறப்பு விருந்தினராக யாழ்.தொழில் திணைக்கள மாவட்ட அலுவலர் திருமதி பொனின்பெனராஜூம்கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஐ-ரி)

# பாடசாலை மாணவருக்கு விசேட சிகிச்சைப்பிரிவுகள்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 30
அனைத்து வைத்தியசாலைகளிலும் பாடசாலை மாணவர்களுக்கென விசேட சிகிச்சைப் பிரிவு பிரதி சனிக்கிழமைகளில் காலை வேளையிலும் , கிழமை நாள்களில் பிற்பகல் வேளையிலும் நடத்தப்படல் வேண்டுமெனவும் வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளுக்கு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி பி.ஜி.மகிபால பொதுச் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.
அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–
பாடசாலைச் சுகாதாரப் பரிந்துரை அட்டை கொண்டு வரும் மாணவர்களை வெளிநோயாளர் பிரிவில் அல்லது வரிசையில் நிற்பதைத் தவிர்த்து நேரடியாக நோயுடன் தொடர்புடைய சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பி வைக்கவும்.
அனைத்து வைத்தியசாலைகளும் தமது வைத்திய அதிகாரிகளை வைத்திய பரிசோதனைகளில் பங்கேற்பதற்கு அனுமதி அளிக்க வேண்டும். இந்த ஏற்பாடானது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகள் தாய் சேய் சுகாதாரம் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்
சிகிச்சை அளிக்கக் கூடிய குறைபாடுகளுக்கு உரிய சிகிச்சைகள் மாணவர்களுக்குச் சுகாதார மருத்துவ பரிசோதனையின் போதே வழங்கப்படல் வேண்டும். மேலதிக சிகிச்சைகள் தேவைப்படுவோர் அருகிலுள்ள விசேட வைத்திய அதிகாரிகள் மருத்துவ நிலையங்களுக்குச் செல்லல், இருதய நோய்கள் சம்பந்தமான குணங் குறிகள் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்ட அல்லது சந்தேகிக்கப்படுகின்ற மாணவர்கள் விசேட சிகிச்சைக்காகப் பரிந்துரை செய்யப்படுவர்.
நடத்தைப் பிறழ்வு காணப்படுகின்ற பாடசாலை மாணவர்கள் மனநோய் சம்பந்தமான சிகிச்சைகளுக்குப் பரிந்துரை செய்யப்படுவர்.
கடுமையான குருதிச் சோகை இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்ற மாணவர்கள் விசேட மருத்துவ சேவைக்காகப் பரிந்துரை செய்யப்படல் வேண்டும்.
காது மூக்கு தொண்டை அல்லது கண் சம்பந்தமான பிரச்சினைகள் உள்ள மாணவர்கள் அந்தந்தச் சிகிச்சை நிலையங்களுக்குப் பரிந்துரை செய்யப்படுவர்
தேக ஆரோக்கியத்தை ஏற்படுத்துகின்ற விளையாட்டுக்களில் பங்குபற்றும் மாணவர்களை அருகிலுள்ள விளையாட்டு மருத்துவத் துறை அலகுக்குச் செல்லுமாறு பரிந்துரை செய்ய வேண்டும்.– என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-9)

# வலி.மேற்கில் உள்ள 290 வீதிகளைப் புனரமைக்க ரூ. 1200 மில். தேவை

யாழ்ப்பாணம்,மே 30
வலிகாமம் மேற்கில் 290க்கும் மேற்பட்ட வீதிகள் மிக மோசமாகப் பாதிப்படைந்து, போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளன எனப் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றைப் புனரமைப் பதற்கு ஆயிரத்து 200 மில்லியன் ரூபாவை மத்திய அரசிடம் இருந்து எதிர்பார்த்திருக்கிறோம் என நாடாளுமன்ற உறுப்பினரும், வலிமேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
வலி.மேற்குப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வலி.மேற்குப் பிரதேச செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது.
இதன் போது, அபிவிருத்தித் திட்டங்களை சபையின் அங்கீகரிப்புக்காக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ.சிவகுமார் ஒவ்வொன்றாக முன்வைத்து சபையின் அனுமதியைப் பெற்றார்.
இதில் முதற்கட்டமாக சங்கானை நகரத் திட்டமிடலின் கீழ் சங்கானை நவீன மரக்கறிச்சந்தைக்கும் கடைத்தொகுதிகளுக்குமான 25 மில்லியன் ரூபா முன்மொழிவு மக்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
அதனைத் தொடர்ந்து வேள்ட்விசன் நிறுவன நிதிப்பங்களிப்பில், பொன்னாலை மேற்கில் 8.9 மில்லியன் ரூபா செலவில் குடிதண்ணீர்த் திட்டத்தை முன்னெடுப்பதற்கான அங்கீகாரம் பெற்றதுடன், இருவாரத்தில் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என வேள்ட்விசன் நிறுவன முகாமையாளர் ஆதித்தன் தெரிவித்தார்.
இதேவேளை சுகாதாரம், குடிதண்ணீர் மற்றும் கட்டட விண்ணப்பம் தொடர்பில் முறையான சுகாதார நடவடிக்கைகளைப் பேண வலி.மேற்குப்பிரதேச சபைக்கு பொதுச் சுகாதாரப்பரிசோதகர் பதவி ஆளணி ஒன்றை வழங்கி உதவுமாறு பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.குணவதி இணைப்புக் குழுத் தலைவரைக் கோரினார்.
(ஐ-50)

### புகைத்தல் எதிர்ப்புதின கொடி வார நிகழ்வு

வவுனியா,மே 30
புகைத்தல் எதிர்ப்பு தின கொடி வார நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. செட்டிகுளம் பிரதேச செயலாளர் பி.சி.ஆர். பபாபஜோன் நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ற-ஐ-422)

### கலாசாரப் பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே 30
யாழ்ப்பாண மாவட்டக் கலாசாரப் பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ் மாவட்டச் செலயக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.
யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் கலாசாரப் பேரவையின் புதிய நிர்வாகத் தெரிவு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளன.
அனைத்து உறுப்பினர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட கலாசாரப் பேரவையின் செயலாளர் இசைக்கலைமணி ந.செல்வச்சந்திரன் அறிவித்துள்ளார். (ற-ஐ)

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 30
வடமராட்சி வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த நிலையில், தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று பருத்தித்துறைப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.
(ஐ-ரி)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 30
அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் விசேட கலந்துரையாடல் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றப் பொது நூலக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.
வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கக்கிளை இணைப்பாளர் சோமு தேவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் மு.மகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஆ.புண்ணியமூர்த்தி, வடக்கு கிழக்கு, பிரதித் தலைவர் க.அன்ரனி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.
(ற-ஐ-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்திலிருந்து சிறந்த படைப்பாளிகள் வேண்டும்

## தென்னிந்திய நடிகர் நாசர் முல்லைத்தீவில் தெரிவிப்பு



முல்லைத்தீவு, மே 30

வலிகளிலிருந்து தான், சிறந்த படைப்பாளி வர முடியும். ஐரோப்பாவில் இரண்டாம் உலகப் போரின் பின்னர் அவ்வாறு நடந்தது. எதிர்காலத்தில் ஈழத்திலிருந்து சிறந்த படைப்பாளிகள் வர வேண்டும். -இவ்வாறு தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவரும், நடிகருமான நாசர் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற முத்தமிழ்க் கலை விழாவிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நீங்கள் சந்தித்த வாழ்வை நான் சந்தித்தது இல்லை. நீங்கள் கண்ட கனவை நான் கண்டதில்லை. உங்கள் ஏக்கம் என்னுடைய ஏக்கம். இத்தனைக்குப் பிறகும் நீங்கள் சிரித்த முகத்துடன் இங்கு வருகை தந்திருக்கிறீர்கள். அதற்காக நான் உங்களுக்குத் தலை தாழ்த்தி மரியாதை செலுத்துகிறேன்.

நான் இங்கே வந்தது தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவராக அல்ல. நடிகராகவும் அல்ல. உலகம் முழுவதும் பரவிக் கிடக்கும் எட்டுக் கோடி தமிழர்களுக்கும் மேலாக ஒரு கடைநிலைத் தமிழனாகவே நான் வந்திருக்கிறேன்.

இந்த மண் ஏன் சிவந்திருக்கின்றது என்ற காரணம் எனக்குத் தெரியும். இந்த மண்ணில் கால் பதிக்கும் போதே இந்தக் கால்கள் தன்னுடைய தன்மையிலிருந்து விலகி கனத்து தோள்களை அழுத்துகின்ற போது, அதற்கான காரணம் எனக்குத் தெரியும்.

காலால் நடக்கலாம் என்றால் அங்கே உரசுகின்ற காற்று ஓங்காரம் இடுகிறது. ஓலம் இடுகிறது. விசும்புகிறது இந்த மண். பல கனவுகளுக்காக பல பொறுமைகளுக்காக இந்த மண் காத்து நிற்கின்றது.

ஈழப் பிரச்சினை குறித்து, தமிழ் நாட்டில் பல கருத்துக்கள் உண்டு. பல கோட்பாடுகள் உண்டு. பல விவாதங்கள் உண்டு. எனது ஒரே கோட்பாடு கலைஞர்களை ஒன்று சேர்ப்பது. அவர்களை மேம்படுத்துவது. உண்மையில் நீங்கள் வரலாறுகளைத் திரும்பிப் பார்ப்பீர்களானால், வாள்களுக்கு இணையாக கலைகளும், கலாசாரமும் இருந்திருக்கின்றது.

ரஷ்ய புரட்சி மாபெரும் வெற்றி அடைந்ததற்கு காரணம் கலை. இந்தக் கலையை ஆயுதமாக எடுத்துக் கொள்வதற்கு முதலாக அதைச் செம்மைபடுத்த வேண்டும். அது முதற் கடமை.

தோழர்களே, நான் வீதியின் ஓரத்தில் உட்கார்ந்து இருந்து கொண்டிருந்த வேளை, என் இனக் கலைஞர்கள் நடத்திக் கொண்டிருக்கின்ற ஊர்வலத்தில் என் நெஞ்சு விம்மி புடைக்கின்றது. அந்தக் குதிரையைப் பார்க்கின்ற போது எனக்கு அழுகை வருகின்றது. அந்த சிறு குழந்தைகள் நடந்து போகின்ற போது அந்த காவடியை வைத்துக் கொண்டு போகின்ற போது எனக்கு அழுகை வருகின்றது.

நாம் எல்லோரும் இன்று ஒன்று சேர்ந்திருக்கின்றோம். என்னுடைய கடமை - என்னுடைய கனவு - என்னுடைய கோட்பாடு கலைகள் ஒரு சமூகத்துக்கு அடையாளம். எம்முடைய எல்லாக் கலைகளும் சடங்கு சார்ந்தவை. கடவுளை வழிபடுகின்ற ஒரு சடங்காகத்தான் எல்லாக் கலைகளும் இருந்திருக்கின்றன. அதைத் தனியாகப் பிரித்துக் கலையாகப் பார்பது இல்லை. இப்பொழுது அதற்கான சரியான தருணம் வந்திருக்கின்றது.

ஏன் கலை முக்கியம். என்னுடைய அடையாளம் என்ன? தமிழ்மொழி பேசுவதால் மட்டுமே நான் தமிழனாகி விடுவேனா? எந்த மொழியை வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளாம். தமிழ் நாட்டிலே கூட அந்த மண்சார்ந்த கலைகள் நலிவடைந்து கொண்டே தான் இருக்கின்றன. நலிந்த கலைகள் என்று தான் இன்றும் அவைபட்டியல் இடப்படுகின்றன.

தமிழ்த் திரைப்படங்கள் பற்றிப் பேசும் போது ஒரு பெரும் விவாதம் வரும். ஏன் தமிழ் நாட்டிலே மட்டும் திரைப்படங்கள் உருவாக வேண்டுமா? தமிழர் வாழும் பிற நாடுகளில் ஏன் உருவாகுவதில்லை. உண்மையாகவே தமிழ்ச் சமூகத்தில் மிகச் சிறந்த திரைப்படப் படைப்பாளி வரவேண்டும் என்றால் முதற் படைப்பாளி ஈழத்தில் இருந்து தான் வர வேண்டும். நான் இதை அடித்துச் சொல்லுவேன்.

ஒரு படைப்பாளிக்கு மிக அவசியம் வலி. ஐரோப்பாவில் இது தான் நடந்தது. ஐரோப்பாவிலே மிகத் தாழ்ந்த நிலையிலேயே இருந்த கலைகள் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் மிக வீரியமாக வந்ததற்கு இதுவே காரணம். ஆனால் நீங்கள் எப்போது திரைப்படங்கள் எடுக்கப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

இன்று இந்த அண்ணாவிமார்களைப் பற்றி என்னிடம் சொன்னார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு தொழில் இருக்கின்றது. போரால் தொழில் நசிந்து போனது. நிலங்கள் பிடுங்கப் பட்டன. பொருள்கள் திருடப் பட்டன. ஆனால் இந்தக் கலைஞர்களின் உடலும், நரம்பும், இரத்தமும், நாளமும் ஆடத் துடிக்கின்றன. அவற்றைக் கட்டுப் படுத்தி வைத்திருக்கின்றார்கள்.

இந்தக் கலைஞர்கள் உலக அரங்கில் நாடகமாட வேண்டும். அதுதான் இன்றைய தீர்மானம். இன்றைய தீர்மானம், வந்து பேசிவிட்டு வாழ்த்திவிட்டு போவதல்ல. இந்தத் தீர்மானத்தை நடை முறைப்படுத்த வேண்டும். அதற்குச் சில விடயங்கள் செய்தாக வேண்டும்.

என்னுடைய தீர்மானமாக இதே கலைஞர்கள் அடுத்த ஆண்டு ஒரு விழா எடுப்பார்கள். அது உலகத் தரத்தினதாக இருக்கும். இங்கு நடந்த பின் உலக அரங்குக்குச் செல்ல வேண்டும். இது என்னுடைய வழி மொழிதல். நாமே பார்த்து ரசித்துக் கொண்டிருப்பது அல்ல கலை. என் கலை பிறருக்குத் தெரிய வேண்டும். பரத நாட்டியம் மட்டுமே கலை அல்ல. நாம் எல்லாக் கலையையும் சேர்த்து கூட்டுக் கலையாக ஒரு நாடகம் செய்வோம். அது உலகத் தரமாக இருக்க வேண்டும். உங்களுடைய ஒத்துழைப்பு வேண்டும் - என்றார். (ற-ஐ-5-ரி7)

---

### பாம்பினால் கடியுண்டார் மூதாட்டி

சாவகச்சேரி,மே 30

காலையில் தேநீர் தயாரிப்பதற்காக விறகு எடுத்த மூதாட்டி, விறகினுள் மறைந்திருந்த விசப் பாம்பால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் எழுதுமட்டுவாழ் தெற்கில் நடந்துள்ளது. பாம்பால் கடியுண்ட அதே இடத்தைச் சேர்ந்த 73 வயதுடைய மூதாட்டி சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-ஐ-9)

### அலங்கார உற்சவம்

வட்டுக்கோட்டை, மே 30

வட்டுநகர் காக்கையம்பதி காளி கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் கிரியைகள் முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்று, இரவு 7 மணிக்கு விடே பூசையும், இரவு 8 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் இடம்பெறும் என ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீவெ.கஜராஜசர்மா தெரிவித்துள்ளார். (ற-ஐ)

---

# கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு நிரந்தர அதிபர் இதுவரை இல்லை

## விரைவில் நியமிக்குமாறு கோரிக்கை

அச்சுவேலி, மே 30

கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு இரண்டு வருடங்களாக நிரந்தர அதிபர் நியமிக்கப்படவில்லை. இதனால் கலாசாலையின் வளர்ச்சி பாதிப்புக்கு உள்ளாவதோடு, ஆசிரியப் பயிற்சிபெறும் ஆசிரிய மாணவர்களின் வசதிகளும் பாதிப்புக்கு உள்ளாகின்றது என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபராகக் கடமையாற்றித் தனது 60 ஆவது வயதில் 2014 ஆம் ஆண்டு சேவையில் இருந்து ஓய்வு பெற்ற கே.கணபதிப் பிள்ளைக்குப் பின்னர் நிரந்தர அதிபர் நியமிக்கப்படவில்லை.

நிரந்தர அதிபரை நியமிக்குமாறு கல்வியியலாளர்களும், ஆசிரிய கலாசாலைச் சமூகமும் கல்வி அமைச்சைக் கோரிய போதிலும், இதுவரையும் நிரந்தர அதிபர் நியமிக்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் செயற்படும் நான்கு தமிழ்மொழி மூல ஆசிரிய கலாசாலையிலேயே ஆக்கக்கூடிய எண்ணிக்கையான ஆசிரியர்கள் கோப்பாயில் பயிற்சி பெறுகின்றனர் 2015-2016 கல்வியாண்டில் 650 ஆசிரியர் வரையில் பயிற்சி பெற்றனர். 2016-2017 கல்வி ஆண்டில் 300 ஆசிரியர்கள் பயிற்சி பெறவுள்ளனர்.

> ஆசிரியர் கலாசாலையில் 300க்கு மேற்பட்ட மாணவர்கள் தங்கி இருந்து கல்வி பயில்வதற்கு விடுதி வசதி உள்ள போதிலும், விடுதிக் கட்டடம் திருத்தி அமைக்கப் படாமலும் சீர் செய்யப்படாமலும் உள்ளது.

இந்த நிலையில் ஆசிரியர் கலாசாலையில் 300க்கு மேற்பட்ட மாணவர்கள் தங்கி இருந்து கல்வி பயில்வதற்கு விடுதி வசதி உள்ள போதிலும், விடுதிக் கட்டடம் திருத்தி அமைக்கப்படாமலும் சீர் செய்யப்படாமலும் உள்ளது. இங்கே பயிற்சியைப் பெறவரும் வெளிமாவட்ட ஆசிரியர்கள் தனியார் இல்லங்களிலும், பொருத்தமில்லாத இடங்களிலும் தங்கி இருந்தே பயிற்சியைத் தொடர்கின்றனர். இதனால் இவர்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு உள்ளாவதுடன், தாம் பெற்றுக்கொள்ளும் ஊக்குவிப்புக் கொடுப்பனவில் கணிசமான அளவு தொகையைத் தங்குமிட வாடகையாகச் செலுத்திப் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகின்றனர்.

நிரந்தர அதிபர் நியமிக்கப்படுவது கலாசாலையின் வளர்ச்சிக்கும், பயிற்சிபெறும் ஆசிரிய மாணவர்களின் வசதிக்கும் ஏற்புடையதாக இருக்கும் என்பதால் கலாசாலைக்கு நிரந்தர அதிபரை நியமிக்குமாறு கல்வி அமைச்சிடம் மீளவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஐ-11)

---

### விசேட பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே 30

வலி.வடக்கு - தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட புதிய பிரதேச கலாசார சபை அமைத்தல் மற்றும் புதிய நிர்வாகத் தெரிவு தொடர்பான விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலாளர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்துக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்துக் கலைஞர்களையும்தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ற-ஐ)

### அடிக்கல் நடல்

பளை, மே 30

போர் வேளையில் சேதமடைந்த பளை வேம்பொடு கேணி வீரபத்திரர் ஆலயப் புனரமைப்புக்கான அடிக்கல் நடும் நிகழ்வு எதிர்வரும் ஒன்பதாம் திகதி வியாழக்கிழமை காலை 6.19 மணிக்கு நடைபெறவுள்ளது. (ற-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைக்கல்லாறு பாலப் புனரமைப்பு இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்படும்

## கிளிநொச்சி மாவட்டப் பிரதம பொறியியலாளர் தெரிவிப்பு





கிளிநொச்சி, மே 30
மக்களுடைய போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படும் கிளிநொச்சி மண்டைக்கல்லாறுப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று கிளிநொச்சி மாவட்டப் பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மண்டைக் கல்லாறுப்பாலம் போக்குவரத்துச் செய்யமுடியாத வகையில் மிகவும் சேதமுற்றுக் காணப்படுகின்றது என்றும், நீண்டகாலமாக உள்ள இந்தப் பிரச்சினையைச் சீர் செய்து தர வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் பெய்த மழையால் கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட பல பாலங்களை மேவி வெள்ளம் பாய்ந்து ஓடியது. புனரமைக்கப்பட்டிருந்த புதிய பாலங்கள் பலவும் அதனால் சேதங்களுக்கு உள்ளாகியிருந்தன.

இதே போன்று எந்த விதமான அபிவிருத்தி திட்டங்களுக்கும் உட்படாத கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஏ 32 மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள மண்டைக்கல்லாறுப் பாலம் மற்றும் பாலியாறு பாலத்தை மேவி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அதனால் அப்பாலத்தினூடாகப் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகியிருந்தனர். தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக பாலத்தினூடான போக்கு வரத்துக்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுகின்றன. கடற்படையினருடைய உதவிகளின் மூலமாகவே படகின் மூலம் பாலத்தைக் கடந்து மறுகரையை அடைய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

வெள்ளம் வழிந்தோடிய பின்னரும் கூட இப்போது பாலம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குறித்த பாலங்களில் பெருமளவான குழிகளும் ஏற்பட்டுள்ளன. பாலத்தைக் கடக்கும் போது, சில வேளைகளில் வீதியை விட்டு விலகி பள்ளத்தினுள் விழ வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்தப் பாலத்தைப் புனரமைப்புச் செய்து தருமாறு பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிய படுத்தியும், எந்த பயனும் கிடைக்கவில்லை.

ஏ32 மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதியின் அபிவிருத்தி பணிகள் முடிவுற்று ஒரு சில வருடங்கள் முடிவுறும் நிலையில் இந்த வீதியில் உள்ள குறித்த பாலங்கள் இன்று வரைக்கும் புனரமைக்கப்படாமைக்கான காரணங்கள் என்ன எனவும் மக்கள் கேள்வி எழுப்பியதோடு, போக்கு வரத்துச் செய்வதற்கு மிகவும் பாரதூரமாக உள்ள மண்டைக்கல்லாறு பாலத்தை உடனடியாக திருத்தி தரவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் கேட்டபோதே பிரதம பொறியியலாளர் மேற்கண்ட்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 8 பாலங்களுடைய புனரமைப்புக் காக 400 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலங்களினுடைய புனரமைப்பு வேலைகளை கொழும்புப் பொறியியலாளர்களே மேற்கொள்ளவுள்ளனர்.

அந்த வகையில் மக்களுடைய போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படும் இந்தப் பாலத்தின் புனரமைப்பு பணிகள் இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விவரங்கள் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கும்போதே தெரியவரும் -என்றார். (ஐ-21,415,ரி3)

# நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட அமைப்புக்களுக்கு திட்டங்களை நிறைவு செய்யக் கால அவகாசம்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு



மன்னார், மே 30
இதுவரை காலமும் எந்தவிதமான நிதிகளும் ஒதுக்கப்படாத அமைப்புக்களுக்கு, அடுத்த ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் இன மத பேதமின்றி நிதி ஒதுக்கப்பட்டு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் - இவ்வாறு வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.

ஏற்கனவே நிதி ஒதுக்கீட்டில் உள்ள சகல அமைப்புக்களையும் இரண்டு மாதங்களுக்குள் சகல திட்டங்களையும் நிறைவு செய்யுமாறும் அவர் இதன் போது கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சரின், 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி நன்கொடை நிதியின் கீழ் வழங்கவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாக, கடந்த வெள்ளிக்கிழமை மன்னாரில் உள்ள அமைச்சரின் உப அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பாடசாலைகளின் பௌதிக வள அபிவிருத்திகளுக்கும், கிராம மட்ட அமைப்புக்களான மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் அபிவிருத்திக்கும், மின்சார இணைப்புக்கான உதவிகளுக்கும், சுயதொழில் வாய்ப்புக்கான உதவிகளுக்கும், குளப்புனரமைப்புக்கும், மீன்பிடி சங்கங்களின் பௌதிக வள அபிவிருத்திகளுக்கும், சமய பேதங்கள் இன்றி மன் னார் மறை மாவட்ட ரோமன் கத்தோலிக்க மதத் தலங்களுக்கும், மன்னார் மாவட்ட போதகர் ஐக்கியத்துக்கும், மன்னார் மாவட்ட மெதடிஸ்த தேவாலயங்களுக்கும், இந்து ஆலயங்களுக்கும், முஸ்லிம் பள்ளி வாசல்களுக்கும் அவற்றின் பௌதிக வள மேம்பாட்டுக்கும், கணினி மற்றும் பல்லூடக சாதனங்களுக்கும் இன்னும் பல வேலைத் திட்டங்களுக்குமென வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சால் பல மில்லியன் ரூபா நிதிஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்களும் இடம்பெற்றுள்ளன.

மேற்படி திட்டங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட அமைப்புக்கள் உடனடியாகக் கால தாமதமின்றித் தமது ஒதுக்கீடுகளுக்கான சகல வேலைத்திட்டங்களையும் நிறைவு செய்து பயனடைய வேண்டும்.

அதே வேளை அமைச்சின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களும் மேற்படி வேலைத் திட்டங்களை விரைவாக இரண்டு மாதங்களுக்கள் நிறைவு செய்ய வேண்டும். இந்தத் திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்தும் போது, தான் நிச்சயமாக இன்னும் பல நிதி மூலகங்களைத் தெரிவு செய்து, இன்னும் பல அபிவிருத்தித் திட்டங்களை நடை முறைப்படுத்தி எமது மாகாணத்தை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்ல முடியும்.

இதே வேளை கடந்த கால ஒதுக்கீடுகளில் நிதி ஒதுக்கப்படாத, ஏனைய தேவைகள் உள்ள அமைப்புக்களுக்கும் அடுத்த ஆண்டுகளின் நிதி ஒதுக்கீட்டில் நிதி ஒதுக்கப்பட்டு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இதற்காக அனைத்து மக்களும் சகல பேதங்களையும் மறந்து ஒற்றுமைப்பட்டு எமது மாகாணத்தின் அபிவிருத்தியில் கரிசனையோடு நடக்க வேண்டும். -என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், அமைச்சின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஈ.சுரேந்திரநாதன், அமைச்சின் பிரதம கணக்காளர் தர்மாம்பிகை அனந்தகிருஷ்ணன், வீதி அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் டி.சிவராஜலிங்கம், வீதி அபிவிருத்தித் திணைக்கள மன்னார் வவுனியா பிரதம பொறியியலாளர் எஸ்.ரகுநாதன், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் சுகந்தி செபஸ்டியன், அமைச்சின் உத்தியோகத்தர்கள், மன்னார் மாவட்டப் பாடசாலைகளின் அதிபர்கள், கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் அதிபர்கள், மீன்பிடிச் சங்கங்களின் பிரதிநிதிகள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், ரோமன் கத்தோலிக்க தேவாலயங்களின் பிரதிநிதிகள். கிறிஸ்தவ தேவாலயப் பிரதிநிதிகள், இந்து ஆலயங்களின் பிரதிநிதிகள், பள்ளிவாசல் தலைவர்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ற-ஐ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் தோன்றிய காரணத்துக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை

## ஜனாதிபதி மைத்திரி ஜப்பானில் தெரிவிப்பு

கொழும்பு, மே 30
தமிழீழ விடுதலைப் புலிகளை போரில் நாம் தோற்கடித்திருக்கலாம். ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் தோன்றக் காரணமான பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படாமல் உள்ளது.- இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் வசிக்கும் இலங்கையர்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழர்களின் நிலத்தை திருப்பிக் கொடுப்பதாக எங்கள் மீது சிலர் குற்றஞ் சாட்டுகின்றனர். நான் உங்களிடம் ஒன்று கேட்கிறேன். உங்களுக்குச் சொந்தமான நிலத்தை இராணுவம் கைப்பற்றி வைத்திருந்தால், உங்களது நிலை எவ்வாறு இருக்கும் ?

தமது நிலத்தை மீளப் பெறுவதற்காக தமிழர்கள் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் அல்ல, 27 ஆண்டுகளாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளை போரில் நாம் தோற்கடித்திருக்கலாம். ஆனால், விடுதலைப் புலிகள் தோன்றக் காரணமான பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படாமல் உள்ளது.

மீண்டும் தனிநாடு கோரி போராட்டம் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்யும் நடவடிக்கையில் எமது அரசு ஈடுபட்டுள்ளது.



தேசப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கை அரசு எடுத்து வருகிறது. நாட்டில் தற்போது எங்கிருந்தும் அச்சுறுத்தல் கிடையாது.

எனது அரசு பதவியேற்ற காலம் முதல், நட்பு நாடுகள் அனைத்தும் சிறப்பான ஒத்துழைப்பை அளித்து வருகின்றன.

இலங்கையை ஓரம் கட்டி வந்த நாடுகள் அனைத்தும், நட்புக் கரத்துடன் தற்போது வரவேற்கின்றன.

இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், பாகிஸ்தான் ஆகிய நாடுகள், இலங்கைக்குப் பாதுகாப்பு தொடர்பான பயிற்சியை வழங்கி வருகின்றன. இந்த நிலைமை இப்போது முன்னேற்றமடைந்துள்ள - என்றார். (ற-ஜ-5)

## உறவுகள் புதையுண்ட மண்ணில் மீண்டும் சென்று வசிக்க முடியாது

### கலுபஹன தோட்ட மக்கள் தெரிவிப்பு

கொழும்பு, மே 30
மண்சரிவு அபாயம் நிலவும் கலுபஹன தோட்டத்தில், உறவுகள் புதையுண்ட மண்ணில் மீண்டும் சென்று வசிக்க முடியாது என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

கேகாலை புலத்கொஹெபிட்டிய கலுபஹன தோட்டத்தில் மண்சரிவு ஏற்படுத்திய தாக்கத்திலிருந்து தாம் இன்னும் மீளவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைதி காக்கும் மலைத் தொடர்கள் எப்போதேனும் சீற்றமடையக் கூடும் என்பதை முன்னரே தாம் உணர்ந்திருந்தோம். பிஞ்சுப் பாலகர்கள் ஓடி விளையாடிய கலுபஹன தோட்டம், இன்று மயான பூமியாக காட்சியளிக்கிறது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கலுபஹன மண்சரிவையடுத்து அதனை அண்மித்த எதுராபொல, உருமிவல தோட்ட மக்களும் இடம்பெயர்ந்துள்ளனர். இடம்பெயர்ந்திருந்த 400க்கும் மேற்பட்டவர்களில் பலர் உயிருக்கு உத்தரவாதமற்ற பகுதிகளுக்கே மீண்டும் சென் றுள்ளனர். வீடுகளை முற்றாகப் பறிகொடுத்த 5 குடும்பங்கள் அடங்கலாக சுமார் 200 பேர் யக்கல்ல சீலானந்த மகா வித்தியாலயத்தில் தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் கேகாலை மாவட்ட செயலாளர் அபேவிக்ரம வனசூரியவிடம் தொடர்பு கொண்ட போது; 20 பாடசாலைகளில் மண்சரிவு அபாயம் காரணமாக இடம் பெயர்ந்தவர்கள் தங்கியுள்ளனர். குறித்த பாடசாலைகளின் கல்வி செயற்பாடுகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படமாட்டாது எனவும், ஆரம்பிக்கப்படும் திகதி இதுவரை தீர்மானிக்கப்படவில்லை எனவும், மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

அதேவேளை, அனைத்தையும் இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ள தமக்குப் பாதுகாப்பான இருப்பிடங்கள் விரைவில் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஜ-4)

## மஸ்கெலியாவில் மண்சரிவு 200 பேர் இடம் பெயர்வு

கொழும்பு, மே 30
மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காட்மோர் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் ஏற்பட்ட மண்சரிவால் 200 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

காட்மோர் தோட்டம் புரோக்மோர் பிரிவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

குடியிருப்பு பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதுடன், குடியிருப்பு சுவர்களிலும் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

மண்சரிவு ஏற்பட்டுள்ள பகுதியிலுள்ள 41 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேரை உடனடியாக வெளியேற்றி தோட்ட ஆலயம் மற்றும் சிறுவர் நிலையத்திலும் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-5)

## இடரால் வெளியேற்றப்பட்டவர்களுக்கு காணிகள் வழங்குவதற்கு நடவடிக்கை

கொழும்பு, மே 30
மண்சரிவு மற்றும் மண்சரிவு எச்சரிக்கையால் வெளியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு ஆயிரத்து 700 ஏக்கர் காணியை பெற்றுக் கொடுப்பதற்கு, ஆரம்பக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று காணி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் 49 ஆயிரம் லட்சம் ரூபா நிதியும் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு பகிரப்படவுள்ளது என்றும் காணி இராஜாங்க அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பாதிக்கப்பட்டவர்களுக்காக அதிகபட்சமாக 20 பேர்ச்சஸ்களுக்கு உட்பட்டதாக காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. பகிர்ந்தளிக்கப்படவுள்ள காணிகள் தொடர்பான தகவல்களைத் திரட்டும் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.



இரத்தினப்புரி, கண்டி, மாத்தளை, கேகாலை, களுத்துறை, கொழும்பு மற்றும் ஹம்பகா மாவட்டங்களில் காணிகள் பகிர்ந்தளிப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்துடன் இணைந்து, பாதிக்கப்பட்டுள் ளவர்களுக்கு உரிய வகையில் பாதுகாப்பான இடங்களை வழங்கவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு இடர் முகாமைத்துவ நிலையம், தேசிய கட்டட ஆய்வு நிலையம் மற்றும் புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் உதவிகளும் கோரப்பட்டுள்ளன. பாதுகாப்பான காணியை உறுதிப்படுத்தி, அதனை மக்களுக்கு கையளிப்பதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் தேவைப்படும் - என்றார். (ற-ஜ-4)

## பிரபாகரன் உயிரிழப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியதில்லை

### பாதுகாப்புச் செயலாளர் கூறுகின்றார்



கொழும்பு, மே 30
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழக்கவில்லை என வெளியாகும் கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் கிடையாது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வின்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் வெளியிட்டிருந்த கருத்துத்தொடர்பில், சிங்கள ஊடகமொன்று பாதுகாப்புச் செயலாளரிடம் இந்த விடயம் குறித்து வினவிய போதே ஹெட்டியாராச்சி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் உயிரிழந்துள்ளார் என்று கூறப்படும் விடயத்தை தான் நம்பவில்லை என விஜயகலா மகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், பிரபாகரனின் இறப்புச் சான்றிதழை வெளியிடும் பட்சத்தில் மாத்திரமே தாம் அதனை ஏற்றுக்கொள்வேன் என்று அவர் கூறியுள்ளார் என அந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயிரிழந்த எத்தனையோ பேருக்கு இன்று வரை இறப்புச் சான்றிதழ்கள் கிடையாது என பாதுகாப்பு செயலாளர் கூறினார் அத்துடன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் கருத்து குறித்து, தான் உத்தியோகபூர்வமாக கருத்து வெளியிட முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.(ற-ஜ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்படைகளின் புறக்கணிப்பு அரசியல் நோக்கமான முடிவே

## கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 30

தான் பங்கேற்கும் நிகழ்ச்சிகளை இலங்கையின் முப்படைகளும் புறக்கணிப்பது என எடுத்த தீர்மானமானது தவறிழைத்த அதிகாரிகளைப் பாதுகாக்கும் வகையில் அரசியல் நோக்கத்துடன் எடுக்கப்பட்ட முடிவு. – இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

சம்பூர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஏற்பட்ட அசம்பாவிதம் தொடர்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.



கடந்த 20 ஆம் திகதி சம்பூர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட கிழக்கு மாகாண முதலமைச்சருக்கும், கடற்படை அதிகாரி ஒருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. அதையடுத்து கிழக்கு மாகாண முதலமைச்சர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளை முப்படைகளும் புறக்கணிக்கும் என்று கடற்படை அதிகாரிகள் கூறியிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரிடமும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விளக்கம் கோரியிருந்த நிலையில் முதலமைச்சர் நேற்றுக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். தனியார் அமைப்பு ஒன்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற அந்த நிகழ்வில் பங்கேற்ற தனது பெயரையும், மாகாணக் கல்வி அமைச்சர் தண்டாயுதபாணியின் பெயரையும், நிகழ்ச்சித் தொகுப்பாளர் குறிப்பிடவில்லை எனவும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்தத் தவறைக் கவனித்த மாகாண ஆளுநர், தன்னை மேடைக்கு வருமாறு அழைத்ததாகவும். தான் மேடையில் ஏறமுயன்றபோது, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட்ட கடற்படை அதிகாரி ஒருவர் தன்னை மேடையில் ஏறவிடாமல் தடுத்தார் என்றும் அந்தக் கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த அதிகாரியின் நடத்தை மோசமானதாக இருந்ததாகவும், இந்தச் செய்கையைத் தான் கண்டித்ததாகவும் அந்தக் கடிதத்தில் கூறியுள்ள கிழக்கு மாகாண முதல்வர், அந்த அதிகாரிகள் முறையான வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கு உத்தரவிடாமை தொடர்பில் ஆளுநர் மீதும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் அப்துல் கேஷாப் மற்றும் பொது மக்கள் மத்தியில் தான் அவமானப் படுத்தப்பட்டேன் என்றும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியும், பிரதமரும் இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை ஆரம்பிக்க முன்னரே, முப்படைகளும் புறக்கணிப்பது என எடுத்த தீர்மானமானது, தவறிழைத்த அதிகாரிகளைப் பாதுகாக்கும் வகையில் அரசியல் நோக்கத்துடன் எடுக்கப்பட்ட முடிவு எனவும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் மன்னிப்புக் கோரவேண்டும் எனவும் கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட் அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். (ற-ஜ-4)

## கிழக்கு முதலமைச்சர் மீதான கடற்படையின் தடை தொடரும்

### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, மே 30

கடற்படை அதிகாரியை அவமதித்த கிழக்கு மாகாண முதலமைச்சர், நசீர் அகமட் மீது விதிக்கப்பட்டுள்ள கடற்படையின் தடை தொடரும் என்று பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

சம்பூர் மகா வித்தியாலயத்தில் கடந்த 20 ஆம் திகதி நடந்த இந்தச் சம்பவத்தை அடுத்து, முப்படைகளின் முகாம்களுக்குள்ளேயும், கிழக்கு மாகாண முதல்வரை அனுமதிப்பதில்லை என்றும், கிழக்கு முதல்வர் பங்கேற்கும் நிகழ்வுகளைப் புறக்கணிப்பதென்றும், பாதுகாப்பு அமைச்சு முடிவெடுத்தது.

இந்த நிலையில், இரண்டு தரப்பினரையும் கருத்துக்கள் எதையும் வெளியிடக் கூடாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார்.

இவை குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குறிப்பிடுகையில்–

கிழக்கு முதலமைச்சர் மீது விதிக்கப்பட்ட கடற்படையின் தடை நீடிக்கிறது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடி அவர் முடிவெடுக்கும் வரையில் இந்தத் தடை தொடரும்–என்று அவர்தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

## கடற்படையின் கிழக்குப் பிராந்திய தளபதி கொழும்புக்கு இடமாற்றம்

கொழும்பு, மே 30

கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட், கடற்படை அதிகாரி ஒருவரைத் திட்டிய விவகாரம் பெரும் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் நிலையில், கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதியான றியர் அட்மிரல் நீல் ரொசாரியோ கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் தளபதியான றியர் அட்மிரல் நீல் ரொசாரியோ, ஏற்கனவே கடற்படையின் பிரதித் தலைமை அதிகாரியாகவும், தொண்டர் படைத் தளபதியாகவும் பணியாற்றி வந்தார்.

அவர் தற்போது திருகோணமலையில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டு, கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார். தொடர்ந்து அவர், கடற்படையின் பிரதித் தலைமை அதிகாரியாகவும், தொண்டர் படைத் தளபதியாகவும் கடமையாற்றுவார்.

இடமாற்றத்தையடுத்து, கிழக்கு கடற்படைத் தளபதியாக, றியர் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, றியர் அட்மிரல் நீல் ரொசாரியோவின் இடமாற்றம், கிழக்கு முதலமைச்சர் விவகாரத்துடன் தொடர்புடையதல்ல என்று, கடற்படைப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்துள்ளார்.

இந்த இடமாற்றம் மூன்று வாரங்களுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டு விட்ட ஒன்று, எனவும் அவர் கூறியுள்ளார். (ற-ஜ-5)

## நைஜீரியர்கள் கொக்கைனுடன் கைது



கொழும்பு, மே 30

3 கோடி ரூபா பெறுமதியான கொக்கைன் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் நைஜீரிய நாட்டுப் பிரசைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் இவர்கள் இருவரும், பொரளைப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் மூன்று கோடி ரூபா மதிப்புள்ள இரண்டு கிலோ கிராம் நிறை கொண்ட கொக்கைன் போதைப் பொருள் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ற-ஜ-4)

## பல்கலைக்கழகங்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது துணைவேந்தரின் பொறுப்பு

### அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, மே 30

பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெறும் அனைத்து நடவடிக்கைகளையும், தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டியது பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பல்கலைக்கழக நிர்வாகத்தினரின் பொறுப்பு என்று உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் லிப்டன் சுற்று வட்டப் பகுதிகளில், பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவார்களாயின், அதற்கான முழுப் பொறுப்பையும் பல்கலைக்கழக துணைவேந்தர்களே ஏற்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

பல்கலைக்கழகங்களினதும், மாணவர்களினதும் எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்வதற்கு அரசு விரிவான கொள்கைகளை வைத்துள்ளது. ஆனால் மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் லிப்டன் சுற்று வட்டப் பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது முறையான விடயமல்ல.

இனி இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவார்களாயின், பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மற்றும் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் அரசு உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொண்டு வருகின்றது. மஹாபொல புலமைப்பரிசு 35 சதவீதத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 20 பல்கலைக்கழக விடுதிகளைக் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விடுதிகளை 2018 ஆம் ஆண்டுக்குள் கட்டி முடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசு, நாட்டின் அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளது. இதில் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி கற்கும் மாணவர்களின் அபிவிருத்தியும் உள்ளடங்கும்– என்று தெரிவித்துள்ளார். (ற-ஜ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது கொழும்பு அரசுகளுக்கு கைவந்த கலை

தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது என்று, எங்கள் தமிழில் பேச்சு வழக்குச் சொற்றொடர் ஒன்று பாவனையில் உண்டு.

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை வழங்குவதற்குப் பதிலாகச் சுத்துமாத்துச் செய்வதே, நல்லாட்சி அரசின் குறிக்கோள் என்று சொல்லும் அளவுக்கு காரியங்கள் அரங்கேறி வருகின்றன!

பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்படுதலுக்கு எதிரான அனைத்துலக சாசனத்தை இலங்கை அரசும் அங்கீகரித்திருப்பது வெட்ட வெளிச்சமானது.

அதன் ஒரு கீற்றாக, காணாமற் போனோர்களின், குடும்ப உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே அவர்களுக்கான அலுவலகம் உருவாக்கப்படும் என்று, அரசு தனது தலையில் அடித்து, கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஏற்கெனவே உறுதிமொழி வழங்கியிருந்தது.

ஆனால், தனது உறுதி மொழியைத் தானே உள்ளே விழுங்கி, முற்றிலும் எதிர்மாறான வகை சார்ந்து, காணாமற்போனவர்களின் அலுவலகம் ஒன்றை உருவாக்குவதற்கு சட்டம் ஒன்றை நிறைவேற்ற அமைச்சரவை அனுமதி வழங்கி உள்ளது!

இந்தக் குள்ளநரிப் போக்குக்கு, நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட, மனித உரிமைகள் கண்காணிப்பகம், கடந்த வெள்ளியன்று தனது பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் பங்களிப்பின்றி, பணியகம் அமைப்பதை ஏற்க இயலாது என்று, மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடும் தொனியில் கண்டித்துள்ளது. அதன் ஊடாக, அனைத்துலகத்துக்கு வழங்கிய உறுதி மொழியை மீறிவிட்டதாக இலங்கை அரசை அது சாடி உள்ளது.

கடந்த ஆண்டு ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் மனித உரிமை, காணாமற்போனோர் தொடர்பான பணியகம் உள்ளிட்ட நீதிவழங்கும் பொறிமுறைகள் தொடர்பில், தேசிய மட்டத்தில் கலந்துரையாடல் நடத்தப்படும் என்று இலங்கை அரசு உறுதி மொழி வழங்கியிருந்தது.

ஆனால், அதற்கு முற்றிலும் எதிரான வகையில், சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசிக்காது, காணாமற்போனோர் (காணாமற்போகச் செய்யப்பட்டோர்) குறித்த பணியகத்தை உருவாக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி இருப்பது உலகத்தை ஏமாற்றும் செயற்பாடு அன்றி, வேறென்ன....?

இது ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு மட்டுமல்ல முழு உலகத்துக்கும் 'பெப்பே' காட்டும் நிலையைத் தோற்றுவித்துள்ளது!

ஒட்டுமொத்தத்தில் பலவந்தமான கடத்தல்கள் தொடர்பில், அனைத்துலகப் பிரகடனத்தில் தான் கைச்சாத்திட்டுள்ள போதிலும், அதிலிருந்து நல்லாட்சி அரசு வழுவுவது அனைத்துலகத்தை ஏமாற்றும் போக்கன்றி வேறெதுவும் இல்லையே!!

# இலங்கை உலகின் அதிசயமாக மாறுமா?



சேரலாதன்

முள்ளிவாய்க்காலில் தமிழர்களுக்கு எதிரான அவலங்கள் அரங்கேற்றப்பட்டு ஆண்டுகள் ஏழு கடந்து விட்டன. ஏழு ஆண்டுகள் என்பது நீண்ட காலம்தான். இந்தக் காலப்பகுதிக்குள் தமிழர்களுக்கு ஏற்பட்ட வலிகளுக்குரிய நிவாரணம் வழங்கப்பட்டதா என்ற கேள்வி எழுவது நியாயமான ஒன்று. ஆனால் அதற்கான விடைதான் எங்கு தேடியும் கிடைக்காத ஒன்றாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் மொழி ரீதியாகப் பார்க்கும்போது இரண்டு இனங்கள்தான் காணப்படுகின்றன. ஏனென்றால் முஸ்லிம் மக்களும் தமிழைத்தான் தமது தாய் மொழியாகக் கொண்டிருக்கின்றனர். இனம் என்ற அடிப்படையில் மூன்று முக்கியமான இனங்களைக் குறிப்பிட முடியும். சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய மூன்று இனத்தவர்களே அவர்கள். இவர்களில் இனப்பிரச்சினை காரணமாகத் தொடர்ந்து பாதிக்கப்படுபவர்கள் தமிழர்கள் தான். ஆரம்பத்தில் மொழியுரிமைக்கான போராட்டங்களையே தமிழர்கள் மேற்கொண்டனர். சிங்களம் மட்டும் சட்டம், வாகனங்களில் சிங்கள ஶ்ரீ பொருத்துதல் என்பன தமிழர்களின் உணர்வுகளைப் புண்படுத்தியமையால் தமது மொழியின் இருப்பைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். வெளிநாடு சென்று மெத்தப்படித்த அறிவாளியாக விளங்கிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவே இந்த நாட்டில் இனவாதம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தார். தமது அரசியல் இலக்கை அடைவதற்காக அவர் அற்பத்தனமான காரியங்களில் ஈடுபடுவதற்கும் துணிந்தார். இதன் விளைவாகவே இனவாதம் விஸ்வரூபம் எடுத்து ஆடத் தொடங்கியது.

அவருக்குப் பின்னர் ஆட்சியில் அமர்ந்தவர்களும் தாம் பண்டாரநாயக்கவுக்குச் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்துக் கொண்டார்கள். இந்த நாடு சுதந்திரம் அடைந்து 68 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் இனங்களுக்கிடையே எந்தவிதமான இணக்கப்பாடும் எட்டப்படாதது மாத்திரமல்ல பெரும் விரிசல்கள் ஏற்பட்டதையே காணமுடிகின்றது. தமிழில் தேசிய கீதம் பாடக் கூடாது என்று கூறியதன் மூலமாகச் சில பெரும்பான்மையினத் தலைவர்கள் தம்மைத் தாமே தாழ்த்திக் கொண்டனர்.

அனைத்து இனத்தவர்களும் இலங்கை அன்னையின் புதல்வர்கள் என்பதை இவர்கள் மறந்துவிட்டனர். தனது குழந்தைகள் எந்த மொழியில் தன்னைப் புகழ்ந்தாலும் அந்த அன்னை ஏற்றுக்கொள்வாள். இந்தச் சிறிய விடயத்தைக் கூட இனவாத அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளாதது ஆச்சரியமாகவுள்ளது. இங்கு வாழ்கின்ற மக்கள் அனைவரும் நாம் இலங்கையர், இலங்கை மாதா பெற்ற குழந்தைகள் என்று பெருமையுடன் கூறுகின்ற காலமொன்று உருவாக்கப்படல் வேண்டும். தமிழர்கள் தனிநாடு கோரிப் போராடுவதற்குக் களம் அமைத்துக் கொடுத்த இனவாதிகள் இந்த நாட்டின் அபிவிருத்தியையும், வளர்ச்சியையும் குழி தோண்டிப் புதைத்து விட்டனர்.

இந்த நாட்டில் இல்லாதது ஒன்றுமில்லை. ஆர்ப்பரிக்கும் கடலும், உயர்ந்து நிற்கும் மலைகளும், ஓங்கி உயர்ந்து நிற்கும் மரங்களைக் கொண்ட காடுகளும், பாய்ந்து ஓடும் ஆறுகளும், வெள்ளியை உருக்கி வைத்ததைப் போன்று காட்சி தரும் அருவிகளும் இயற்கை அன்னை எமக்குத் தந்த சீதனங்கள். பச்சைப் பசேலென விரிந்து கிடக்கும் வயல்வெளிகள் விவசாயத்தின் மாண்பைக் கட்டியம் கூறி நிற்கின்றன. ஆனால் நாம் இன்றும் வெளிநாடுகளிடம்கையேந்தும்நிலையே காணப்படுகின்றது. பிறநாடுகளிடம் பெற்ற கடன்களைச் சுமக்க முடியாத நிலையில் இந்த நாட்டு மக்கள் கலங்கி நிற்கின்றனர். பல சந்ததிக்கும் இந்தக் கடன்கள் தொடரத்தான் போகின்றன. இதற்கெல்லாம் இந்த இனவாதிகள் பதில் சொல்லித்தானாக வேண்டும்.

மிகச்சிறிய நிலப்பரப்பில் இயற்கை வளங்கள் எதுவுமின்றிக் காணப்படுகின்ற சிங்கப்பூர் இன்று உலகின் கவனத்தை ஈர்த்து நிற்கின்றது. மதிப்பில் உயர்ந்து நிற்கின்றது. சுத்தத்திலும், சுகாதாரத்திலும், தனிநபர் வருமானத்திலும் தனியிடத்தை வகிக்கின்றது. பன்னாட்டுப் பிரமுகர்கள் பலரும் தமது நோய்களுக்கு மருத்துவம் செய்வதற்கு சிங்கப்பூரையே நாடிச் செல்கின்றனர். ஆனால் ஒரு காலத்தில் சிங்கப்பூர் நாட்டின் சிற்பியால் அதிசயத்துடன் நோக்கப்பட்ட எமது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு மேலும் மேலும் கீழ்நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இதுவொரு சாபமா? அல்லது வேறு ஏதாவதா? ஒன்றுமே புரியவில்லை.

சிறுபான்மை இனத்தவர்களின் காணிகளை அடாத்தாகப் பிடுங்கி அங்கு குடியேற்றங்களை ஏற்படுத்துவதும், பூர்வீகமாக வாழ்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களிலிருந்து விரட்டுவதும், அவர்களின் சமய வழிபாட்டுத் தலங்களில் தமது சின்னங்களை உட்புகுத்துவதும், மாற்று மதத்தினர் வாழுகின்ற இடங்களில் அவர்களது விருப் பத்துக்கு மாறாக வேறு சமய வழிபாட்டுத் தலங்களை நிறுவுவதும், மொழி உரிமையைப் பறிப்பதும், இன ரீதியான குரோதங்களை வேண்டுமென்றே தூண்டுவதும் பெரும்பான்மையின மக்களின் மனங்களில் உண்மைகள் சென்றடையாத வண்ணம் தடுப்பதும் சிறுபான்மை இனத்தவர்களின் மனங்களை நோகடிக்கச் செய்வதுடன் நாட்டின் ஐக்கியத்தையும் குலைத்துவிடும்.

இந்த நாடு தலை நிமிர்ந்து காணப்பட வேண்டுமென்றால் சிறுபான்மை இனத்தவர்கள் தலைகுனிந்து நிற்கும் நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். அவர்களும் இந்த நாட்டின் குடிமக்கள் என்பதும், அவர் களுக்கும் ஏனையவர்களைப் போன்று சகல உரிமைகளும் உண்டென்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இனவாதம் அறவே ஒழிக்கப்பட்டு இனவாதம் பேசுகின்றவர்கள் ஓரம்கட்டப்பட வேண்டும்.

இனவாதிகள் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு அரசமைப்பு ரீதியாகத் தடை விதிக்கப்பட வேண்டும். நாட்டின் உயர் பதவிகளில் சிறுபான்மை இனத்தவரும் அமரும் வகையில் பெரும்பான்மையினத்தவர்கள் விட்டுக் கொடுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கானவர்களை அழித்துவிட்டு அதையொரு வெற்றி விழாவாகக் கொண்டாடுகின்ற மிகக் கேவலமான மனப்பான்மைக்கு இந்த முறை இயற்கையே தடைபோட்டு விட்டது. மகிந்த அணியினரால் குருநாகலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போர் வெற்றிக்கான வெற்றி விழாக் கொண்டாட்டங்களை இயற்கையே பொறுக்க முடியாமல் நிறுத்தி வைத்து விட்டது. இனவாத அரசியல்வாதிகள் இனியாவது மன மாற்றத்தைக் காண்பிக்க வேண்டும்.

இனவாதம், மதவாதம் இல்லாததொரு நாடு உருவாக்கப்படுமாயின் உண்மையிலேயே உலகின் அதிசயமாக அந்த நாடு மாறும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. தமது தாய் நாட்டின் மீது உண்மையான பற்றுள்ள எவரும் நாடு சீரழிந்து செல்வதை விரும்ப மாட்டார்கள். இந்த நாட்டிலும் அந்த அதிசயம் மலரும் நாள்களுக்காகக் காத்திருப்போம்.

## தமிழர்களின் இறுதிக் குரல்

# சமஷ்டி

சாம் ரமேஸ்குமார்

அண்மைய காலங்களில் வடக்கிலிருந்து சமஷ்டியெனும் ஒரு குரல் தென்னிலங்கையை நோக்கி ஓங்கி ஒலித்துக் கொண்டு இருக்கின்றது.

மகாபாரதப் போரில் ஸ்ரீ கிருஷ்ணர் ஊதிய பாஞ்சஜன்யம் சங்கின் ஒலியை ஒத்ததாக ஒத்துப் போகின்றது. அவ்வளவு இறைநாதம் தமிழர்களின் தர்மமான சமஷ்டிக் குரலில் ஆழ்ந்து கிடக்கின்றது எனலாம்.

இந்த சமஷ்டிக் குரலானது தமிழர்களின் அகிம்சைக் குரலாகும்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதன் ஐக்கியத்தையும், ஒற்றுமையையும், சமத்துவத்தையும்எப்போதுமேசிதைக்காத ஒரு வலிமையான இனவாத மற்ற குரலென இதைப் புகழலாம்.

இவ்வளவு நல்லிணக்கம் கொண்ட தமிழரின் சமஷ்டிக் குரலைத் தென்னிலங்கை ஏற்க மறுக்கின்றது.

காரணம் சமஷ்டிக் குரலானது ஒருவேளை உண்மையாகவே பிரிவினையாக உருவெடுத்து விட்டால் அது எதிர்காலத்தில் இலங்கைத் தேசம் இரண்டாக உடையும் அபாயத்துக்கு வழிவகுத்து விடலாமென அஞ்சுகின்றது.

தற்காலிகமான நிழலாகப் பரிணமிக்கும் பிரிவினைவாதமான இந்த அச்சத்தைத் தென்னிலங்கையின் இனவாத அரசியல் தலைவர்களின் மனங்களிலிருந்து முற்றாகக் களைய வேண்டிய பெரிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் பீடத்துக்கே உண்டு. ஏனெனில் அவர்களே தமிழர்களின் ஏகோபித்த பிரதிநிதிகள் ஆவார்கள்.

எனவே முரண்டுபாடுகளின் மொத்தவுருவான தென்னிலங்கை அரசானது தமிழர்களின் அரசியல் ரீதியிலான அதிகாரங்களை ஒற்றையாட்சிக்குள்ளேயே பகிர்ந்து விடலாமெனக் கனவு காண்கின்றது. அதனால் தமிழர்களின் சமஷ்டிக் குரலை அது ஆரம்பத்திலேயே நசுக்க எத்தனிக்கின்றது. இதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராஜதந்திர முறையில் நெறிப்படுத்தி சர்வதேசத்தின் பார்வைக்கு எடுத்துச் செல்வதே எதிர்காலத் தமிழர்களின் சமஷ்டித் தீர்வுக்குச் சரியான ஒரு நிவாரணமாகும்.

அத்தோடு கடந்த 2009 மே 18 இல் நடந்த தமிழர்களின் மாபெரும் மனிதப் பேரவலத்துக்கும் அதன் வலிகளுக்கும் சரியான மருந்து, சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வாகும். முள்ளிவாய்க்காலோடு ஓரளவு ஓய்ந்த தமிழர்களின் உரிமைக் குரலானது மேலும் ஓயாமல் தடுப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது முழுக் கரிசனையோடு முன்வர வேண்டும். அதற்கு சமஷ்டிக் குரலே சிறந்த உத்தியாகும்.

சமஷ்டி இன்றளவும் பல உலக நாடுகளை வெற்றி கொண்ட ஒரு தர்மமான அல்லது சகோதரத்துவமான ஒரு நிரந்தரத் தீர்வுத் திட்டமாகும். இதில் சில நாடுகளும், சிறுபான்மையினரும் பயணித்து சமத்துவத்தையும், சமாதானத்தையும் மிகப் பரவலாக அறுவடை செய்திருக்கின்றனர். அதனால் தென்னிலங்கையானது தமிழர்களின் சமஷ்டிக் குரலைக் கண்டு என்றும் அஞ்சவோ அதிர்ச்சியடையவோ தேவையில்லை.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகப் போரினால் எல்லாவற்றையும் இழந்த தமிழர்களின் இறுதிக் குரலாக சமஷ்டி ஒன்றே எஞ்சி நிற்கின்றது என்பதைச் சர்வதேசமும், பாரதமும், தென்னிலங்கையும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

> இந்த சமஷ்டிக் குரலானது தமிழர்களின் அகிம்சைக் குரலாகும். ஒன்றுபட்ட இலங் கைக்குள் அதன் ஐக்கியத்தையும், ஒற்றுமையையும், சமத்துவத்தையும் எப்போதுமே சிதைக் காத ஒரு வலிமையான இனவாத மற்ற குரலென இதைப் புகழலாம்.

# வட மாகாண சபையின் சிற்றூழியர் நியமனங்களில் வெளிப்படைத் தன்மை பேணப்படுமா?

சிற்றூழியர் நியமனங்கள் கடந்த பல வருடங்களாக அரசியல் நியமனமாகவே இருந்து வந்துள்ளது. 2013 இல் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னராகப் பல்வேறு அரசு (மத்திய அரசு) சார்பு அரசியல் கட்சிகளால் தங்களது கட்சியைச் சார்ந்தோர் அல்லது தங்களிடம்வேலைக்காகப்பதிவுசெய்தவர்களுக்குப் பெருமளவு சிற்றூழியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

அப்போது வடக்கு மாகாணத்தில் பல்வேறு திணைக்களங்களின் போதியளவு வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. அதன் பின்னர் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்று வடக்கு மாகாண அரசு அமைக்கப்பட்டது. அதன் பின்னர் சிற்றூழியர் நியமனங்களுக்கு பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, பரீட்சை நடத்தப்பட்டு, நியமனங்கள் வழங்கப்படுகின்றன. கடந்த 2015 ஆம் ஆண்டில் வடக்கு மாகாணசபைசிற்றூழியர்நியமனங்களுக்கான பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டு, அதற்கான பரீட்சை இந்த ஆண்டின் பெப்ரவரி மாதம் நடைபெற்றது. பரீட்சை முடிவுகள் ஒருமாத காலத்தில் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன. பரீட்சைகளில் பெருமளவான விண்ணப்பதாரிகள் தோற்றியிருந்தனர். வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவருக்கும் பரீட்சை முடிவைத் தபாலில் அனுப்பவில்லை. எல்லோரும் இணையத்தளத்தைப் பார்வையிடும் வசதி படைத்தவர்கள் அல்ல.

அதற்கு அப்பால் குறிப்பிட்ட அளவு கூடிய புள்ளிகள் பெற்றவர்களுக்கு நேர்முகத் தேர்வு வைத்து அவர்களுக்கான நியமனங்கள் சித்திரை மாதமளவில் யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்பட்டன. இவ்வளவு துரிதமாக நியமனங்களை வழங்கியமைக்கு வடக்கு மாகாண சபைக்கு நன்றிகள்.

இவ்வாறு புதிய நியமனங்கள் பெறுபவர்களின் பெயர்களை ஏன் பத்திரிகைகளில் பிரசுரிக்கவில்லை? (பொதுவாக நியமனங்கள் பெறுபவரின் பெயர்கள் பத்திரிகைகளில் வருவது வழமை) அல்லது தங்களது வடக்கு மாகாண சபை இணையத்தளத்தில் கூட பிரசுரிக்கவில்லை.

இதைவிட வடக்கு மாகாண சபை சிற்றூழியர் நியமனங்களுக்கான பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்பட்டு, பரீட்சை நடைபெறுவதற்கு முன்னரே பல்வேறு பாடசாலைகளில் தற்காலிகமாக வேலை செய்த அதிபரின் உறுதிமொழி, வரவுப்பதிவேடு என்பவற்றை வைத்துக் கொண்டு கணிசமானவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன. ஆனால் அவர்கள் பல வருடங்களாக அந்தப் பாடசாலைகளில் தற்காலிகமாகக் கடமையாற்றவில்லை.

ஏனெனில் 2013 ஆம் ஆண்டுதான் எல்லாச் சிற்றூழியர்களுக்கும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன. அத்தோடு புதிய சிற்றூழியர்களும் நியமிக்கப்பட்டனர். ஆகவே சிற்றூழியர்களுக்கான நியமனத்துக்குப் பரீட்சை விண்ணப்பம் கோரப்பட்ட பின்னர், இவ்வாறான சிற்றூழியர் நியமனங்கள் வழங்கலாமா?

பரீட்சை முடிவுகள் வெளியாகிய பின்னர் புதிய நியமனங்கள் எவருக்கு வழங்கப்பட்டன என்பதன் வெளிப்படைத் தன்மையை வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வெளிப்படுத்துமா? நல்லாட்சி மத்திய மற்றும் மாநில அரசுகளில் எப்போது செயற்படும்.

*பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் சார்பாக,*
*பரீட்சார்த்தி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் போட்டிகள் நடத்துவதில் சிக்கல்

பிரேஸிலியா, மே 30
பிரேஸிலில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகள் பிற்போடப்படவேண்டும் அல்லது இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என நூற்றுக்கும் அதிகமான மருத்துவர்கள், பேராசிரியர்கள் இணைந்து உலக சுகாதார நிறுவனத்துக்குக் கடந்த வெள்ளிக்கிழமை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். அந்த கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:- பிரேஸிலில் இதுவரை இல்லாத அளவுக்கு சிகா வைரஸால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே அதனைக் கருத்தில் கொண்டு நிகழ்வைப் பிற்போடவோ, வேறு இடத்துக்கு மாற்றம் செய்யவோ நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த வியாழக்கிழமை, அமெரிக்காவின் நோய்க் கட்டுப்பாட்டு தலைவர் டொம் பிரிடன், ஒலிம்பிக் போட்டிகளை தடை செய்யவோ, தாமதப்படுத்தவோ தேவையில்லை என தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இந்தக் கடிதம் வெளியிடப்பட்டுள்ளது. ஜப்பான், தென் ஆபிரிக்கா, நோர்வே, அமெரிக்கா என உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள உடற்கூற்று நிபுணர்கள், பேராசிரியர்கள் உயிரியியலாளர் எனப் பலரும் இந்த கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு இன்னும் 2 மாதங்கள் உள்ளன. இந்த நிகழ்வுக்கு உலக அளவில் இருந்து 5 லட்சம் மக்கள் பிரேஸிலுக்கு பயணிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-ரி4)

# திடீர் வெள்ளத்தால் பொதுமக்கள் தவிப்பு

### நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்வு





பிலெட்வெய்ன், மே 30
சோமாலியாவின் தென் நகரான பிலெட்வெய்னில் உள்ள பேல் ஆற்றின் கரைகள் நிரம்பி, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இந்த திடீர் வெள்ளத்தால் பல மக்களின் உணவுப் பொருள்கள், உடைமைகள் வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்டன.

இந்த நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில்; மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது. இதேவேளை – பாதிப்படைந்துள்ள மக்களுக்கு உணவு, குடிதண்ணீர் என்பன வழங்கப்படாததால், வெள்ளத்தை குடிதண்ணீராகப் பருக வேண்டிய அவதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (ஐ-ரி4)

# மத்திய தரைக் படகு மூழ்கி

## 45 அகதிகளின் உடல்கள் மீட்பு

ரோம், மே 30
மத்திய தரைக்கடலில் படகு மூழ்கிய சம்பவத்தில் இதுவரை 45 அகதிகளின் உடல்களை இத்தாலியக் கப்பற்படை மீட்டுள்ளது.

காணாமற் போன பலரை தேடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய தரைக்கடல் பகுதியில் நேற்றுமுன்தினம் மூழ்கிய படகில் இருந்து 135 புலம்பெயர்ந்தோரை வேகா என்ற கப்பற்படை கப்பல் மீட்டுள்ளது. இதுவரை 45 உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த விபத்துக்கு முதல் நாளும், மற்றொரு படகு விபத்தில் 30 பேர் கொல்லப்பட்டனர். அண்மையில் லிபியா கடலோரப் பகுதியில் 650 பேரை ஏற்றி சென்ற மீன்பிடி படகு ஒன்றும் மூழ்கியது. இத்தாலியக் கப்பற்படை இந்தச் சம்பவத்தை வீடியோவாகப் பதிவாக்கியுள்ளது.

இதேவேளை - ஒரு நாளில் விபத்தில் சிக்கிய 16 படகுகளில் இருந்து 1,900 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த நான்கு நாள்களில் லிபிய கடலோரப் பகுதியில் இருந்து 10 ஆயிரம் பேர் வரை மீட்கப்பட்டுள்ளனர்.

இது வருத்தத்துக்குரியது என ரோம் நகரில் உள்ள ஐ.நா. அகதி அமைப்பின் செய்தி தொடர்பு பெண் அதிகாரி கார்லோட்டா சமி தெரிவித்துள்ளார். (ஐ)



> ஒரு நாளில் விபத்தில் சிக்கிய 16 படகுகளில் இருந்து 1,900 பேர் மீட்கப்பட்டுள்ளனர். கடந்த நான்கு நாள்களில் லிபிய கடலோரப் பகுதியில் இருந்து 10 ஆயிரம் பேர் வரை மீட்கப்பட்டுள்ளனர்.

# பாலத்தில் பஸ் தடம் புரண்டது

### 9 பேர் சாவு



டாக்கா, மே 30
பங்ளாதேஷில் பொது மக்கள் பயணித்த பஸ்ஸொன்று தடம்புரண்டு கால்வாய்க்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் குறைந்தது 9 பேர் சாவடைந்ததுடன், 30 பேர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை, சமட்டார் பகுதியில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது. பஸ்ஸின் இடது முன்பக்க ரயரில் ஏற்பட்ட திடீர் பழுதே விபத்துக்கு காரணமாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 60 பேர் பயணித்துக் கொண்டிருந்த பஸ், எல்லை மீறி பாலத்தில் இருந்து கால்வாயில் வீழ்ந்து நொறுங்கியது.

விபத்தில் 5 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். அத்துடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களில், பலரது நிலைமை கவலைக்கிடமாக வுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-ரி4)

பெற்றோ

பீஜிங், மே 30
உடன்பிற...
கவனித்துக் ...
விடுமுறையை...
ஒரு குழந்தை...
பெற்றோர் இரு...
நிலை உருவா...
தீர்வுக்கு இந்த...
வயதுக்கு மேற்...
இருந்தாலோ ...



அமெரிக்க...
செய்யப்ப...
மூடிகள் வி...

# பாகிஸ்தான் பிரதமருக்கு இருதய அறுவை சிகிச்சை

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு நாளை செவ்வாய்க்கிழமை லண்டன் வைத்தியசாலையில் (திறந்த) இருதய அறுவை சிகிச்சை நடைபெறவுள்ளது. பிரதமர் நவாஸ் ஷெரீப் ஏற்கனவே 2011 ஆம் ஆண்டு இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டவர். அவர் கடந்த சில மாதங்களாக உடல் நலம் பாதிக்கப்பட்டு, மிகுந்த அவதிப்பட்டு வந்தார்.

இதைத்தொடர்ந்து மருத்துவ பரிசோதனைக்காக அவர் கடந்த மாதம் லண்டன் சென்றார். அங்குள்ள இளவரசி கிரேஸ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் ஏற்கனவே செய்து கொண்ட அறுவை சிகிச்சையில் சில பாதிப்புகள் ஏற்பட்டு இருதயத்தில் ஓட்டை விழுந்திருப்பது கண்டறியப்பட்டது.

மருத்துவப் பரிசோதனைக்கு பின்பு பாகிஸ்தான் திரும்பிய நவாஸ் ஷெரீப் கடந்த வாரம் மீண்டும் லண்டன் அழைத்துச் செல்லப்பட்டு, இளவரசி கிரேஸ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவருக்கு கண்டிப்பாக திறந்த இருதய அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர். இதையடுத்து அவருக்கு நாளை இருதய அறுவை சிகிச்சை நடைபெறவுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# க்கடலில் விபத்து



# றாரைக் கவனிக்க ஊதியத்துடன் விடுமுறை

30

தவர்கள் அல்லாத தொழிலாளர்கள் தங்களது வயது முதிர்ந்த பெற்றோரைக் க் கொள்வதற்காக ஒவ்வோர் ஆண்டும், ஊதியத்துடன் கூடிய 20 நாள்கள் யை சீனாவின் மாகாணம் ஒன்று வழங்கியுள்ளது. சீனா நடைமுறைப்படுத்திய தைத் திட்டத்தால் மில்லியன் கணக்கான குடும்பங்களில் வயது முதிர்ந்த இருவரையும், அவர்களின் ஒரே ஒரு குழந்தை மட்டுமே கவனிக்க வேண்டிய நவாகியது. வரவேற்கப்படாத விளைவுகளில் ஒன்றான இந்த நிலைமையின் இந்த மாகாணத்தின் தீர்மானம் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. அறுபது மேற்பட்ட பெற்றோர் இருந்தாலோ அல்லது பெற்றோர் மருத்துவமனையில் லா ஹெனான் மாகாணம் மேலதிக விடுமுறைகளை வழங்கவுள்ளது. (ஐ)

# கொரில்லாவின் கூண்டுக்குள் அகப்பட்ட சிறுவன் மீட்பு



வொசிங்ரன், மே 30

அமெரிக்காவில் விலங்குப் பூங்கா ஒன்றில் சிறுவன் ஒருவன் கொரில்லா கூண்டுக்குள் தவறி வீழ்ந்துள்ளான். இதனால் கொரில்லாவிடம் இருந்து சிறுவனைக் காப்பாற்ற கொரில்லா துப்பாகியால் சுடப்பட்டுக் கொல்லப்பட்டது.

4 வயதுடைய குறித்த சிறுவன், 10 அடிக்கும் மேற்பட்ட ஆழமான கொரில்லாக் கூண்டுக்குள் தவறி வீழ்ந்துள்ளான். சுமார் 10 நிமிடங்கள் கொரிலாவிடம் தப்பிப்பிப்பதற்காக சிறுவன் கூண்டுக்குள் அங்கும் இங்குமாக ஓடியுள்ளான்.

இதனை அவதானித்த பூங்கா நிர்வாகிகள், 17 வயதான குறித்த பெண் கொரில்லாவைச் சுட்டுக் கொன்றனர்.

மீட்கப்பட்ட சிறுவன் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சிறுவனின் உயிருக்கு அச்சுறுத்தலாக அமைந்ததால், 400 பவுண்டுகள் எடையுள்ள கொரில்லா கொல்லப்பட்டுள்ளது என விலங்கு பூங்காப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ-ரி4)

# ஜேர்மன் எதிர்க்கட்சித் தலைவருக்கு முகத்தில் கேக்கால் தாக்குதல்



பெர்லின், மே 30

ஜேர்மனின் எதிர்க்கட்சி தலைவர் அகதிகளுக்கு எதிராக வெளிப்படையான கருத்தை தெரிவித்ததை அடுத்து, அவரின் முகத்தில் கேக் வீசப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில், இடது சாரி தலைவரான ஸாரா வாகன்கினெக்ட் இன் முகத்தில் சமூக ஆர்வலர் ஒருவரால் கேக் வீசி எறியப்பட்டுள்ளது.

அகதிகளின் வரவைக் கட்டுப்படுத்த வேண்டும். ஜேர்மனியால் குறிப்பிட்ட தொகை அகதிகளையே உள்ளடக்க முடியும் என அவரால் வலியுறுத்தப்பட்டதை அடுத்து இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவரின் இவ்வாறான கருத்துகளால் கட்சியில் இருந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். ஜேர்மனி நாடாளுமன்றத்தில் இடதுசாரி கட்சி பலமான எதிர்க்கட்சி ஆகும். தற்போது மக்கள் மத்தியில் இந்தக் கட்சிக்கான ஆதரவு நலிந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-ரி4)





ிக்க ஜனாதிபதித் தேர்தலை அடுத்து, வேட்பாளராக போட்டி[illegible]ன் முகவடிவ முக மூடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை ப்படுகின்றன. சீனாவில் முகமூடி தொழிற்சாலை ஒன்று அமெரிக்க[illegible] வியாபாரத்தை மேற்கொண்டுள்ளது. இரு வேட்பாளரினதும், 5 லட்சம் மு ா விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை பிறந்த எண்ணின் பலன்கள்

## 2

(பிறந்தஎண்ணின் பலன்கள் என்ற தொடரில் நேற்றைய உதயனில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இது.)

பல அன்பர்கள் தங்களின் குறைகளை மறைத்துக்கொண்டு வாழ்கின்ற இரட்டைக் குணமுள்ளவர்களாக இருப்பார்கள். இவர்கள் வெளியே தைரியமுடையவர்களாகத் தோன்றினாலும், உள்ளத்தில் பெண்மையே (பயமே) மேலோங்கி நிற்கும். எனவே, இவர்கள் ஒரு வழிகாட்டியை தேர்ந்தெடுத்து அவரின் ஆலோசனைகளின் பேரில் காரியங்களைச் செய்து வர வேண்டும்.

திருமண வாழ்வில் அதிர்ஷ்டம் இருந்தாலும், தங்களுக்கு அதிர்ஷ்ட எண்களில் பிறந்த பெண்களை மணந்து கொண்டால்தான் இவர்களது வாழக்கை வளமாக இருக்கும். இல்லையெனில் குடும்பப்பிரச்சினைகள் கடைசிவரை இருந்து கொண்டே இருக்கும். இவர்களின் திருமணத்துக்கு 1, 3, 5, 6 ஆகிய எண்களில் பிறந்த பெண்கள் ஏற்றவர்கள். இருப்பினும் 7 ஆம் திகதி பிறந்த பெண்ணே (பிறவி எண் (அ) கூட்டு எண்) மிகவும் சிறந்தவள்.

ஆனால் 8 அல்லது 9 எண் உடைய பெண்களை மட்டும் மணக்கவே கூடாது. பின்பு வாழ்க்கையே நரகமாகிவிடும். முதலாம் எண் பிறந்த பெண்ணும், இவர்களை அடக்கி ஆட்கொள்வாள். நல்ல வழித்துணையாக அமைவாள். எனவே மணம் புரிந்துகொள்ளலாம்.

இவர்கள் தங்களது திருமணங்களை 1, 10, 19, 28, 6, 15, 24, 7, 16 மற்றும் 25 திகதிகளும் மற்றும் 1, 6, 7 எண் கூட்டு எண்களாக வரும் தினங்களிலும் செய்து கொள்ள வேண்டும்.

இவர்கள் 1, 2, 4, 7 ஆகிய எண்களில் பிறந்த அன்பர்களை தொழிலில் கூட்டாளியாக ஏற்றுக்கொள்ளலாம். 5ஆம், 6ஆம் நடுத்தரமானதுதான் 9 எண்காரர்களையும், 8ஆம் எண் காரர்களையும் கூட்டாளிகளாகச் சேர்க்க வேண்டாம்.

இவர்களுக்கு 7, 5, 6, 1 ஆகிய நாள்களில் பிறந்தவர்கள் நண்பர்களாக அமைவார்கள்.

### எண் 2 சிறப்பு பலன்கள்

எண் 2 என்பது மனோகாரகனான சந்திரனுக்கு உரியதாகும். இந்த எண் பெண் தன்மை கொண்டது. எனவே, இந்த எண் ஆதிக்கத்தில் பிறப்பவர்களுக்கு மனோ பலமும், கற்பனைத் திறனும் இயற்கையிலேயே உண்டு. எண்ணின் பலம் குறைந்தால் தன்னம்பிக்கைக் குறையும், மனதில் பல வீண் ஐயங்களும் ஏற்படும். உலகத்தின் கவிஞர்கள் இவர்களே. தங்களின் காரியங்களைப் பலகோணங்களில் சிந்தித்த பின்பே தொடங்குவார்கள். இதனால் காரியதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. இவர்களது மனத்தின் வேகத்துக்கு ஏற்றவாறு இவரது செயல்களில் வேகம் இருக்காது. எனவே, இவர்களைக் கற்பனைவாதிகள் என்று உலகம் சொல்கிறது. பேசிக்கொண்டிருப்பதில் இன்பம் காண்பவர்கள். எந்த ஒரு விடயத்தையும் பல கோணங்களில், உணர்ச்சி பூர்வமாகப் பேசுவார்கள். சிலர் மிகவும் கஞ்சத் தனமாகப் பணம் சேர்ப்பார்கள். வேறு சிலரோ பெரும் செலவாளிகளாக இருப்பார்கள்.

மனச்சோர்வு வராமல் இவர்கள் பார்த்துக் கொண்டால் செயல்களில் வெற்றி கிடைக்கும். எதிர்காலம் பற்றிய அழகிய கற்பனைகள் இவர்களுக்கு உண்டு. புதிய புதிய கற்பனைகள் இவர்களுக்கு உண்டு. புதிய புதிய எண்ணங்களும், திட்டங்களும் இவர்களுக்குத் தோன்றும். இவர்க்ள் தண்ணீரால் (பஞ்சபூதம்) குறிக்கப்படுகிறார்கள்.

எனவே,பெரும் பிடிவாதம் கொண்ட மனிதாராகவோ, அல்லது பயந்து நடுங்கும் கோழைகளாகவோ இருப்பார்கள். எனவே, இவர்கள் தங்களது குறைகளை அறிந்து, அதை நிவர்த்தி செய்து கொள்ளவேண்டும். பெரும் ஓவியர்கள், கலைஞர்கள், பாடகர்கள், இலக்கியவாதிகள் எல்லாம் இந்த எண்ணில் பிறந்தவர்கள் தான்.

அடுத்தவர்களைக் குற்றம் சொல்லும் குணத்தையும், வீண் பேச்சையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இவர்களுக்குத் துன்பங்கள் தொடர்ந்து வரும்போது தற்கொலை எண்ணம் கூடத்தோன்றும். தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதில் மிகவும் பிரியமுள்ளவர்கள்.

தண்ணீரில் சிலருக்குக் கண்டங்கள் ஏற்படலாம். எப்படியும் வெளியூர்த் தொடர்பு, வெளிநாட்டுத் தொடர்புகள் ஏற்பட்டு அவற்றின்மூலம் பல நன்மைகள் அடைவார்கள். அடுத்தவர்களுக்குப் பெரிதாக யோசனை சொல்வார்கள். ஆனால் தங்கள் அளவில் குறைவாகவே பயன்படுத்திக் கொள்வார்கள். தெய்வ பக்தியும் உண்டு. தங்களின் செயல்கள் மீதே இவர்களுக்கு பல ஐயங்கள் தோன்றும். சரியாகத்தான் செய்தோமா? இல்லையா? என்று பல தடவை குழம்புவார்கள்.

இவர் உணர்ச்சி மயமானவர்கள். கோபம், பிடிவாதம், ஆத்திரம் போன்ற குணங்கள் உண்டு. இந்தக் குணங்களைத் தவிர்த்துக் கொண்டால்தான் மக்கள் மத்தியில் செல்வாக்கு அடையலாம். இந்த எண்காரர்களுக்குக் குழந்தை பாக்கியம் நிறைய உண்டு. பொதுவாக இவர்களுக்கு தாமதமாகத்தான் திருமணம் நடக்கும். ஒரு சிலருக்கு மிக இளவளதிலேயே திருமணம் நடக்கலாம். பெரும்பாலும் பெண்களால் உதவிகள் கிடைக்கும். சில பெண்களால் இவர்கள் வாழ்க்கையில் பாதிப்பும் உண்டு. காதல் செய்வதில் மிகவும் விருப்பம் உண்டு.

(தொடரும்)

# சாவகச்சேரி இந்துவில் சிற்றுண்டிச்சாலை வசதி

தென்னவன்

தென்மராட்சி கல்வி வலயத்தில் 112வருடங்கள்பழைமை வாய்ந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி வளாகத்தில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளை சுமார் 90 லட்சம் ரூபா செலவில் மாணவர் ஆசிரியர்கள் அமர்ந்திருந்து உணவருந்தக் கூடிய வகையில் சிற்றுண்டி நிலையத்துடன் இணைந்தஆசிரியர் ஓய்வு அறையையும் அமைத்துக் கொடுத்துள்ளது.



சுமார் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண் பெண் மாணவர்களைக் கொண்ட தென்மராட்சி கல்வி வலயத்தின் தேசிய பாடசாலையில் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களும் கல்விசாரா ஊழியர்களும் பணியாற்றுகின்றனர். கல்லூரி பிரதான மண்டபத்துடன் இணைந்த நிலையில் உள்ள கட்டடத்தில் நீண்ட காலமாக சிற்றுண்டி நிலையம் இயங்கிவந்தது. இந்தக் கட்டடத்தில் அதிபர் ஆசிரியர்கள் உள்ளே அமர்ந்திருந்து உணவருந்த முடியும். மாணவர்கள் கட்டட ஜன்னல் ஊடாகவே சிற்றுண்டி மற்றும் தேநீர் போன்றவற்றை வாங்கி, நின்ற நிலையில் அருந்திவந்தனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கல்லூரியின் அதிபர் அ.கயிலாயபிள்ளை தனது சொந்த விடயமாக கனடா சென்றிருந்தவேளையில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் அதிபருடனான கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தனர். அதில் கலந்து கொண்ட அதிபர் கல்லூரியின் தேவைகளான கேட்போர் கூடம் மாணவர் தொகை அதிகரிப்புக்கேற்ப வகுப்பறைத் தொகுதி ஆகியவற்றுடன் சிற்றுண்டிச்சாலை அமைப்பதன் அவசியத்தை கனடா கிளையினருக்கு எடுத்துக் கூறினார். தற்போதும் பழைய கட்டடத்தில் தான் சிற்றுண்டிச்சாலை உள்ளதா ? எனக் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த அதிபர் சிற்றுண்டிச்சாலைக்கு புதிய கட்டடம் அமைக்க நிதி கிடைக்காத தால் நான் படித்த காலத்தில் இருந்த இடத்திலேயே சிற்றுண்டிச்சாலை உள்ளது எனக் கூறி [illegible] 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு மேல் வெகுதூரத்தில் இருந்து வந்து கற்கின்ற மாணவர்களும் ஆசிரியர்களும் தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் உள்ள இடர்பாட்டினையும் எடுத்துக் கூறினார். கல்லூரியில் எதிர் காலத்தில் கற்கும் மாணவர்கள் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் நலன் கருதி சகல வசதிகளையும் உள்ளடக்கிய சிற்றுண்டி நிலையம் அமைக்க கனடாக் கிளையின் உறுப்பினர்கள் மாணவர்கள்ஆசிரியர்கள்ஆகியோருக்கு தனித்தனியான கட்டடங்களை உள்ளடக்கிய மாடிக் கட்டடம் அமைக்க நிதி வழங்குவதற்கு ஒப்புதல் அளித்தனர்.

இதன் பிரகாரம் 2015 ஜனவரி 24 ஆம் திகதி அதிபர் அ.கயிலாயபிள்ளையினால் அத்திபாரக் கல்லிடப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதிபர் அ.கயிலாயபிள்ளை 2015 பெப்ரவரி மாதத்தில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்து புதிய அதிபராக பொறுப்பேற்ற ந.சர்வேஸ்வரன் கட்டடப் பணிகளைத் துரிதப்படுத்தி கட்டட வேலைகளை பூர்த்தி செய்வித்தார் இந்த மாடிக் கட்டடத்தின் தளப் பகுதி மாணவர்களுக்கும் மாடிக் கட்டடத்தில் ஆசிரியர்களுக்குமென அமைக்கப்பட்டன.அத்துடன் மாடிக் கட்டடத்தில் ஆசிரியர் ஓய்வு அறையும் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மாணவர்களின் நலன்கருதி கட்டடத்துக்கு வெளியே மூன்று நிழல் குடைகளும் இருக்கைகளும் அமைக்கப்பட்டன.

தளப் பகுதியில் 120 மாணவர்கள் ஓரே நேரத்தில் அமரக்கூடிய வகையில் தளபாடங்களும் ஆசிரியர் ஓய்வு அறையில் அமர்வதற்கான தளபாட வசதிகள் தமது உடைமைகளைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு பெட்டகங்கள் தொலைக்காட்சி கணிணி வசதிகள் எற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. கல்லூரியின் ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் பயன்படுத்தக் கூடிய வகையில் சகல வசதிகளையும் கொண்ட நிலையில் 89 லட்சம் ரூபா செலவில் சிற்றுண்டிச்சாலை அமைக்கப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது. நாட்டில் உள்ள ஏனைய பாடசாலைகளின் மாணவர்களுக்கு கல்லூரியின் கனடா கிளையினரின் முன்மாதிரியான செயற்பாடாக அமைந்துள்ளது. வருங்காலத்தில் பல பாடசாலைகளில் இவ்வாறான சிற்றுண்டி நிலையங்கள் அமைக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசன நோக்குடைய கல்வி

நடேசு தயாளன்

கல்வி அடைவுநிலையில் தரத்துடன் கூடிய உயர்வான அடைவின் தேவைப்பாடுகள் இன்றைய கல்விப் புலத்தில் அதிகரித்த அளவில் வேண்டப்படுவதாயுள்ளது. இத்தகைய நிலையில் கல்வி நிர்வாகச் செயன்முறைகளுக்கப்பால் களநிலைமைகளுக்கேற்ப நெகிழ்வுப் போக்கான உத்திகளைக் கையாண்டு கல்வியின் இலக்குகளை அடைந்து கொள்ளக்கூடிய கல்வி முகாமையாளர்களது தேவைப்பாடுகள் அதிகரித்த வண்ணமுள்ளன. அத்தகைய கல்வி முகாமையாளர்கள் சிறந்த புலமைத்துவம் மிக்கவர்களாக இருப்பதோடு தரிசன நோக்குடையவர்களாகவும் மென்திறன்களின் ஒன்றுபட்ட சேர்க்கையின் வடிவமாகவும் விளங்க வேண்டியது காலத்தின் தேவையாக மாறியுள்ளது.

தொடர்ச்சியான மாற்றத்துக்குட்படும் தகவல் மையச் சமூகத்தில் போதுமான விளைதிறன், வினைத்திறன், நல்ல என்ற பதங்கள் கல்விசார் அமைப்புக்களை அடையாளப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய கல்விசார் நிறுவனமொன்றின் தலைமைத்துவமானது அதனது செயற்பாட்டுக்கு முக்கிய பங்காற்றுவதாக உள்ளது. நிறுவனமானது அதன் தலைவரது வினைத்திறனான இலக்கு நோக்கிய நகர்வுக்கு உள்ளாக்கப்படும் போதே சமூகத்துக்குச் சிறப்பான அமைப்பாக அடையாளப்படுத்தப்படுகின்றன. இத்தகைய சிறப்பான செயலாற்றுகை நிலையை கல்விசார் நிறுவனங்கள் அடைந்து கொள்ள வேண்டுமானால் கல்வி முகாமையாளரிடம் தரிசன நோக்கும் மென்திறன்களும் காணப்படுதல் அவசியமாகும்.

இத்தகைய திறன்களைக் கொண்டவர்கள் கல்வி வழங்கற் செயன்முறையின் உயர் நிலையில் இருந்து வகுப்பறை நிலை வரை காணப்படுகின்றபோது கல்வி அடைவுநிலையின் பெறுமானம் அதிகரிக்கின்றது. அவர்களால் வழி நடத்தப்படுகின்ற கல்வியோடு தொடர்புபட்ட நிறுவனங்களும் விளைதிறன்மிக்க நிறுவனக் கட்டமைப்பாக மாற்றம் பெறுகின்றது.

மாற்றத்துக்கான பிரதான முகவராகச் செயற்படுவோர் கல்வி முகாமையாளரிடம் ஆளிடைத் திறன் புலமைச்சுமை என்பன சிறப்பானதாக அமைந்து காணப்படும். கல்விசார் நிறுவன அமைப்பொன்றில் இடம்பெறும் மாற்றமானது மேலிருந்தும் கீழ் இருந்தும் கிடைக்கப்பெறும்

> தரிசன நோக்குடைய கல்வி முகாமையாளரானவர் சிறந்த அர்ப்பணிப்பும் தலைமைத்துவ இயல்பும் கொண்டவராக விளங்குதல் வேண்டும்.முகாமையாளரானவர் தனது அணியினரது செயற்பாடுகள் சரியான பாதையில் நகர்வதை உறுதிப்படுத்துபவராகவும் விளங்குதல் வேண்டும்.

ஆதரவுடனேயே இடம்பெற முடியும் என்பது கல்வி முகாமையாளரினால் உணர்ந்து கொள்ளப்பட வேண்டும். கல்வி முகாமையாளரானவர், மாற்றத்துக்கான செயலொழுங்கில் தூர



## முகாமையாளர்களும் மென்திறன்களும்

நோக்கானது நிறுவனத்தினது வடிவமைப்பையும் கட்டமைப்பையும் தீர்மானிப்பதாகவும், நிறுவனச் செயலொழுங்கையும் செயன் முறைகளையும் வடிவமைப்பதாகவும் அமைந்து காணப்படும் என்பதில் தெளி வுடையவராக இருத்தல் அவசியமாகும்.

கல்வி நிறுவனமொன்றின் கலாசாரத்தை வடிவமைப்பதில் கல்வி முகாமையாளரானவர் விழுமியங்களையும் நம்பிக்கைகளையும் கருத்திற் கொள்ள வேண்டியுள்ளவராயுள்ளார். பெரும்பாலான கல்வி முகாமையாளர்களது செயற்பாடுகள் நிறுவனக் கலாசாரத்தை உருவாக்குவது அல்லது மாற்றியமைப்பதாக அல்லாது இருப்பதைப் பேணிப் பாதுகாப்பதாகவே அமைந்து காணப்படுகின்றன. கல்விசார் நிறுவனங்களின் கலாசாரமானது கடுமையான தாக்கங்களைத் தலைவர்கள் மீதும் அவர்களைப் பின் தொடர்பவர்கள் மீதும் செலுத்துவதாயுள்ளது. இதன் காரணமாக நிறுவனக் கலாசாரத் தைப் பொருத்தமான முறையில் கட்டியெழுப்புவது தொடர்பிலும் கல்வி முகாமையாளர்கள் கருத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.

கல்வி நிறுவனக் கலாசாரத்தை மாற்றியமைக்க விரும்பும் தலைவரானவர் பின்வரும் விடயங்களில் தனது கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

1. நிறுவனத்தினது உள்ளக வெளியகச் சூழலைப் புரிந்து கொள்ளல்.
2. மாற்றங்களை உட்புகுத்தல்.
3. குழு உறுப்பினர்களைச் சமூக அணி திரட்டலுக்குள்ளாக்குதல்.

கல்வி நிறுவனங்களது நோக்கங்களானவை இருவகைப்பட்டதாகவுள்ளன.

1. நிறுவனத் தலைவரது தனிப்பட்ட தரிசனம்.
2. நிறுவனத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களது ஒன்று சேர்க்கையினால் உருவாகும் தரிசனம்.

கல்வி நிறுவனங்களது முதல்நிலை முகாமையாளரது மாற்றத்தை உருவாக்குவதற்கான எண்ணப்பாடும் சக ஊழியர்களிடையே அர்ப்பணிப்பு மிக்க வேலையை வழங்குவதற்கான விருப்பைத் தோற்றுவிக்கும் எண்ணப்பாடும் ஆரோக்கியமான நிறுவனக் கலாசாரத்தைக் கட்டியெழுப்புதல் நிறுவனச் செயன் முறையைக் கண்காணிக்கும் இயல்பு இலக்கை அடையக்கூடிய விதத்திலான வளஒதுக்கீடுகள் என்பவற்றுக்கு வாய்ப்பளிப்பதாக இருத்தல் வேண்டும்.

தரிசன நோக்குடைய கல்வி முகாமையாளரானவர் சிறந்த அர்ப்பணிப்பும் தலைமைத்துவ இயல்பும் கொண்டவராக விளங்குதல் வேண்டும். முகாமையாளரானவர் தனது அணியினரது செயற்பாடுகள் சரியான பாதையில் நகர்வதை உறுதிப்படுத்துபவராகவும் விளங்குதல் வேண்டும். சரியான பாதையை வடிவமைப்பதில் முதன்நிலை முகாமையாளர் கூடிய கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். அதனை வடிவமைப்பதில் அவரது தரிசன நோக்குக் கூடிய செல்வாக்குச் செலுத்துவதாகவுள்ளது. இதன் மூலம் சிறந்த தலைவரானவர் சிறந்த முகாமையாளராகவும் விளங்க முடியும். நிறுவனம் தனது இலக்கை வெற்றிகரமாக அடைந்து கொள்ள வேண்டுமானால் நிறுவனத் தலைவரானவர் வகை கூறலுக்குத் தன்னைத் தயாராக்குதல் வேண்டும். இதுமட்டுமன்றி நேர்மையானதாக வெளிப்படைத் தன்மையுடையவராக ஏனையோரால் நம்பப் படுபவராக கூட்டிணைவுடன் செயற்படும் இயல்புடையவராகவும் விளங்குதல் வேண்டும்.

தரிசன நோக்குடைய கல்வி நிறுவன முகாமையாளரானவர் எதிர்காலம் பற்றி சிந்தனையை தனது அணியினரிடம் பதிய வைப்பவராக விளங்குதல் வேண் டும். இத்தகைய செயற்பாடுகளுக் காகக் கல்வி முகாமையாளர்கள் மென் திறன்களை வளர்த்துக் கொள்ளுதல் அவசியமானதாகும்.

ஒருவர் ஏனையவர்கள் மீது வினைதிறனுடன் ஆதிக்கம் செலுத்தக் கூடியதும் இணக்கமான உறவுக் கோலத்தைக் கட்டியெழுப்பக் கூடியதுமான தனிப்பட்ட செயலாற்றமாக விளங்குவது மென்திறன்களாகும். அந்தவகையில் ஒருவரது ஆளுமையியல்புகள், தொடர்பாடற் கோலங்கள், மொழிப் பிரயோகங்கள், ஒருவருக்கான சமூக அங்கீகாரங்கள், தனியாள் பழக்க வழக்கங்கள், சிநேக பூர்வத் தன்மை, நேரக்கணிய நோக்கு, ஆளிடைத்திறன் விருத்தி, பிரச்சினை தீர்க்கும் உத்திகள், முகாமைத்துவத் திறன், அர்ப்பணிப்பு நிலை, நெகிழ்வுத் தன்மை, அழுத்தத்தின் மத்தியில் வேலை செய்யக் கூடிய திறன், பிரச்சினை தீர்க்கும் உத் திகள் என்பன குறிப்பிடத் தக்க மென் திறன்களாகும்.

இத்தகைய மென்திறன்களை அனைத்து வகையான முகாமையாளர்களும் பெற்றுக் கொள்ளுதல் அவசியமானதாகும். தரிசன நோக்குடைய கல்வி முகாமையாளர்களைப் பொறுத்தவரையில் தன்னை அறிந்தவராக மனவெழுச்சியை முகாமை செய்யக்கூடியவராக தொடர்பாடல் திறன் கொண்டவராக விளங்குதல் அவசியமானதாகும். தொடர்பாடல் திறன் என்பது மிகவும் முக்கியமான தொன்றாகும். சகபாடிகளுடன் தொடர்புக் கோலம், அறிவுறுத்தல்களைச் செவி மடுத்துப் புரிந்து கொள்ளும் திறன், தனது இலக்கைத்தயக்கமின்றி ஏனையோருக்கு முன்வைக்கக் கூடிய திறன், வெவ்வேறுபட்ட நிலைமைகளில் பொருத்தமான நடத்தைப் பாங்குகள் மூலம் செயற்படும் திறன், முரண்பாடு களை வெற்றிகரமாகக் கையாளும் திறன், சிறந்த தொடர்பாடற் திறனின் மூலம் கட்டுமான விருத்தி நிலையை உருவாக் கும் திறன் என்பன கல்வி முகாமையாளரிடம் காணப்பட வேண்டும்.

நிறுவனம் ஒன்றின் செயலொழுங்கில் தலைவரின் தீர்மானம் மேற்கொள்ளும் திறன் என்பது அதனது முன்னோக்கிய நகர்வுக்குப் பங்காற்றுவதாக விளங்கும். வேறுபட்ட வகையிலான தீர்மானங்கள் மேற்கொள்ளும் திறன்கள் காணப்பட்ட போதிலும் முழுமையான தரவுகள் திரட்டுவதன் மூலம் தீர்மானம் மேற்கொள்ளுதலே மிகவும் இன்றியமையாததாகும். ஆக்கமலர்ச்சிச் சிந்தனை, பிரச்சினை தீர்த்தலுக்கு அவசியமானதாகும். பிரச்சினை தீர்த்தல் என்பது முகாமையாளர் அனைவரதும் அடிப்படையான செயற்பாடாகும். நம்பிக்கைமிக்க பிரச்சினை தீர்த்தல் உத்தியானது நிறுவன வெற்றிக்கு மிகவும் அவசியமானதாகும். சரியான செயலொழுங்கின் ஊடாகப் பிரச்சினையை அணுகுகின்றபோதே அதனைச் சிறப்பான முறையில் வெற்றி கொள்ள முடியும். இங்கு பிரச்சினைகளை வரையறுத்தல், மாற்றங்களை உருவாக்கல், தீர்வுகளை முவைத்தல் என்றவாறாக இது நகர்த்திச் செல்லப்படல் வேண்டும். பிரச்சினை யைத் தீர்ப்பதற்குக் கட்டளையிடல், முறை கூட்டிணைவுச் செயன்முறை, ஜனநாயக ரீதியிலான கலந்துரையாடல் என்பவற்றை மேற் கொள்ளவும் கல்விமுகாமையாளர்கள் தம்மைத் தயார்ப்படுத்தி இருத்தல் அவசியமானதாகும்.

கல்வி முகாமையாளரானவர் சிறியளவு மேற்பார்வை அல்லது ஊக்குவிப்புடன் அர்ப்பணிப்புமிக்க மேலான சேவை வழங்கும் ஒரு நபராக விளங்குதல் வேண்டும். வேகமாக மாற்றங்கள் நிகழ்ந்து வரும் சூழலில் கடமையாற்ற வேண்டிய நிலை உள்ளபோதும் தனக்குப் பொருத்தமான சூழலை உருவாக்கி அதனுள் அர்ப்பணிப்புடன் நேர்மனப் பாங்குடன் எத்தகைய கடமைகளையும் ஆற்றமுடியும் என்ற மனநிலையில் செயற்படுதல் முகாமையாளரிடம் வேண்டப்படும் திறன்களில் ஒன்றாகும்.

கட்டுரையாளர், அதிபர், கொழும்புத்துறை
துரையப்பா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகப் பிராணி

வியாபாரத்தை முன்னிட்டு ஒரு தடவை முல்லா பெரிய நகரம் ஒன்றுக்குச் சென்றிருந்தார். அங்கே அவருக்குத் துணையாக ஒருவன் வந்து சேர்ந்தான்.

அவனுக்கு எடுத்ததற்கெல்லாம் சந்தேகமாக இருந்தது.

அந்தப் பெரிய நகரத்தைப் பார்த்ததும் அவனுக்குப் பிரமிப்பாக இருந்தது.

சந்து பொந்தெல்லாம் மக்கள் இவ்வாறு நிரம்பி வழிகிறார்களே, இவ்வளவு கூட்டத்தில் மக்கள் எவ்வாறு தாங்கள் போக வேண்டிய இடத்தை அடையாளம் கண்டு கொள்வார்கள்? தாங்கள் தங்கியுள்ள விடுதியை எவ்வாறு கண்டு பிடிப்பார்கள்? அவ்வளவு ஏன், மக்கள் தங்களைத் தாங்களே கூட அடையாளம் கண்டு கொள்வது சிரமம் தான். இவ்வாறெல்லாம் அந்த சந்தேகப் பிராணி பேசிக் கொண்டேயிருந்தான்.



அந்த சந்தேகப் பிராணியும் முல்லாவும் அன்று இரவைக் கழிப்பதற்காக ஒரு விடுதியில் சென்று தங்கினர்.

அந்த விடுதியில் பலர் தங்கியிருந்தார்கள்.

"காலையில் நான் கண் விழிக்கும் போது என்னையே மறந்து விட்டால் என்ன செய்வது? முல்லா அவர்களே! எனக்கு ஒரு யோசனை சொல்லுங்கள் என்ற பரிதாபமாகக் கேட்டான் சந்தேகப் பிராணி.

முல்லா சிரித்துக்கொண்டே நண்பரே கவலைப் படாதீர். ஒரு கறுப்புத் துணியை உமது ஒரு காலில் சுற்றிக் கட்டி விடும். காலையில் உறங்கி எழுந்ததும் உமது காலைப் பாரும். கறுப்புத் துணி காலில் இருந்தால் நீர்தான் அது என்று அடையாளம் கண்டு கொள்ளலாம் – என்றார். சந்தேகப் பிராணிக்கு அது நல்ல யோசனையாகப்படவே தன் காலில் ஒரு கறுப்புத் துணியைக் கட்டிக் கொண்டு படுத்து விட்டான்.

அவனுக்கு அருகே படுத்திருந்த முல்லா அவன் நன்றாக உறங்கிய பிறகு அவன் கட்டியிருந்த கறுப்புத் துணியை அவிழ்த்துத் தம்முடைய காலில் கட்டிக் கொண்டார்.

ஐயோ நான் காணாமற் போய் விட்டேனே. என் காலில் இருந்த துணியைக் காணோமே என்று கூக்குரல் போட்ட சந்தேகப் பிராணி முல்லாவின் காலைப் பார்த்து விட்டு நான் அகப்பட்டுவிட்டேன் நீர்தான் நான் என்று சத்தம் போட்டான்.

ஏதோ குழப்பம் நடப்பதைக் கண்ட மற்றப் பயணிகள் அங்கே வந்து கூடி என்ன நடந்தது என வினவினர். நடைபெற்ற நிகழ்ச்சிகளை முல்லா மற்றவர்களுக்கு விளக்கினார்.

சந்தேகப்பிராணியைப் பார்த்து அந்த விடுதியில் தங்கியிருந்த எல்லாப் பிரயாணிகளும் வாய் விட்டுச் சிரித்தனர்.

பிறகு முல்லா அந்தச் சந்தேகப் பிராணிக்கு ஏற்பட்டிருந்த சந்தேகப் பிரமையை அகற்றி அவனுக்குத் தெளிவை உண்டாக்கினார்.



# வரலாற்றில் இன்றைய தினம்

1574 - மூன்றாம் ஹென்றி பிரான்சின் அரசரானார்.
1631 - பிரான்சின் முதலாவது செய்தித்தாளான கசட் டி பிரான்ஸ் வெளியிடப்பட்டது.
1806 - அமெரிக்க எதிர்கால ஜனாதிபதி அன்ரூ ஜக்சனால் சார்ள்ஸ் டிக்கின்சன் கொலை செய்யப்பட்டார். டிக்கின்சனால், ஜக்சனின் மனைவி இருதார மணம் புரிந்தவர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் எழுந்த தகராறினாலேயே இந்தக் கொலை இடம்பெற்றது.
1913 - முதலாம் பல்கன் போர் லண்டன் ஒப்பந்தத்துக்கு அமைய முடிவுக்கு வந்தது. இதனூடாக அல்பேனியா சுதந்திர நாடாகியது.
1917 - முதலாம் அலெக்ஸாண்டர் கிரீஸின் அரசரானார்.
1961 - நீண்ட கால டொமினிகன் சர்வாதிகாரி ரபல் ருஜிலியோ படுகொலை செய்யப்பட்டார்.
1972 - இஸ்ரேல் டெல் அவிவ்வில் ஜப்பானிய செம்படையால் லொட் விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 24பேர் சாவு. 78 பேர் காயமடைந்தனர்.
1974 - ஏயர் பஸ் ஏ300 பயணிகள் விமானசேவை தொடங்கப்பட்டது.
1998 - நிலநடுக்கம் தாக்கியதில் வட ஆப்கானிஸ்தானில் 5000 பேர்வரை சாவு.
1998 - பாகிஸ்தானில் நிலத்தின் கீழ் அணுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.
1999 - யாழ்.குடாநாட்டு புனரமைப்புப் பணிகள் தொடர்பாக ஐரோப்பிய கூட்டமைப்பு அதிருப்தி. தொடர்ந்து உதவி வழங்க உறுப்பு நாடுகள் மறுப்பு.
2002 - உலகக் கிண்ண உதைப்பந்தாட்டம் சியோலில் ஆரம்பமானது. தொடர்ந்து ஜப்பானிலும் போட்டிகள்.
2002 - 1988 ஆம் ஆண்டு நடுவானில் லொக்பீர் விமானம் வெடித்து. 259 விமானத்திலிருந்தோரும் தரையிலிருந்த 11 பேரும் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக லிபியா நஷ்ட ஈடு வழங்கச் சம்மதம்.
2002 - பிரிட்டிஷ் பாணியில் அதிகாரப் பகிர்வு வழங்க பிரதமர் ரணில் ஆலோசனை.
2003 - அரசின் அபிவிருத்திக் கவுன்சில் தொடர்பான ஆலோசனை புலிகளால் நிராகரிப்பு.
2003 - நிமலராஜன் கொலை தொடர்பாக நெப்போலியனைக் கைது செய்ய போதிய சாட்சியம் இல்லையென நீதிமன்றில் புலனாய்வு அதிகாரி தெரிவிப்பு.
2003 - மக்கள் வாழ்விடங்களில் படைமுகாம்ங்கள் உள்ளமையும் ஒரு மனித உரிமை மீறல்தான் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு.
2006 - புலிகள்மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தது.
2012 -லைபீரிய முன்னாள் ஜனாதிபதி சார்ள்ஸ் ரெயிலருக்கு செய்ரா லியோன் சிவில் போரின் போது மேற்கொண்ட வன் செயல்களுக்காக 50 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.
2013 - ஓரினபால் திருமணத் தடைச் சட்டத்தை நைஜீரியா கொண்டு வந்தது.

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





# கற்றுத்தரும் கணினி



கண்ணைக் கவரும் பெட்டிகள்!
கணினி வெல்லக் கட்டிகள்!
விண்ணை, மண்ணை இணைத்திடும்!
வெற்றி வாழ்வில் கொடுத்திடும்!

உயர்ந்த கல்வி கற்கலாம்
உலகை நாமும் பார்க்கலாம்!
அயர்வு இன்றி யாவரும்
அறிவைத் தினமும் பெருக்கலாம்!

இருந்த இடத்தில் இருந்துமே
எங்கும் செய்தி அனுப்பலாம்
பொருந்தும் வண்ண வாழ்வினைப்
புவியில் அதனால் அமைக்கலாம்

உலகச் செய்தி யாவையும்
உடலில் காக்கும் சாதனம்!
கலகம் இன்றிக் கணக்கையே
கற்றுக் கொடுக்கும் சீதனம்!

கணினி கையில் கொண்டுமே
கல்வி தன்னைப் பயிலுவோம்!
இனிமையான உலகினை
என்றும் வெல்ல முயலுவோம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காகமாக மாறினால் உரிமை எனும் தாகம் பெறலாம்....!

ஒரு கோடைக் காலம், பகல் நேரம். இப்போது நாம் எதிர் கொண்டுள்ள சூழ்நிலை,காலநிலை போன்றதான தருணம். எங்கும் கொளுத்தும் வெயில் மக்களையும், பறவைகளையும் துன்பத்துக்குள்ளாக்கியது. வெப்பத்தின் அகோரம் இயல்பாகவே தாகத்தை எல்லோருக்கும் ஏற்படுத்திவிட்டது.
எங்கும் நீர் நிலைகள் வற்றிவிட்டன.நீருக்கான தேடல் அதிகமாகவே சோர்வைத் தந்தது. பட்சிகள் அனைத்தும் தங்கள் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள அங்கும் இங்கும் அலைந்து திரிந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தக் கூட்டத்திடை இருந்த புத்திசாலிக் காகம் ஒன்று தண்ணீருக்காக அலைந்து திரியும் தன் பயணப் பாதையின் வழியிலே ஒரு வீட்டின் வெளியே வாய் குறுகிய குடுவை பாத்திரம் இருப்பதைக் கண்டுகொண்டு விட்டது.
தனது பயணத்துக்குச் சட்டன ஒய்வைக் கொடுத்துவிட்டு. வாய் குறு கிய பாத்திரம் இருக்கம் இடத்தை நோக்கி நகர்கிறது.தனது தலையை சாய்த்து பாத்திரத்தை நோக்குகின்றது. அப்பாதிரத்தில் கொஞ்சத் தண்ணீர் இருந்ததைக் கண்டு கொள்கிறது. மகிழ்வுறுகிறது. தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட காகம் குடுவையின் விளிம்பில் அமர்ந்து கொள்கிறது. தன் அலகால் தண்ணீரைக் குடிக்க முயற்சித்துப் பார்த்தது. ஆனாலும் அதன் அலகால் தண்ணீர் மட்டத்தை எட்ட முடியவில்லை. அதனால் பாத்திரத்தில் இருந்த நீரை காகத்தால் குடிக்க முடியவில்லை.
'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே' என காகம் மனவருத்தம் கொள்கிறது.இந்த அரிய சந்தர்ப்பத்தை விட்டால் வேறு இடத்தில் தண்ணீர் கிடைக்கவும் மாட்டாது. அதற்காக அலைந்து திரியவும் முடியாது என்பதை உணர்ந்து கொள்கிறது. எப்படியாவது இந்த நீரைக் குடித்துவிட வேண்டும். தன் தீராத தாகத்தை நிவர்த்திக்க வேண்டும் என் சிந்திக்கிறது.சுற்றுமுற்றும் பார்த்து யோசனை செய்கிறது. அருகேயே சிறிய கூழாங்கற்கள் கொட்டிக் கிடப்பதை அவதானிக்கிறது.சிந்தனை ஓட்டத்தின் வழி தீர்வொன்றுக்கான வழி தென்படுகிறது.





என்ன வழியது..? அலகின் உதவி கொண்டு ஒவ்வொரு கூழாங்கற்களாக எடுத்துக் கொள்வது. அதை நீர் உள்ள குடுவையில் போடுவது என்பதுதான் அந்த வழி.
அந்த முயற்சியின் வழி காகமும் கூழாங்கற்களை ஒவ்வொன்றாக குடுவையில் போடுகிறது.அவை குடுவையினுள் விழ..விழ..அதிலுள்ள நீரின் மட்டம் உயரத் தொடங்கியது. ஒரு கட்டத்தில் குடுவையின் வாயருகே நீர் வந்து சேர்ந்தது.
பிறகென்ன முயற்சிக்கான பயன் கிடைத்தது.நீரில் தனது அலகை வைத்து தாகம் தீர நீரை அருந்தி மகிழ்ந்தது.
இங்கே இந்தக் கதையின் சாராம்சம் மூலம் எமக்கான ஓர் தெளிவு தரப்படுகின்றது.எந்தப் பிரச்சினைகளானாலும் அதற்கென ஒரு தீர்வு உண்டு என்பதுதான் அது. அதற்காக நாம் சுய புத்தியை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.செயல் முனைப்போடு சிந்தித்து செயலாற்ற வேண்டும் என்பது சூட்சுமமாக சொல்லப்படுகின்றது. இந்த நிலையிலே தமிழர் தரப்பாக சிந்தித்துச் செயலாற்ற வேண்டியவர்களாகவும் அதன் வழி திடமாக ஒற்றுமையோடு பயணித்து பிரச்சினைகளுக்கான தீர்வைச் சரியான திட்டமிடலோடு பெற வேண்டியவர்களாகவும் நாம் இருந்து வருகின்றோம்.
உண்மையிலே மிகப் பெரிய மனித அவலங்களை ஓர் இனத்துக்கெதிராக புரிந்துவிட்டு எந்தவித சலனங்களுக்கான அறிகுறிகளுமின்றி தம்பாட்டில் தன் வழியே தனி வழி என்ற ரீதியில் அரசு நகர்கின்றது-நகர்ந்திருக்கிறது-நியாயமான அபிலாசைகளை வேண்டியவர்கள், அதற்கான நீண்ட தருணங்கள் போராட்டத்தினூடே பயணித்திருந்தவர்கள் என்ற நியாயபூர்வமான புரிதலின்றி பயங்கரவாதத்தை ஒழித்தோம்.அதனை ஒடுக்கி நாட்டை காத்தோம் என்ற ரீங்காரத்தின் சங்கமத்தில் அடிமைத்தனம் என்ற மெத்தனத்தில் நகர்ந்திருக்கின்றனர்.
தமிழர் தொடர்பிலான தீர்வுத் திட்டம் நகலின்றி அசலாகும் என்ற போர்வையில், நல்லாட்சி என்ற கோர்வையின் காட்சிப்படுத்தலில் தாம் தப்பித்திருப்பதற்கான காரண காரியங்களை கச்சிதமாக செய்கின்றனர். அரசு மீதான, அதன் இராணுவத்தின் மீதான தப்பபிப்பிராயங்களை,குற்றச்சாட்டுக்களை களைந்து தம்மை நல்லவர்களாக நிலை நிறுத்துவதற்கான குறைந்தளவான சந்தர்ப்பங்களைகூட திட்டமிட்ட- இராஜ தந்திரம் என்ற கூழாங் கற்களாக எடுத்துக் கொண்டு முன்நகர்ந்து செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக வெளிவிவகாரப் பயணங்களில் தங்களுக்கான பயனுறுதியை அரசு நிலை நிறுத்திக் கொள்கிறது. அது தவிர்ந்து உள் நாட்டிலே வார்த்தைகளின் வர்ணமிடலில் நல்லாட்சி என்ற சேடமிழுத்தலுக்கு நல்லிணக்கம் என்ற அலங்காரங்களை செய்துவைத்து மேற்குலகில் இருப்பவர்களின் பார்வையை இயல்பாகவே தன் பக்கம் திருப்பிவிடுகிறது.
மொழி,மதம் சார்ந்த உரிமைகள் அனைத்து இனங்களுக்கும் உண்டு. அது சமமானது.பொறுப்புக் கூறல் தொடர்பிலான திடீர் கூட்டங்கள்,ஒன்றிணைவுகள் அதிலும் வெளிநாட்டர் ஆலோசனைக்குரியார் மட்டும் தான் என்ற ம[illegible] திணிப்பு என்பவற்றினூடு காலத்தை நகர்த்து[illegible]

# அரிச்சந்திரனும் யோபுவும்

சாமஸ்ரீதேசமானிய பா.பாலச்சந்திரன்

இந்துசமயபுராணகதையொன்றும் பைபிள் கதையொன்றும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருந்தால் எவ்வளவு ஆச்சரியம்? இந்திய சூழலில் ஒன்றும் இஸ்ரவேல் சூழலில் ஒன்றும் தோன்றியுள்ளன. கதாநாயகர்கள், அவர்களை சுற்றி ஏற்பட்ட சூழ்ச்சி என்பவை ஒரே விதமானவை. முடிவும் அதே மாதிரியே.
இரண்டும் சமய சம்பந்தமானவை. அரிச்சந்திரன் ஓர் அரசன்! உண்மை விரும்பி, சிவபக்தன், கொடை வள்ளல், நீதிமான். யோபுவோ ஒரு மிகப்பெரிய மனிதன். அவனிடம் பல்லாயிரம் கால்நடைகளும் அனேக மனிதரும் இருந்தனர். அவன் கடவுளுக்கு பயந்தவனும் உத்தமனுமாய் இருந்தான். முன்னவர் பொய் சொல்லார். பின்னவர் கடவுளைக்குறை கூறமாட்டார். பெரும் விசுவாசி, சன்மார்க்கன், பொல்லாப்புக்கு விலகி நடப்பவன்.
இவர்களின் எதிரிகளாய் இருப்பவர்களுக்கும் இவர்களுக்கும் நேர் பகை ஒன்றும் கிடையாது. அந்த எதிரிகளின் எதிராளிகள் இவர்களை நல்ல மாதிரி கூறியதால் அவர்களின் கூற்றை பொய்யாக்கவே இவர்களுக்கு துன்பத்தைச் செய்தனர். இதை சோதனை என்பதோ அல்லது புடம்போடுதல் என்பதோ யாரறிவர். இருவரின் கதைக்கும் சூழ்ச்சிக்கும் களம் ஏற்பட்ட விதம் ஒரே மாதிரி தான் இந்திரனுடைய சபையில் அவன் சபையோரைப் பார்த்து கேட்கிறான் "பூவுலகில் வாய்மைக்கும் நூலறிவுக்கும் மனத்தூய்மைக்கும் பெயர் பெற்றவர் யார்? இதற்கு வசிஷ்டர் அரிச்சந்திரன் என்று கூறினார். இதைக் கேட்டு விஸ்வாமித்திரன் கோபம் கொண்டு அவன் பொய் கூறுவான் எனச் சொல்லியே அவனுக்கு இன்னல் பல செய்தார்.
விஸ்வாமித்திரர், இந்திரன் அவையில் வசிஷ்டருடன் நிகழ்த்திய எதிர்வாதத்தின் மூலம் அரிச்சந்திரனை சோதிக்க அதிகாரம் பெற்றிருந்தார்.
அதேபோல் சாத்தானும் கர்த்தரின் சமூகத்தில் யோபுவை சோதிக்க அதிகாரம் பெற்றுவிட்டான். அவனுக்கு உண்டானவை எல்லாம் உன்கையில் அவனை மட்டும் விட்டுவிடு என்றார் கர்த்தர். உடனே அவன் யோபுவின் பிள்ளைகள் கால்நடைகள் வேலையாள்கள் போன்றவற்றை அழித்துவிட்டான். அப்போதும் அவன் கர்த்தரை குறை கூறவில்லை. மீண்டும் கர்த்தர் சாத்தானிடம் யோபுவைப் பற்றி கேட்டார். அதற்கு அவன் தனக்கு ஒன்றும் வராத விடத்து யோபு ஏனும்மை தூஷிக்கிறான் என்றான். அதற்கவர் இதோ அவன் உன் கையில் அவன் பிராணனை மட்டும் தப்பவிடு என்றார்.
உடனே அவன் யோபுவுக்கு உடலில் கட்டுகளை வரச்செய்தான். யோபுசாம்பல் மேட்டில் இருந்து கொண்டு ஓட்டால் சொறிந்தான். இதைக்கண்ட மனைவி யோபுவை பார்த்து நீர் இன்னமும் உமது உத்தமத்தில் இருக்கிறீரோ தேவனை தூஷித்து விட்டு ஜீவனை விடும் என்றாள். அதற்கு அவன் நீ பைத்தியக்காரி போல் பேசுகிறாய் தேவனுடைய கையால் நன்மை பெற்ற நாங்கள் தீமையும் பெறவேண்டாமோ என்றான். யோபு கூறியவை மாணிக்கவாசகரின் நன்றே செய்வாய் பிழை செய்வாய் என்ற கருத்தை ஞாபகப்படுத்துகிறது. யோபு பாவப்படாத வார்த்தைகளை பேசினான்.
அங்கே யோபு சீரழிந்த மாதிரி இங்கே அரிச்சந்திரனும் சீரழிக்கப்படுவதைப் பாருங்கள். இங்கு விஸ்வாமித்திரர் அங்கு சாத்தான் செயற்பட்டதைப் போல் செயற்படுவதை அவதானிக்கலாம். அரிச்சந்திரனின் கஷ்டங்களுக்கு சூத்திரதாரி விஸ்வாமித்திரர்தான். சீரும் சிறப்புமாக வாழ்ந்த அரசனான அவனை பொய் சொல்லவைக்க முதல் நடவடிக்கையாக பல முனிவர்களைப் பெரும் யாகம் இயற்ற பெரும் தொகை பொருள் வேண்டும்படி ஏவினார். ஏனெனில் வாக்குறுதியை பெற்றுவிட்டு அவனை வேறு விதத்தில் பொருள்களை இழக்கப் பண்ணிவிட்டு பின்பு பெரும் தொகை கேட்டால் அவன் கொடுக்கமுடியாது பொய் கூறுவான் என்பதே முனிவரது திட்டமாகும். எனவே தவவலிமையால் மிருகங்களைப் படைத்து அரசனது நாட்டு வளத்தை அழிக்க முயன்றார். அவையாவும் அழிக்கப்பட்டன. பின்பு இரு அழகிகளைப் படைத்து அவனிடம் அனுப்பினார். அந்தப் பெண்களை அவன் அவமதித்ததாகக் கூறி அவர்களை ஏற்கும்படி கூறினார். அதை அரசன் மறுக்க அவனை புலையனுக்கு அடிமையாகுக எனச்சபித்தார்.



இந்த நிகழ்வுக்கு முன் அரசன் தீய சொர்ப்பனமொன்று கண்டார். அதை மந்திரியாரிடம் கூற, அவர் நீர் நாட்டை இழக்கப் போகிறீர் என்று விளக்கம் சொன்னார். அப்போது அரசியார் சந்திரமதி அரசனைப் பார்த்து எத்தகைய இடர்வரினும் நீர் மனம் கலங்காது நீதியை செய்யும் என்றாள். யோபுவின் மனைவி அவனுக்கு இவ்வாறு தைரியம் அளிக்கவில்லை. ஜீவனைவிடும் என்றாள். மேலும் யோபுவும் பல கனவுகளைக் கண்டு அஞ்சியதாகக் கூறியுள்ளார். இருவரும் கனவு காண்பதிலும் ஓர் ஒற்றுமை. யோபு தனக்கு நேரிட்ட அவலநிலையைப் பற்றி ஏன் எதற்கு இப்படி நேரிட்டது என்று அழுது புலம்புவதைப்போன்று இங்கேயும் அரசனும் அரசியும் அழுவதைக் காணலாம். ஏனெனில் அவர்களுக்கு அந்தச் சூழ்ச்சியைப் பற்றி அப்போது ஒன்றும் தெரியாது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவ்வுலகில் படித்தவர்கள் அசுத்தம் செய்கிறார்கள்! படிக்காதவர்கள் சுத்தம் செய்கிறார்கள்!**



**குடித்து விட்டு வந்த கணவன் தனது மனைவியின் திட்டை சமாளிக்க மடிக்கணினியை எடுத்துக் கொண்டு வேலை செய்ய துவங்கினான்...!!**

**மனைவி: குடிச்சீங்களா?**

**கணவன்: இல்லம்மா!**

**மனைவி: "குடிகார சனியனே" அப்புறம் ஏன் சூட்கேசை திறந்து வைச்சு டைப் பண்ணுறாய்...!**

படித்துறை பாண்டி

எல்லா சோகத்துக்கும் சரியான தீர்வா நிம்மதியான தூக்கமா மட்டும்தான் இருக்கும். ஆனா கண்டிப்பா நிரந்தரமான தூக்கமா இருக்கவே முடியாது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிரியும் இடம் மாறிச் செல்லும் நிலை உருவாகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். இலாபம் திருப்தியளிக்கும். குடும்பத்தினருடன் விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**இடபம்:** நண்பரின் ஆலோசனை ஊக்கம் தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். இலாபம் கூடும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். பணியாளர்களுக்குப் பாராட்டு, வெகுமதி கிடைக்கும்.

**மிதுனம்:** பிறருக்கு உதவுவதில் முன்யோசனை தேவை. தொழில், வியாபாரத்தில் இடையூறைச் சரி செய்வது நல்லது. வருமானம் சுமாராக இருக்கும். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை உதவும்.

**கடகம்:** வழக்கத்துக்கு மாறாக பணிச்சுமை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் மிதமாக இருக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை உண்டாகும்.

**சிங்கம்:** கடந்த கால உழைப்பின் பலனைப் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பூர்வீக சொத்து மூலம் உபரி வருமானம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் தாராள முன்னேற்றம் உருவாகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். மாமன், மைத்துனருக்கு தேவையான உதவி செய்வீர்கள்.

**துலாம்:** எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரம் சீராக கூடுதல் உழைப்பு அவசியம். சுமாரான இலாபம் கிடைக்கும். சொத்து, ஆவணம் கவனமுடன் பாதுகாக்கவும்.

**விருச்சிகம்:** சிலரது பேச்சு உங்களைச் சங்கடப்படுத்தலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். உடல்நலனில் கவனம் தேவை.

**தனுசு:** சுப விடயத்தில் நல்ல முடிவு கிடைக்கும். வாழ்க்கைத் தரம் உயரும். சமூகத்தில் புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் உயரும். அரசியல்வாதிகளுக்கு எதிரி தொல்லை குறையும்.

**மகரம்:** முக்கிய பணி நிறைவேற குடும்பத்தினர் உதவுவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை ஏற்படும். மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தால் சேமிப்பர். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**கும்பம்:** பொறுப்புணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வருமானம் அதிகரிக்கும். உறவினரால் நன்மை கிடைக்கும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**மீனம்:** போட்டி, பந்தயத்தில் ஈடுபட வேண்டாம். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். இலாபம் சுமாராக இருக்கும். அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம்.

ஒரு சமயம் ஸ்பெயின் நாட்டு அரசர், இளைஞன் ஒருவனை டென்மார்க் நாட்டுக்குத் தூதுவராக அனுப்பினார். டென்மார்க் மன்னர் அந்த இளைஞனைப் பார்த்து, "ஸ்பெயின் நாட்டில் மனிதர்களே இல்லை போலிருக்கிறது. அதனால்தான் ஸ்பெயின் மன்னர் தாடி முளைக்காத ஒரு சிறுவனை எனது நாட்டுக்குத் தூதுவராக அனுப்பி இருக்கிறார்" என்று கிண்டலாகக் கூறினார். அதைக் கேட்ட அந்த இளைஞன் டென்மார்க் மன்னருக்குச் சரியான பாடம் கற்பிக்க எண்ணினான். உடனே அவன், "அரசே... அறிவு என்பது தாடியில் தான் இருக்கிறது என்ற தங்களின் கருத்து; எமது அரசருக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் எனக்குப் பதிலாக ஓர் வெள்ளாட்டை இங்கு தூதுவராக அனுப்பியிருப்பார்"– என்றான். அதைக் கேட்டதும் டென்மார்க் மன்னருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்தார்.

படித்ததில் பிடித்தது



# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | 4 | | | 6 |
| | 6 | 5 | | | 3 | 7 | | |
| | | | 2 | | | | | 3 |
| | 9 | 8 | | 5 | | 6 | | 2 |
| | 7 | | | | | | 1 | |
| 6 | | 1 | | 4 | | 5 | 3 | |
| 1 | | | | | 8 | | | |
| | | 6 | 4 | | | 2 | 8 | |
| 8 | | | 7 | | | | | 9 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 7 | 1 | 3 | 5 | 6 | 4 | 8 |
| 8 | 1 | 6 | 4 | 2 | 9 | 7 | 5 | 3 |
| 5 | 4 | 3 | 8 | 7 | 6 | 9 | 1 | 2 |
| 6 | 5 | 9 | 3 | 4 | 8 | 2 | 7 | 1 |
| 4 | 3 | 2 | 7 | 6 | 1 | 5 | 8 | 9 |
| 7 | 8 | 1 | 5 | 9 | 2 | 4 | 3 | 6 |
| 3 | 6 | 4 | 9 | 8 | 7 | 1 | 2 | 5 |
| 1 | 2 | 8 | 6 | 5 | 4 | 3 | 9 | 7 |
| 9 | 7 | 5 | 2 | 1 | 3 | 8 | 6 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




"பிரேமம்" படத்தில் நடித்த சாய் பல்லவி தற்போது மருத்துவப் பட்டம் பெற்றிருக்கிறார். மீண்டும் அவர் நடிக்க வருவாரா என்பது பற்றி கேட்டபோது, வைத்தியர் பட்டம் பெற்றது எனது வாழ்வில் மறக்க முடியாது. அதன் ஒவ்வொரு நொடியையும் நான் ரசித்து மகிழ்ந்தேன். நடிப்பா? வைத்தியராகப் பணியாற்றுவதா? என்பது பற்றி எதையும் திட்டமிடவில்லை. ஆனாலும் இன்னும் நல்ல கதைகள் வந்து கொண்டிருக்கின்றன. நடிப்பைத் தொடர விரும்புகிறேன். அதேசமயம் வைத்தியத் தொழிலையே பெரும்பகுதி சார்ந்திருப்பேன். அதில் எந்த சந்தேகமும் இல்லை. படிப்பை முடிப்பதற்காக நடிப்பிலிருந்து ஒதுங்கி சில காலம் ஆகிவிட்டது. ஆனாலும் என்னை இணையத் தள பக்கத்தில் தொடர்பு கொள்ளும் ரசிகர்கள், நடிகை என்ற முறையிலேயே கருத்து தெரிவிக்கிறார்கள். அது எனக்கு ஒரு வகையில் சந்தோசம் தான். நிறைய வாய்ப்புகள் வந்தாலும் "பிரேமம்" படத்தில் அமைந்த மலர் மிஸ் கதா பாத்திரம் போல் நல்ல கதாபாத் திரத்தை எனக்கு இறைவன் அமைத்துக் கொடுப்பார் என்று நம்புகிறேன். -இவ்வாறு சாய் பல்லவி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 800 | 700 | 800 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 300 | 300 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 500 | 600 | 400 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 800 | 600 | – |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 400 | 400 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 500 | 500 | – | 420 |
| முரல் | 300 | 500 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 450 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | 400 | 380 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 300 | 350 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 120 | 150 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 250 | 250 | 300 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 300 | 300 | 190 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 350 | 300 | 150 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 400 | – | – |
| வாழை | 100 | 100 | 200 | 400 | 300 | – | – |



# மிளகு தட்டை

## தேவையானவை

அரிசி மா – 1 கோப்பை
உளுத்தம் பருப்பு மா கால் கோப்பை
கடலை பருப்பு – 1 சுண்டு
பெருங்காயம் – கால்த்தேக்கரண்டி
கருப்பு மிளகு – 2 தேக்கரண்டி
கறிவேப்பிலை – தேவையான அளவு
உப்பு – தேவையான அளவு
பேக்கிங் சோடா – ஒரு சிட்டிகை
எண்ணெய் – தேவையான அளவு
தண்ணீர் – அரைக்கப்

## செய்முறை

முதலில் கடலைப் பருப்பை ஊற வைக்கவும். ஒரு சட்டியில், அரிசி மா சேர்த்து வறுக்கவும், பின் அதை ஒரு கிண்ணத்தில் மாற்றவும், அதே சட்டியில் உளுத்தம்பருப்பு மா சேர்த்து லேசாக வறுத்தெடுத்து அதே கிண்ணத்தில் அதை மாற்றவும் அதில் கறிவேப்பிலை, கொரகொரப்பாக அரைத்து வைத்துள்ள மிளகு, ஊறவைத்துள்ள கடலைப் பருப்பு, பெருங்காயம், உப்பு, பேக்கிங் சோடா சேர்த்து தண்ணீர் விட்டு நன்றாகக் கிளறவும். இவற்றில் சிறிது சூடான எண்ணெய் விட்டு பிசையவும். பின் அவற்றை சிறு உருண்டைகளாக உருட்டி வைக்கவும்.

ஒரு பிளாஸ்ரிக் தாள் அல்லது எண்ணெய் கவர் எடுத்து உருண்டையை நடுவில் வைத்து அவற்றை மூடி ஒரு கிண்ணத்தை பயன்படுத்தி அதன்மேல் அழுத்தவும். தட்டை வடிவம் வந்த பின் அதைக் கவனமாக எடுத்துச் சூடான எண்ணெயில் போட்டு சில நிமிடங்கள் வறுக்கவும். சுவையான மிளகு தட்டை தயார்.


**நாளை**
**வைகாசி-18**
செவ்வாய்க்கிழமை - 31.05.2016
திதி: தசமி மு.இ.08.59 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி
மு.இ.09.25 வரை
ராகுகாலம்: 02.52-04.22 வரை
சுபநேரம்: 10.22-11.52 வரை

# சமையலில் செய்யக் கூடாதவை

- ரசம் அதிகமாக கொதிக்கக் கூடாது.
- தேநீருக்குப் பால் நன்றாக கலக்கக் கூடாது.
- மோர்க்குழம்பு ஆறும் வரை மூடக்கூடாது.
- கீரைகளை மூடிப்போட்டு சமைக்கக்கூடாது.
காய்கறிகளை ரொம்பவும் பொடியாக நறுக்கக் கூடாது.
- சூடாக இருக்கும்போது, எலுமிச்சம்பழம் பிழியக்கூடாது.
- தக்காளியையும், வெங்காயத்தையும் ஒன்றாக வதக்கக்கூடாது.
- குளிர்ச் சாதனப் பெட்டியில் வாழைப்பழமும், உருளைக்கிழங்கும் வைக்கக் கூடாது.
- பெருங்காயம் தாளிக்கும் போது, எண்ணெய் நன்றாக கொதிக்கக் கூடாது.
- தேங்காய்ப்பால் சேர்த்தவுடன், குழம்பு அதிகமாக கொதிக்கக் கூடாது.
- குலோப்ஜாமூன் பொரித்தெடுக்க நெய்யோ, எண்ணெயோ நன்றாக கொதிக்கக்கூடாது.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 100 | 120 | 140 | 80 | – | 40 | 70 |
| கத்தரி | 200 | 160 | 200 | 200 | 160 | 200 | 70 | 120 |
| கரட் | 250 | 140 | 100 | 160 | 160 | 250 | 70 | 160 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 60 | 60 | 80 | 40 | 40 |
| பயிற்றை | 150 | 150 | 170 | 100 | 120 | 240 | 90 | 200 |
| பாகல் | 200 | 150 | 300 | 180 | 140 | 120 | 120 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 120 | 120 | 80 | – | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 80 | 90 | 100 | 100 | 75 | 70 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 100 | 160 | 120 | 200 | 100 | 140 |
| பூசணி | 40 | 40 | 40 | 60 | 40 | 60 | 15 | 40 |
| தக்காளி | 200 | 180 | 200 | 200 | 180 | 240 | 140 | 190 |
| வாழைக்காய் | 50 | 40 | 30 | 40 | 40 | 80 | 35 | 40 |
| கீரை | 50 | 40 | 40 | 30 | 40 | 40 | 25 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 35 | 30 | – | 20 | 15 |
| பச்சை மிளகாய் | 300 | 300 | 400 | 400 | 300–400 | 600 | 400 | 250 |
| புடோல் | 100 | 80 | 140 | 120 | 80 | 120 | 30 | 80 |
| கோவா | 140 | 160 | 180 | 160 | 140 | 240 | 90 | 80 |
| வெண்டி | 150 | 120 | 140 | 120 | 120 | 160 | 50 | 100 |
| போஞ்சி | 250 | 180 | 200 | 180 | 160 | 300 | – | 300 |
| லீக்ஸ் | 200 | 180 | 160–200 | 160 | 220 | 240 | 100 | 130 |
| தேங்காய் | 40 | 25 | 50 | 30–40 | 30–40 | 40 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 120 | 100–110 | 100 | 75 | 120 |
| தேசிக்காய் | 400 | 350 | 300 | 300 | 300–400 | 200 | 350 | 300 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 200 | – | 300 | 180 | 300 | 240 | – | 180 |
| இராசவள்ளி | 160 | – | 160 | 160 | 160 | – | 110 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 100 | 140 | 200 | 200 | 150 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்



## எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் சாம்சுங் கலக்சி நோட் 6

கைபேசி உலகில் முன்னணியில் திகழும் சாம் சுங் நிறுவனம் முற்றிலும் மாறுபட்ட வன் பொருள்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட சாம்சுங் கலக்சி நோட் 6 எனும் புதிய தொடுதிரைக் கைபேசி ஒன்றை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

இதில் முக்கிய அம்சமாக ஐரிஷ் ஸ்கானர் காணப்படுகின்றது. ஐரிஷ் ஸ்கானர் என்பது ஓர் உயிரியல் தொழில்நுட்பமாகும். இதன் உதவியுடன் ஒருவரது கண்களை ஸ்கான் செய்ய முடியும். இதன் ஊடாக இரத்தம், இரத்த நாளங்கள் தொடர்பான தகவல்களை அறிந்துகொள்ள முடியும்.

12 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்பினை ஏற்படுத்துவதற்கான கமரா என்பவற்றினையும் இது உள்ளடக்கியுள்ளது.

இந்தக் கைபேசியானது எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் அறிமுகம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.



## மைக்ரோமேக்ஸின் புதிய கைபேசி

மைக்ரோமேக்ஸ் நிறுவனம் அதன் புதிய கேன்வாஸ் இவோக் எனும் தொடுதிரைக் கைபேசியை அறிமுகப்படுத்தியுள்ளது.

டுயல் சிம் ஆதரவு கொண்ட மைக்ரோமேக்ஸ் கேன்வாஸ் அண்ட்ரொய்ட் 5.0 லாலிபொப் மூலம் இயங்குகிறது.

இது கொர்னிங் கொரில்லா கிளாஸ் 3 பாதுகாப்புடன் 267 பிக்சல் அடர்த்தி மற்றும் 720ஓ1280 பிக்சல்கள் தீர்மானம் கொண்ட 5.5 இன்ச் எச்டி ஐபிஎஸ் திரையைக் கோண்டுள்ளது.

இதில் மைக்ரோ றீம் அட்டை வழியாக 200ஜிபி வரை விரிவாக்கக்கூடிய 16ஜிபி உள்ளடங்கிய சேமிப்பு உடன் வருகிறது.

13 மெகா பிக்சல் பின்புற ஒட்டோஃபோகஸ் கமரா மற்றும் ஃப்ளாஷ் பிளஸ் கொண்ட 5 மெகாபிக்சல் முன் எதிர்கொள்ளும் கமரா என்பவற்றையும் கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லெஷர் வேல்ட்டின் வியத்தகு காட்சிகளைக் கண்டு பரவசமடைந்த சிலிங்கோ லைப் காப்புறுதிதாரர்கள்

சிலிங்கோ லைப் காப்புறுதி நிறுவனம் அண்மையில் இலங்கையின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த சிலிங்கோ லைப் காப்புறுதிதாரர் குடும்பங்களை அவிசாவளையிலுள்ள பல்வகை பொழுதுபோக்கு வளாகத்துக்கு அழைத்துச் சென்று ஒரு நாள் முழுவதும் அவர்கள் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பிரச்சினைகள், பொறுப்புக்கள் அனைத்தையும் மறந்து மகிழ்ச்சியாகக் களிக்க வைத்தபோது லெஷர் வேல்ட் இன் ஏகாந்தமான சூழல் அவர்கள் அனைவரையும் மெய்மறக்க வைத்தது.

9ஆவது வருடமாக தற்போது இடம்பெற்ற ஆயுள் காப்புறுதி முன்னோடிகளின் குடும்ப சவாரி மெகா ஊக்குவிப்புத் திட்டத்தில் 500 காப்புறுதிதாரர் குடும்பங்களின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு இவ்வாறு அழைத்து செல்லப்பட்டனர். தேர்ந் தெடுக்கப்பட்ட 5 குடும்பங்களின் உறுப்பினர்கள் அன்றைய நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக சிறகுகள் படபடக்கும் ஹெலிகொப்டர்களில் வானிலிருந்து கீழே தெரியும் காட்சிகளைப் பார்த்து ரசித்தவாறே லெஷர் வேல்ட்டைச் சுற்றிலும் வலம்வந்து குறுகியதூர சவாரியில் ஈடுபட்டு மகிழ்ந்தனர்.

2016ஆம் ஆண்டுக்கான இந்த முதற் கட்ட சவாரியை அடுத்து இம்மாத இறுதியில் சகல செலவுகளும் வழங்கி வெளிநாட்டு சுற்றுலாக்களில் அழைத்தச் செல்லப்படுவார்கள். ஜூன் மாதம் மேலும் 65 காப்புறுதிதாரர் குடும்பங்களில் 50 குடும்பங்கள் சிங்கப்பூருக்கும் 10 குடும்பங்கள் டுபாய்க்கும் 5 குடும்பங்கள் ஜேர்மனிக்கும் அழைத்துச் செல்லப்படுவார்கள். பய்ண ஆரம்பத்தில் சிலிங்கோ லைப் பணிப்பாளரும் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியுமான துூர ரணசிங்க கருத்து தெரிவிக்கையில், இந்த குடும்ப சவாரி ஊக்குவிப்புத் திட்டம் இலங்கையில் மிகவம் பிரசித்தி பெற்ற வாடிக்கையாளர் ஊக்குவிப்புத் திட்டமாகும் என்று கூறினார்.

கடந்த 12வருடங்களுக்கு மேலாக இலங்கையில் ஆயுட் காப்புறுதி முன்னோடியாக இந்த நிறுவனம் விளங்கி வருகிறது என்று ரணசிங்க தெரிவித்தார். ஆயுட் காப்புறுதி அனுகூலங்களுக்கு மேலதிகமாக காப்புறுதிதாரர்களுக்கு குடும்ப சவாரி போன்று வழங்கப்படும் பல்வேறு வாய்ப்புக்கள் நிறுவனத்தின் வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளன என்றும் அவர் கூறினார்.

லெஷர்வேல்ட்டில்சிலிங்கோலைப்காப்புறுதிதாரர்களுக்கு பல்வகை பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுடன் வளாகத்தில் உணவும் மென்பானங்களும் போக்குவரத்துக்கான வசதிகளும் வழங்கப்படுகின்றன. ஹெலிகொப்டர் சுற்றுலாவில் வெற்றி பெற்ற ஐந்து அதிஷ்டக்கார காப்புறுதிதாரர்கள் குடும்பங்களும் பாணந்துறை, வவுனியா, பேருவளை, திருகோணமலை, திஸ்ஸமஹாராம ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாவர்.



இந்த வருட குடும்ப சவாரி ஊக்குவிப்புத் திட்டத்தில் இது வரை 2,260 பேர் வெளிநாட்டு விடுமுறை சுற்றுலாக்களை அல்லது மனமகிழ்வுச் சுற்றுலாக்களையும் வென்றெடுத்துள்ளனர். இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை மொத்தம் 17,000 பேர் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர். சிலிங்கோ லைப் குடும்ப சவாரி ஊக்குவிப்புத் திட்டத்தில் இலங்கை திரைப்பட நட்சத்திரங்களான சிறியந்த மெண்டிஸ், சஞ்ஜீவனி வீரசிங்க, ரூபவ் றொஷான் ரணவண, அவரது மனைவி குஷ்லானி ஆகியோரும் உள்ளூர் சுற்றுலாக்களிலும் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களிலும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


2004ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையில் சந்தை முன்னோடியாக விளங்கி வரும் சிலிங்கோ லைப் பில் ஏறத்தாழ 10 இலட்சம் பேர் ஆயுள் காப்பீட்டைப் பெற்றுள்ளார்கள். உள்ளூர் காப்புறுதித் துறையில் உற்பத்தி ஆய்வும் அபிவிருத்தியும், வாடிக்கையாளர் சேவை, தொழில்சார் விருத்தி நிறுவன சமூக பொறுப்புணர்வுத் திட்டம் ஆகியவற்றில் கம்பனியின் பணிகளுக்கு பெயர் பெற்று விளங்குகிறது.(தி)

# இலங்கை தொலைத்தொடர்பாடல் துறையின் உருநிலைமாற்றப் பயணத்தின் அனுபவம்

நாட்டின் முன்னணி தகவல் தொடர்பு தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான சிறிலங்கா ரெலிகொம், உலக தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல் சமூக தினத்தையொட்டி கடந்த 17 ஆம் திகதி புதிய தேசிய தொலைத்தொடர்பாடல் அருங்காட்சியகத்தை திறந்து வைத்துள்ளது.

பாதுக்கையில் அமைந்துள்ள இந்த அருங்காட்சியகத்தில், பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலிருந்து இன்றுவரை பயன்படுத்தப்பட்ட தொலைத்தொடர்பாடல் கருவிகள் மற்றும் சாதனங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை, இங்குவரும் பார்வையாளர்களுக்கு இலங்கையில் தொலைத்தொடர்பாடல் துறையில் படிப்படியாக ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களை விளக்கமாகச் சொல்கின்றன.





இந்த அருங்காட்சியகத்தின் முக்கிய நோக்கமானது, நாட்டின் தொலைத்தொடர்பாடல்கள் துறையின் பாரம்பரியத்தையும் மரபையும் பாதுகாத்து, இந்தத் தேசிய பொக்கிஷத்தை நாட்டின் அனைத்துக் குடிமக்களுடனும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதேயாகும். இந்த அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தொலைத் தொடர்பாடல் சம்பந்தமான கருவிகள், உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் இலங்கையில் சமூக, பொருளாதார தொழில்நுட்ப அடிப்படையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் தொலைத்தொடர்பாடல் எவ்விதம் பரிணாம வளர்ச்சியடைந்து வந்தது என்பதைத் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின்போது தொலைத்தொடர்புத் துறையில் பயன்படுத்தப்பட்ட கருவியும் இங்குண்டு, நவீன காலத்து ஸ்மார்ட் ஃபோனும் உண்டு. பார்வையாளர்கள் இந்த இரண்டு காலகட்டத்து தொழில்நுட்பங்களையும் பார்த்து வியப்பதுடன், அவற்றை ஒப்பிட்டு இரசிக்கவும் கூடியதாக இங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 150 வருடங்களாக நீண்டு வந்திருக்கும் இந்தத் தொலைத்தொடர்பாடல் பரிணாமவளர்ச்சியை நேரில் பார்ப்போருக்கு இது ஒரு கனவுக்காட்சியாக விரிகின்றது.

இந்த அருங்காட்சியகம் இலங்கையின் சுற்றுலாத் துறைக்கும் ஆதரவளிக்கும் என ஸ்ரீலங்கா ரெலிகொம் நம்புகிறது. வருங்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகளை இந்த அருங்காட்சியகம் கவர்ந்திழுக்கும். உலக அருங்காட்சியகங்களின் வடிவமைப்புகளைப் பிரதிபலிக்கும் அதேநேரம், நவீனகாலத்து கட்டடக் கலையையும் வெளிப்படுத்துவதாக இந்த தேசிய தொலைத்தொடர்பாடல்கள் அருங்காட்சியகம் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அருங்காட்சியகத்தை திறந்துவைத்தபின்னர் உரையாற்றிய ஸ்ரீல.ரெ. தலைவர் பி. ஜி. குமாரசிங்க சிறிசேன, இது ஸ்ரீலங்கா ரெலிகொம்முக்கு மட்டும் சொந்தமானதல்ல முழு நாட்டுக்குமே சொந்தமான தேசிய சொத்தாகும். பிற தொலைத்தொடர்பு இயக்குநர்களும், இலங்கை குடிமக்களும் இந்த தொலைத்தொடர்பாடல்கள் அருங்காட்சியகத்திலிருந்து நிறைய விடயங்களைத் தெரிந்துகொள்ளலாம். எமது தொலைத்தொடர்பாடல் பாரம்பரியமும் அறிவுச்செல்வமும் நாட்டிலுள்ள அனைவருக்கும் பயன்படக் கூடியதாக தற்போது திறந்துவைக்கப்பட்டுள்ளது என்றார்.

**வணிகம்**

இந்த அருங்காட்சியகமானது, பாதுக்கையிலுள்ள சிறிலங்கா ரெலி கொம்முக்குச் சொந்தமான செய்மதிப்புவி நிலையத்தின் வளாகத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இச்செய்மதிப்புவி நிலையம், 1975 ஆம் ஆண்டு டிசெம்பரில் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் திறந்து வைக்கப்பட்டது.

(தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமரின்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஐ. நா. மனித உரிமைகள் சபையில் 2015 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் வலுவான தீர்மானமொன்றையே நிறைவேற்றுவதற்கு உறுப்பு நாடுகள் திட்ட மிட்டிருந்தன. இருந்த போதிலும் அரசு சாதகமான நோக்கங்களை வெளிப்படுத்தியதன் காரணமாக பின்னர் இன்னொரு தீர்மானமே நிறைவேற்றப்பட்டது.

நாங்கள் ஐ. நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுமாறு அரசை கேட்டுக் கொள்கின்றோம். இந்த விடயம் குறித்து எந்தவித விட்டுக் கொடுப்புக்கும் இடமில்லை.

அத்துடன், இலங்கை அரசு அமைக்கவுள்ள காணாமற் போனோர் விவகாரங்களைக் கையாள்வதற்கான அலுவலகம் குறித்த முழுமையான விடயங்களை நாங்கள் இதுவரை அறியவில்லை.

நாடாளுமன்றத்தின் முன்னிலையில் இது குறித்த சட்டமூலம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். நாங்கள் அதனை ஆராய்வோம். குறிப்பிட்ட அலுவலகம் அமைக்கப்படுவது குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். இதன் மூலம் இந்த விவகாரத்துக்குத் தீர்வு காணப்படுமென எதிர்பார்க்கின்றோம்–என்றார்.

(த–வ–5)

## விரைவில்

முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதாக பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெய சுந்தர உறுதியளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியின் ஓர் நிகழ்வில் நேற்றைய தினம் நானும் பொலிஸ்மா அதிபரும் கலந்து கொண்டோம். இதன் போதே யாழ்.குடாநாட்டின் இன்றைய நிலமை தொடர்பில் எடுத்துக் கூறியதோடு, இதுதொடர்பில் விசேட கவனம் செலுத்தி உடன் தீர்வு எட்டப்படவேண்டும் என வலியுறுத்தினேன்.

அவ்வாறு தீர்வு எட்டுவதானால், நீங்களே நேரில் சென்று ஆராய வேண்டும் என பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக்கொண்டேன்.

இது தொடர்பில் விரிவாக நீண்டநேரம் விவாதித்தோம் . இறுதியில் இது தொடர்பில் கருத்துரைத்த பொலிஸ்மா அதிபர்,அடுத்த மாதம் முதல் வாரத்தின் இறுதி நாட்களில் யாழ்ப்பாணத்துக்குச் செல்வேன். அங்கு 3 தினங்கள் தங்கியிருந்து இவற்றை ஆராய்ந்து உரிய நட வடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளார் - என்றார்.

(த–வ–101)

## புதிய

முன்னுதாரணமாகும் என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தத் தவறு தொடர்பில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர், அவைத் தலைவர், மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் கடிதம் அனுப்பி வைத்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார். அவ்வாறு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போது கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றுபவர்களை அகற்றாது, புதிதாக நியமனம் பெறவுள்ள அதிபர்களை நியமிப்பது தொடர்பாக மாகாண சபையில் கடந்த 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தீர்மா னம் தொடர்பாக பின்வரும் காரணங்களை முன் வைத்து இலங்கை ஆசிரியர் சங்கம் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கிறது.

✦06/2006 ஆம் இலக்க அரச நிருவாகச் சுற்றறிக்கையின் படி, இலங்கையில் உள்ள சகல அரச சேவைகளுக்கும் ஆட்சேர்ப்பு உட்பட சகல விடயங்களையும் உள்ளடக்கிய சட்டமாக்கப்பட்ட பிரமாணக் குறிப்பு உள்ளது.

✦இலங்கையிலுள்ள அரச சேவைகளில் ஒன்றான இலங்கை அதிபர் சேவைக்கும் 1985.01.01 தொடக்கம் சட்டமாக்கப்பட்ட பிரமாணக்குறிப்பு உள்ளது. இது 1086/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் 1997.01.01 தொடக்கம் மறுசீரமைக்கப்பட்டது. 06/2006 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கை விதிகளின் படி, மீண்டும் 2014.10.23 ஆம் திகதி கொண்ட 1885/31 இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இதில் இலங்கையிலுள்ள 4 அயிரத்து 891 பாடசாலைகளுக்கு 3 ஆம் வகுப்பு அதிபர்களை நியமிக்கவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

✦ 2014.10.22 அன்று விசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட 2008.07.01 திகதி முதல் செயற்படும் இலங்கை அதிபர் சேவையின் பிரமாணக் குறிப்பின் படி, 07 ஆம் பிரிவின் கீழே இலங்கை அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்பு என்னும் தலைப்பின் கீழ் குறிக்கப்பட்ட கல்வி, தொழில் தகைமைகளுடன் சேவையின் 3ஆம் வகுப்புக்கு மட்டும் போட்டிப் பரீட்சையின் மூலம் எவ்வாறு ஆட்சேர்ப்பு செய்வது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

04. இதன்படி 10 வருடங்களுக்குப் பின்னர் 2015.04.10 திகதிய வர்த்தமானியில் விண்ணப்பம்கோரி 2015.11.21 அன்று போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. சுமார் 19 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றிய இந்தப் பரீட்சையில் 4 ஆயிரத்து 79 பேர்கள் மட்டுமே தெரிவாகி, முறையான நேர்முகப் பரீட்சையின் பின்னர் 3 ஆயிரத்து 859 பேர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகின்றது.

✦இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளதன்படி, இவர்களுக்கு முறையாக 74 பயிற்சி நிலையங்களில் சேவைக்காலப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. முதல்முறையாக இலங்கை அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளவர்களுக்கு உயர்ந்த தரத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது என்பதை இங்கு குறிப்பிடவேண்டும்.

✦வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர், இந்த அதிபர் சேவை போட்டிப்பரீட்சைக்குத் தோற்றினர். இவர்களில் இப்போது கடமைநிறைவேற்று அதிபர்களாக இருக்கும் ஏறத்தாழ 300 பேர்களும் உள்ளடங்குவர். மொத்தமாக வடக்கு மாகாணத்தில் இருந்து சித்திபெற்ற 396 பேர்கள் இந்தப் பயிற்சியைப் பெற்றுவருகின்றனர்.

✦இந்தப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய கடமை நிறைவேற்று அதிபர்களில் மிகக் குறைந்த வீதத்தினரே சித்தியடைந்துள்ளார்கள்.

✦ 2011.02.05 அன்று மேற்கொள்ளப்பட்ட 2011/ஈடி/டி14 இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் படி, அப்போது போர்க்காலத்தில் கடமைநிறைவேற்று அதிபர்களாக கடமையாற்றிய தகைமையுள்ளவர்களுக்கு அதிபர் நியமனம் வழங்கப்பட்டுவிட்டது என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகின்றோம்.

✦பாடசாலை அதிபர் ஒருவர் இடமாற்றம் பெறும்போது, அல்லது ஓய்வுபெறும்போது அதிபர் சேவையைச் சேர்ந்த ஒருவர் இல்லாத பட்சத்தில் பாடசாலையில் கடமையாற்றும் சிரேஷ்ட ஆசிரியருக்கு புதிய அதிபர் நியமிக்கப்படும்வரை பாடசாலைப் பொறுப்புக்களை ஒப்படைப்பதே வழக்கமாகும்.

✦ இன்று வடமாகாணத்தில் மட்டுமல்ல இலங்கையில் உள்ள சகல மாகாணங்களிலும் கடமைநிறைவேற்றும் அதிபர்களாக உள்ளவர்கள் அப்படி முறைப்படி கடமைப் பொறுப்பை எடுத்தவர்கள் அல்ல. அரசியல்வாதிகளின், அதிகாரிகளின் செல்வாக்கின்படி பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமைபார்த்து வருபவர்களாவர். பெரும்பாலானவர்கள் போட்டிப் பரீட்சைகளிலும் சித்தியடையாதவர்களாவர்.

✦இப்படியான சூழ்நிலையில் சட்டபூர்வமான பிரமாணக் குறிப்பு இருக்கும் போது, கடமைநிறைவேற்று அதிபர்களை நிரந்தரமாக்கத்தக்க வகையில் பொறுப்புள்ள மாகாணசபையொன்று தீர்மானம் எடுத்தது அரசமைப்புக்கு முரணான நடவடிக்கையாகும்.

✦ இந்த சட்டத்திற்கு முரணான தவறான தீர்மானத்தை ஏனைய மாகாண சபைகளும் பின்பற்றினால், கல்வியில் மிகப்பெரிய பாதிப்பும் முரண்பாடும் உண்டாகும்.

✦ இலங்கை அதிபர் சேவை போன்ற நாடளாவிய சேவையொன்றை நியமிக்கும் அதிகாரம் அரசசேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் கல்வியமைச்சின் செயலாளருக்கே வழங்கப்பட்டுள்ளது. அதனை மீறி மாகாணசபையொன்று இத்தகைய தீர்மானத்தை எடுத்திருப்பது எந்தவகையில் நியாயமானதாகும்?

✦வடக்கு மாகாண சபையானது மாணவர்களின் பண்புசார் தன்மையை விருத்திசெய்யும் வகையில் பயிற்சியளிக்கப்பட்டு உரிய தகைமையுடன் அதிபர்களாக நியமனம் பெற்றவர்களிடம் பாடசாலைகளை ஒப்படைக்காது, கடமை பார்த்தவர்களுக்கு பாதிப்பு உண்டாகாத வகையில் நியமனம் வழங்க தீர்மானிக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

✦2011.02.05 திகதி மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் பத்திரத்தின் தீர்மானத்தின்படி 2010.12.31 வரை கடமையாற்றிய, அந்தத் திகதி வரை 3 வருடங்களை நிறைவு செய்த சகலருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதோடு, இனிமேல் இப்படியான நியமனம் வழங்கப்படமாட்டாது என்பதும் அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

✦வடக்கு மாகாண சபை தமிழ் மக்கள் சார்பாக பொதுவாக எடுக்கும் தீர்மானங்களுக்கு எமது சங்கம் எதிரானதல்ல என்பதை இங்கு குறிப்பிடவிரும்புவதோடு, பிரமாணக் குறிப்பின்படி போட்டிப்பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கு உரிய இடம் வழங்காது, போட்டிப் பரீட்சைகளில் சித்தியடையாத கடமை பார்ப்பவர்களை பாதுகாக்க எடுக்கப்படும் இப்படியான தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றோம்.

17. அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் கல்வியமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட நியமனதாரிகளுக்கு உரிய இடம் வழங்குவதை தடைசெய்யும் இத்தகைய முயற்சிகளுக்கு எதிராகச் சட்டநடவடிக் கைகளில் ஈடுபட உள்ளதோடு, தொழிற்சங்க நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவேண்டியேற்படும் என்பதையும் கவலையுடன் தெரிவிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த–வ–4)

## கிழக்கு

என்ன என்று இராஜதந்திரிகள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இவ்வாறு கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் முகமட் பங்கேற்கும் நிகழ்வு களில் முப்படையினரையும் பங் கேற்கக் கூடாது என்றும், முப் படையினரின் முகாம்களுக்குள் அவரை அனுமதிக்கக் கூடாது என்றும் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது. சுதந்திரத்துக்குப் பின்னர், முதல் தடவையாக பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் பாதுகாப்புச் செயலரால் வழங்கப்பட்ட இந்த உத்தரவு, பகிரங்கப்பட்டதும் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலரும், அமைச்சர்களும், தொலைபேசி மூலம் இந்த உத்தரவு அதிகாரபூர்வமானதா? என்று பிரதமரிடம் விசாரித்துள்ளனர். இந்த உத்தரவை அடுத்து, பொறுப்புக்கூறல் விவகாரங்களில் அரசின் நிலைப்பாடு என்னவென்று இராஜதந்திரிகள் கேள்வி எழுப்பியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விவகாரம் குறித்துக் கேள்வி எழுப்பவுள்ளதாக, அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜப்பான் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, இந்த விவகாரம் தொடர்பாக தொலைபேசி மூலம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெளிவுபடுத்தியுள்ளார். அதற்குப் பின்னரே, முப்படைத் தளபதிகள் தற்போதைய நிலை தொடர்பாக எந்த அரசியல் கருத்துக்களையும் வெளியிட வேண்டாம் என்று ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

(த–வ–5)

## மரண அறிவித்தல்

**செல்வி சிவதாஸ் சிவதர்ஜினி(லாலா)**



பிறப்பு 01.10.1986 — இறப்பு 27.05.2016

யாழ். றக்கா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிவதாஸ் சிவதர்ஜினி (லாலா) 27.05.2016 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சிவதாஸ் - சற்குணம் தம்பதிகளின் அன்பு மகளும் கபில் (பிரான்ஸ்), யாழி, டிலானி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சாருலதாவின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, செல்லம்மா மற்றும் சின்னராசா, மகேஸ்வரி தம்பதியரின் அன்புப் பேர்த்தியும் கோமதி (பிரான்ஸ்), நாகேஸ்வரி, உருத்திரா (ஜேர்மனி), பரமேஸ்வரி , சின்னத்தம்பி, ராசன் காலஞ்சென்ற இந்திரன் மற்றும் நானேந்திரன்,நிதீஸ்வரன், நவம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற செல்வரெட்ணம் (செல்வம்), மற்றும் மணியம் (ஜேர்மன்), அப்பாத்துரை, வசந்தி, றமணி, யமுனா, பயிங்கிளி, யமுனா ஆகியோரின் பெறாமகளும் சதானந்தம் (இந்தியா), விஜயன், உதயன் (கொலன்ட்), காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் ராஜன்(லண்டன்), வவி, ராசாத்தி, கிருஷா, வனஜா, ரோசா, வனிதா (இந்தியா), மலர், வதனா, தேவி, நிமாலினி (லண்டன்), செல்வம், தனராசா, காலஞ்சென்ற துரைராசா ஆகியோரின் பாசமிகு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05. 2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

றக்காவீதி,
சுண்டுக்குளி

(கே/1731)
(12.17.18)

தகவல்:
குடும்பத்தினர்.

021 222 0780, 077 711 3050

# கிழக்கு முதல்வருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை?

## அவசரமாகக் கூடுகிறது மு.கா. உயர்பீடம்

கொழும்பு, மே 30
சம்பூரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமடுக்கும் கடற்படை அதிகாரியொருவருக்குமிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு தொடர்பிலும், அதனால் ஏற்பட்டுள்ள எதிர்ப்பலைகள் குறித்தும் ஆராய்வதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடம் விரைவில் கூடவுள்ளது என அந்தக் கட்சி வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

இந்தச் சம்பவம் சமூகவலைத் தளங்களிலும், அரசியல் மேடைகளிலும் பெரிதளவில் பேசப்பட்டுவரும் நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தனர்.

இருவரும் விசேட கலந்துரையாடலிலும் ஈடுபடவுள்ளனர். கொரியா சென்றுள்ள பிரதமர் நாடு திரும்பியதும் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இரு தரப்பிலிருந்தும் அறிக்கை கோரப்பட்டிருந்த நிலையில், கிழக்கு முதல்வர் தனது தரப்பு நியாயத்தைத் தெளிவுபடுத்தி ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்த நிலையில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்களும் கிழக்கு முதல்வரின் செயலைக் கண்டித்துள்ளனர். முதல்வருக்கு எதிராக அவர் அங்கம் வகிக்கும் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் கூடி ஆராய்ந்து முதல்வருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் என அறிய முடிகிறது. அரசியல் களத்தில் எழுந்துள்ள எதிர்ப்பலைகளைச் சமாளிக்கும் வகையிலும், கட்சிக்குரிய மதிப்பைப் பாதுகாப்புக்கு வகையிலுமே இந்த நகர்வு முன்னெடுக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கிழக்கு முதல்வரை அந்தப் பதவியிலிருந்து நீக்குமாறும் வலியுறுத்தப்பட்டுவருகிறது. கிழக்கு மாகாணசபையின் ஆட்சி அதிகாரம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளமை குறிப்பிடத்தக்கது.
(வ-சி)

# இலங்கையில் போலியோவை ஒழித்ததில் புலிகளுக்கு பங்கு

## தென்கொரியாவில் பிரதமர் ரணில் தெரிவிப்பு



சியோல், மே 30
இலங்கை முழுவதும் போலியோ ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுப்பதற்காக தேசிய நோய்த்தடுப்பு தினமன்று உங்களது அரசு ஆயுதங்களைக் கீழே வைப்பதற்குத் தயாரானால், நாமும் ஆயுதங்களைக் கீழே வைத்து போர் நிறுத்தமொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தயார் என்று கடிதம் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்திருந்ததாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ரோட்டரி கிளப் நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே இதனைப் பிரதமர் ரணில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் எமக்கு போலியோ நோய் அச்சுறுத்தல் இல்லை. இரண்டு தசாப்தத்துக்கு அதிக காலமாக எமது நாட்டிலிருந்து போலியோ நோயாளிகள் கண்டறியப்படவில்லை. பயங்கரவாதத்திற்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் கடுமையாக மூழ்கியிருந்த சந்தர்ப்பத்திலேயே, நாம் போலியோ நோயையும் நாட்டிலிருந்து இல்லாதொழித்தோம்.

ரோட்டரி கழகத்தின் பங்களிப்புக் காரணமாகவே அந்தப் பணிகளைச் சிறப்பான வகையில் மேற்கொள்ள முடிந்தது. ரோட்டரி கழகத்தின் தலைவர் ரவீந்திரனிடமிருந்து அதற்காக அனுசரணை கிடைக்கப்பெற்றது.

1995ஆம்ஆண்டில்யுனிசெப்அமைப்புடன் இணைந்து ரோட்டரி கழக அங்கத்தவர்கள் சிலர் சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டனர். ஒரே தடவையில் முழு நாட்டுக்கும் போலியோ தடுப்பு மருந்தை வழங்குவதற்காக மீதிச் செலவை அரசால் மேற்கொள்ளுமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

சுகாதார அமைச்சின் அதிகாரிகள் அந்தக் கருத்து சிறந்ததாக இருந்ததனால் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர். ஆனாலும் வடக்கு, கிழக்கில் மோதல் நிலவும் பகுதிகள் அரச நிர்வாகத்தின் கீழ் காணப்படாமையால், அந்தப் பிரதேசங்களில் இந்த நடவடிக்கையை மேற்கொள்வது நடைமுறைச்சாத்தியமற்ற விடயமென அந்த அதிகாரிகள் சுட்டிக் காட்டினார்கள்.

ஆனாலும் ரோட்டரி கழக அங்கத்தவர்கள் அதற்கு இணக்கத்தைத் தெரிவிக்கவில்லை. இந்தச் செயற்றிட்டத்துக்காக ரோட்டரிக் கழகத் தின் நிதி, செலவு செய்யப்படுவதனால் அதனை நாட்டின் ஒரு பகுதிக்கு மாத்திரம் பயன்படுத்துவது பொருத்தமில்லையென அவர்கள் தெரிவித்தனர்.

ரோட்டரி கழக அங்கத்தவர்களின் தலை குழம்பிவிட்டதாக அமைச்சின் அதிகாரிகள் உணர்ந்தார்கள். இந்த நாட்டில் போர் ஒன்று இடம்பெறுவது உங்களுக்குத் தெரியாதா. எமக்கு வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் ஆட்சியதிகாரம் இல்லை. எனவே, நீங்கள் எமக்கு என்ன செய்யுமாறு கூறுகிறீர்கள்?" என்று வினவினர்.

அப்போது ரோட்டரி கழகத்தின் தலைவர் ரவீந்திரன், அது குறித்து கவலைப்பட வேண்டாம். நாம் போர் குறித்து பார்த்துக்கொள்கிறோம் என்று பதிலளித்தார்.

இறுதியில் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் அவர்களுக்கு இணக்கம் தெரிவித்தனர். உங்களால் போரை நிறுத்தமுடியுமாயின் எம்மால் முழு நாட்டுக்கும் தடுப்பு மருந்தை வழங்க முடியும் என்று அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதன் பின்னர் இரண்டு அல்லது மூன்று மாதங்களின் பின்பு, ரோட்டரி கழகத்தின் தலைவர் ரவீந்திரன் தனது அலுவலகத்துக்கும், யுனிசெப் அலுவலகத்துக்கும் கிடைத்த கடிதமொன்றை எடுத்துக்கொண்டு வந்தார். அது புலிகள் அனுப்பிய கடிதமாகும். அதில் தேசிய நோய்த்தடுப்புத் தினமன்று உங்களது அரசு ஆயுதங்களைக் கீழே வைப்பதற்குத் தயாரானால், நாமும் ஆயுதங்களைக் கீழே வைத்து போர் நிறுத்தமொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தயார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன்படி போர்நிறுத்தமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. அவர்கள் ஆயுதங்களைக் கீழே வைத்தனர். நாமும் எமது ஆயுதங்களைக் கீழே வைத்தோம். ரோட்டரி உறுப்பினர்கள், யுனிசெப், செஞ்சிலுவை மற்றும் ஏனைய சுகாதார செயற்பாட்டாளர்கள் ஜீப்களில் வெள்ளைக் கொடியைப் பறக்கவிட்ட நிலையில், அதுவரைக்கும் வடக்கு, கிழக்கில் எவரும் செல்வதற்கு அஞ்சிய பிரதேசங்களுக்குச் சென்றனர். அந்த மோதல்கள் நிறுத்தப்பட்ட காலத்தின் பெறுபேறாக எமக்கு போலியோ அற்ற இலங்கையொன்று கிடைக்கப் பெற்றது என்று குறிப்பிட்டுள்ளார்.(வ-சி)

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் சிவசுப்பிரமணியம் (சிவா)

(இளைப்பாறிய எழுதுவினைஞர். யாழ். கச்சேரி நில அள வைகள் திணைக்களம். முன்னாள் தினகரன் பதத்திரி கையின் பிரதான ஆசிரியர்)

மலர்வு
28 . 05 . 1942



உதிர்வு
29 . 05 . 2016

தம்பாலை அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் "மங்களம்" கோண்டாவில் மேற்கு. கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு வைத்திலிங்கம் சிவசுப் பிரமணியம் (K.V. சிவசுப்பிரமணியம்-சிவா) நேற்று (29.05. 2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மங்களம்"
கோண்டாவில் மேற்கு.
கோண்டாவில்.
021 205 3410

தகவல்:
மனைவி (ரஞ்சி),
பிள்ளைகள் (மஞ்சுளா,
வாருணி, சுதன்)

### கணபதி தங்கராசா



கோண்டாவில் வடக்கு தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி தங்கராசா நேற்று (29. 05.2016) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொற்கொடியின் அன்புக் கணவரும் பாக்கியவதி. சகுந்தலா தேவி. இரத்தினகுலசிங்கம் (ஊழியர் யாழ். பல்கலைக் கழகம்),தனபாலசிங்கம். உதயராஜா (ஊழியர் யாழ். பல்கலைக்கழகம்), காலஞ்சென்றவர்களான பிறேமதாஸ். கிருஷ்ணராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக இணு வில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தில்லையம்பதி,
கோண்டாவில் வடக்கு.

தகவல்: குடும்பத்தினர்.
077 175 4432



### அப்பையா விஜயரட்ணம்

{(ஸ்ரீ அம்பாள் ஸ்ரோஸ்-உரிமையாளர்)
(அப்பையா ஸ்ரோஸ்)}

உடுவிலைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் மயிலணியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா விஜயரட்ணம் {(ஸ்ரீ அம்பாள் ஸ்ரோஸ்-உரிமையாளர் (அப்பையா ஸ்ரோஸ்)} நேற்று (29.05.2016) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பையா-இராசம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற சத்தியபாமாவின் அன்புக் கணவரும் பிரசாந்தன். சதீஸ் .கேசவன் (பொலிஸ் உத்தியோகத்தர்-வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகாயினியின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராசமலர். தர்மரட்ணம் மற்றும் ரஞ்சினி. ஜெயரட்ணம் (லண்டன்). குணரட்ணம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சத்தியநாதன் மற்றும் ஜெயகௌரி. ஜெயபாலசுந்தரம் (மருத்துவபீடம் யாழ் பல்கலைக்கழகம்).கெங்காதேவி (லண்டன்). உதயகலா (சுவிஸ்). நாகேந்திரம். இந்திரன். சூரியகுமார் (கனடா). கருணாகரன். சரோ ஜினிதேவி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2016) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 3400584, 077 1882196, 077 8039320

## மரண அறிவித்தல்

### கனக சபாபதி சிவகனகேஸ்வரன்(சிவா)

(லங்கா சிமெந்து லிமிட்டட் காங்கேசன் துறை)



இளவாலையைப் பிறப்பிடமாகவும் 78. ஆடியபாதம் வீதி, கொக்குவில். கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனக சபாபதி சிவகனகேஸ்வரன்(சிவா) கடந்த (28.05.2016) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி சத்தியசீலன் வாஜினி. வாஜீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077918 1078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிணையில்

வித்தனர்.

அத்துடன், அவரிடமிருந்து திருடப்பட்ட நகை உள்ளிட்ட பொருள்களை மீட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சிறுப்பிட்டி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வீடு உடைத்து ஒரு பவுண் நிறையுடைய தோடு, எம்.பி.3 பிளேயர் மற்றும் 3 ஆயிரத்து 500 ரூபா பணம் என்பனவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் அதேபகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய குறித்த இளைஞனை நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளதாக அச்சுவேலி குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் திருடிய பொருள்களில் தங்க நகையை விற்பனை செய்த நிலையில், அதனையும் மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். வீட்டில் உள்ளவர்கள் கோயிலுக்குச் சென்ற நேரம் பின்பக்கக் கதவு உடைத்து உள்நுழைந்து பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வீட்டு உரிமையாளரினால் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த பகுதியில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டிருந்த இளைஞன் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவரை, பின்னர் மல்லாகம் நீதிமன்று பிணையில் விடுவித்தது. அவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்ட சில நாள்களிலேயே, குறித்த சந்தேகநபர் மீண்டும் திருட்டில் ஈடுபட்டு பொலிஸில் மாட்டிக் கொண்டுள்ளார். அவர் மீண்டும் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(த-வ-4,107)

## பெருந்

பிரிவினரின் வெடிபொருள்கள் செயலிழக்கும் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் கிளிநொச்சி இரத்தினபுரம் 3ஆம் குறுக்குத் தெருவில் உள்ள வீடு ஒன்றில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

குறித்த வீட்டின் உரிமையாளர் இல்லாத நிலையில், அந்த வீட்டை பராமரிக்கும் நபர் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் கிணறு இறைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். இதன்போது, அந்தக் கிணற்றில் கிளைமோர் குண்டு ஒன்று இருப்பதைக் கண்டு, கிணறு இறைக்கும் பணியைக் கைவிட்டதுடன் அருகில் உள்ள 57ஆம் படைப் பிரிவினருக்குத் தகவல் வழங்கி உள்ளார்.

எனினும் கடந்த சில நாள்களாக கொட்டிய கடும்மழை காரணமாக படையினரால் குறித்த கிணற்றில் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.தற் போது காலநிலை வழமைக்கு திரும்பியுள்ள நிலையில், நேற்றையதினம் குறித்த பகுதிக்குச் சென்ற படையினர், கிணற்றில் தமது தேடுதலை முன்னெடுத்தனர்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட தேடுதலின்போது 12.5 கிலோகிராம் கிளைமோர் குண்டு ஒன்றும் 7.5 கிலோக்கிராம் கிளைமோர் குண்டுகள் மூன்றும், 2.5 கிலோகிராம் கிளைமோர் குண்டுகள் ஆறும் உள்ளடங்கலாக 10 கிளைமோர் குண்டுகளும், 66 கைக் குண்டுகள் மற்றும் ஆட்லறி செல்லுக்குப் பயன்படுத்தும் 42 மோட்டார் பியுஸ்களும் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த தேடுதல் நடவடிக்கைகள் சுமார் 5 மணித்தியாலங்களுக்கு மேலாக இடம்பெற்று நேற்று மாலை 5.30 மணியளவில் நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-வ-21)

## மத்திக்கும்

ஏனைய பிரதேசங்களில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பங்கேற்காத இணைத் தலைவர்களான க.வி.விக்னேஸ்வரன் மற்றும் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் பங்கேற்றனர். இவர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவும் பங்குபற்றியிருந்தார்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் இணைத் தலைவர்கள் உரையாற்றினர். இதில் இறுதியாக திருமதி விஜயகலா மகேஸ்வரன் கருத்துத் தெரிவித்தார். இதன்போது, யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் முன்னைய பிரதேச செயலாளரின் நடவடிக்கை தொடர்பில் விமர்சித்தார். மக்களுக்கான சமுர்த்தித் திட்டம், வீட்டுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக அவர் மீது மக்கள் முறைப்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். இதன்காரணமாக அவர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். தற்போது புதிய பிரதேச செயலர் கிடைத்திருக்கின்றார் என்று தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், உடனடியாக எழுந்து ளித்தார். நீங்கள் ஒரு பெண்ணாக இருந்து கொண்டு இன்னொரு பெண்ணைக் குற்றம் சுமத்துகின்றீர்கள். அவர் தற்போதும் பிரதேச செயலராக இருக்கின்றார். அவர் மீது தவறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம். இப்போதுள்ள பிரதேச செயலாளருக்கு எதிராகவும் இவ்வாறு முறைப்பாடுகள் கிடைத்தால் இடமாற்றம் செய்வீர்களா என்றும் கேள்வி எழுப்பினார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இந்த விடயத்தை இத்தோடு நிறுத்துங்கள் என்று தெரிவித்தார். அதற்கு திருமதி விஜயகலா மகேஸ்வரன், நான் சிறிய பதில் வழங்க வேண்டியிருக்கின்றது. நானும் பாதிக்கப்பட்ட பெண். நீங்களும் (அனந்தி) பாதிக்கப்பட்ட பெண். பாதிக்கப்பட்ட பல பெண்களின் முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே, முன்னாள் பிரதேச செயலாளர் இடமாற்றம்செய்யப்பட்டிருந்தார்என்று குறிப்பிட்டார். வடக்கு முதலமைச்சர், மீளவும் இந்த விடயத்தை நிறுத்துமாறு தெரிவித்தார். இதன் பின்னர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் குறிக்கப்பட்டிருந்த விடயங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. நிகழ்ச்சி நிரலில் உள்ள 4 விடயங்கள் ஆராயப்பட வேண்டியிருந்த நிலையில், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கூட்டத்தை முடிவுக்கு கொண்டு வர முற்பட்டார். கூட்டத்தை முடிப்பதற்கான அறிவிப்பை விடுத்து நன்றியுரை சொல்வதற்குத் தயாரானார். இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட், இங்கு வந்த மக்கள் தவறான கருத்துடன் வெளியில் செல்லக் கூடாது. முன்னைய பிரதேச செயலாளர் என்று கருத்துத் தெரிவிக்க ஆரம்பிக்க, முதலமைச்சர் இத்தோடு கூட்டம் முடிந்தது. இந்த விடயம் பற்றி கதைப்பதற்கு இது பொருத்தமான இடமில்லை என்று கூறிக் கொண்டே தனது கதிரையை விட்டு எழுந்தார். மாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட் மீண்டும் இந்த விடயத்தைப் பேச முற்பட, முதலமைச்சர் கூட்டம் முடிந்தது நன்றி என்று தெரிவித்து விட்டு மண்டபத்திலிருந்து வெளியேறினார். இதன் போது பொதுமக்களும், மக்கள் பிரதிநிதிகளும் வெளியேறினர். அரச அதிகாரிகளும் வெளியேற முற்பட்டனர்.

இதன்போது மற்றொரு இணைத் தலைவரான திருமதி விஜயகலா மகேஸ்வரன், கூட்டம் முடியவில்லை. கூட்டத்தை முறைப்படி முடிக்க வேண்டும். மக்கள் வேண்டுமானால் வெளியேறிச் செல்லலாம். அரச அதிகாரிகள் கட்டாயம் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார். இதன் பின்னர் கூட்டத்தை தொடர்ந்து நடத்தினார். இதன்போது, மாகாண சபை உறுப்பினர் ஆனோல்டிடம், என்ன கூற வந்தது என்பதைத் தெரிவிக்குமாறு திருமதி விஜயகலா மகேஸ்வரன் கேட்டார். முன்னைய பிரதேச செயலர் எவருடைய அரசியல் தயவில் இங்கே இருந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். அவருக்கு வந்த இடமாற்றங்களை அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி தடுத்துக் கொண்டிருந்தார். அரசியல் செல்வாக்கைப் பிரயோகித்தது, அந்தப் பிரதேச செயலரே தவிர மக்கள் பிரதிநிதிகள் இல்லை – என்றார். இதனைத் தொடர்ந்து நிகழ்ச்சி நிரலில் குறிக்கப்பட்டிருந்த, சிறுகைத்தொழில் தொடர்பான விடயம், மீள்குடியமர்வு ஆகியவை ஆராயப்பட்டே கூட்டம் முடிவுக்கு வந்தது. (த-வ-5)

## வாக்காளர்

ளன. வாக்காளர் பெயர்ப் பட்டியல் மீளாய்வு நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. வலி.வடக்கு – வலி.கிழக்கில் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் கடந்த காலங்களில் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் போது, புதிய வாக்காளர்கள் இணைக்கப்படுவார்கள். ஆனால் பழைய வாக்காளர் பெயர்ப்பட்டியலிருந்து பெயர்கள் நீக்கப்படுவதில்லை. மக்கள் மீள்குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர், அந்தப் பிரதேசங்களில் வாக்காளர் பெயர்ப் பட்டியல் முழுமையாக மீளாய்வுக்கு உட் படுத்தப்படும். புதியவர்கள் இணைத்துக் கொள்ளப்படும்அதே வேளை, பழைய வாக்காளர் பெயர்ப்பட்டியலிருந்து, தற்போது விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்காதவர்களது பெயர்கள் நீக்கப்படும்.

கடந்த வருடம் பலாலி தெற்கு, வயாவிளான், பளை வீமன்காமம் வடக்கு, பளைவீமன்காமம் தெற்கு, காங்கேசன்துறை தெற்கு, வறுத்தலைவிளான், கட்டுவன், வளலாய், பலாலி வடக்கு, பலாலி கிழக்கு, தையிட்டி தெற்கு, நகுலேஸ்வரம், மயிலிட்டி வடக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டன.

இந்தப் பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு தேவையான வசதிகள் முழுமையாக ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. குறிப்பாக வீடுகள் எவையும் இல்லாத நிலையில், நிரந்தர வீடுகள் இன்னமும் வழங்கப்படவில்லை. இவ்வாறானதொரு நிலையில் இந்தக் கிராமங்களில் வாக்காளர் பெயர்ப்பட்டியல் முழுமையாக மீளாய்வு செய்யப்படும் போது, பல பெயர்கள் நீக்கப்படும் அபாயம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றில் பளைவீமன்காமம் தெற்கு மாத்திரமே முழுமையாக விடுவிக்கப்பட்ட கிராம சேவையாளர் பிரிவு. ஏனைய கிராமசேவையாளர்பிரிவுகள்முழுமையாக விடுவிக்கப்படவில்லை. எனவே இந்தக் கிராமங்களில் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டால், ஆயிரக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்படக் கூடும் என்று எதிர்வு கூறப்படுகின்றது. மக்கள் முழுமையாக மீளக்குடியமராத நிலையில், இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்வது பொருத்தமற்றது என்று, பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. (வ-5)

## காணி

இருக்கின்றது என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பு மற்றும் அதில் உள்ளடக்கப்படும் அரசியல் தீர்வுத்திட்டம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விவரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்பைஉருவாக்குவதற்காக 6 உப குழுக்களும், ஒரு நிறைவேற்றுக் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இடம்பெறுகின்றனர்.

இந்த நிலையில் அரசியல் தீர்வுத் திட்டத்தில் கூட்டமைப்பின் கருத்துக்களும் உள்வாங்கப்படும். தேவை ஏற்படின் கூட்டமைப்புடன் இரு தரப்புப் பேச்சுக்களை நடத்தவும் அரசு தயாராக இருக்கின்றது எனவும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ச சுட்டிக்காட்டினார். (த-வ-5)

## மரண அறிவித்தல்கள்

### பிரான்சிஸ் வின்சற் ரவீந்திரன் (சூட்டா)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் வின்சற் ரவீந்திரன் நேற்று (29. 05.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பையா பிரான்சிஸ்-பிரான்சிஸ் திரேசம்மா தம்பதியரின் மகனும் வின்சற் ரவீந்திரன் நாகலட்சுமியின் அன்புக் கணவரும் நிக்ஷன், நில்சன்ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி தெற்கு, கைதடி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

### செல்வி சத்தியதேவி முத்துக்குமாரு

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சத்தியதேவி முத்துக்குமாரு நேற்று (29. 05.2016) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு-சிவக்கொழுந்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற பரஞ்சோதி மற்றும் அற்புதநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் யோகாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் மிருதுளா (சாந்தி), காலஞ்சென்ற ஸ்ரீகரன், பிரேமிளா (ஆனந்தி), சியாமளா(ஜெயந்தி), வத்சலா (வசந்தி), பிரபாகரன் (பிரபா), நிரஞ்ஜலா (சுகந்தி) ஆகியோரின் ஆசைச் சித்தியும் இராகவன், சின்னத்துரை , சுதர்சனன், செல்வகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் கிஷோக், பிரதீஸ், சின்சியா, ருக்மாங்கன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2016) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**186/2, சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- வெளிநாடுகளுக்கு பொதிகளை மிக விரைவாக அனுப்பிக்கொள்வதற்கும்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கும்
- காய்கறிகள், பழவகைகள், கடல் உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணை வகைகள், பால்மா உட்பட அனைத்துப் பாவனைப் பொருட்களையும் அனுப்பிக் கொள்ளலாம்.

**20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்**

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

1, பிறவுண் வீதி, நாவலர் வீதி, சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

கரணவாய், மே 30

**இமையாணன் மத்தியின் தொடர்**

இமையாணன் மத்திய வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்றுவருகின்றன. இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து வலிகாமம் சென்.லூட்ஸ் அணி மோதவுள்ளது.

**கழுகுகள் வி.கழகத் தொடர்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் பனங்கட்டுக் கொட்டு சென்.ஜோசேப் அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா அணி மோதவுள்ளது.

**திருமகள் வி.கழகத் தொடர்**

திருமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை யாழ். ஐக்கிய அணியை எதிர்த்து சரஸ்வதி அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து பருத்தித்துறை சென்.சேவியர் அணி மோதவுள்ளது.

(ம-23-108)





# பிரான்ஸ் தொடரின் நாயகன் காயம் காரணமாக விலகல்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரிலிருந்து காயம் காரணமாக விலகுவதாக அறிவித்துள்ளார் நட்சத்திர வீரரான நடால். பிரான்ஸ் கிண்ணத்தை 9 தடவைகள் கைப்பற்றி தவிர்க்க முடியாத ஆதிக்கமாக நடால் விளங்கி வருகிறார். நடப்பு வருடத்தில் அவர் சிறந்த போர்மில் உள்ளமையால் 10ஆவது தடவையாக கிண்ணத்தை வெல்ல வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்பட்டது. இந்த நிலையில் உள்ளங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக நடால் தெரிவிக்கையில்;

– பயிற்சியின்போது எனது உள்ளங்கையில் காயம் ஏற்பட்டுள்ளது. என்னால் தொடர்ந்து விளையாட முடியும் என்று நான் நினைக்கவில்லை. விலகுவதே சிறந்த முடிவு என்றே கருதுகிறேன். தொடர்ந்து விளையாட முடிவெடுத்து காயம் இன்னும் பெரிதானால் அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ள விம்பிள்டன் தொடரில் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்படலாம். மட்டுமல்லாது இனிவரும் காலங்களில் தொடர்ச்சியாக தொடர்கள் வரவுள்ளன. எனவே விலகுவதே சிறந்தது– என்றார்.

(ம)

# சம்பியனானது சிற்றி ஸ்போட்ஸ்

கரணவாய், மே 30

ஆரோக்கிய அன்னை வி.கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் பருத்தித்துறை லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது சிற்றி ஸ்போட்ஸ் வி.கழகம்.

18 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட இந்தத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் ஆரோக்கிய அன்னை வி.கழக மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சிற்றி ஸ்போட்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் மூன்று இலக்குகளை இழந்து, 74 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுஜித் 43 ஓட்டங்களையும் லாவன்யன் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

36 பந்துகளில் 75 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய பருத்தித்துறை லெவின் ஸ்ரார் அணி சகல இலக்குகளையும் இழந்து 34 ஓட்டங்களைப் பெற்று, 40 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில் சிற்றி ஸ்போட்ஸ் அணியின் சார்பாக சுஜித் 4 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக சிற்றி ஸ்போர்ட்ஸ் அணியின் சுஜித் தெரிவு செய்யப்பட்டார்.

(ம-108)

# நேர் செற் வெற்றியுடன் வாவ்ரிங்கா முன்னேற்றம்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார் வாவ்ரிங்கா.

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரின் நடப்புச் சம்பியனும் தரப்படுத்தலில் மூன்றாம் நிலை வீரருமான வாவ்ரிங்கா நேற்று நடைபெற்ற மூன்றாவது சுற்றில் பிரான்ஸைச் சேர்ந்த ஜெர்மி சார்டியை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தின் முதலாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய வாவ்ரிங்கா இரண்டாவது செற்றிலும் தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்தி 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்தச் செற்றையும் கைப்பற்றி முன்னிலை வகித்தார். மூன்றாவது செற்றில் ஜெர்மி சிறிது நெருக்கடி கொடுத்தார். இதனால் வாவ்ரிங்கா சற்று போராட்டம் காட்டி அந்த செற்றை 7:5 என்று கைப்பற்ற வேண்டியதாயிற்று. முடிவில் 3:0 என்று நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் வாவ்ரிங்கா.

(ம)



# வென்றது அல் இக்பால்

யாழ்ப்பாணம், மே 30

வவுனியா கால்பந்தாட்டச் சங்கம் நடத்தும் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அல் இக்பால் அணி வெற்றி பெற்றுள்ளது.

சிறுவர் பூங்கா மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல் இக்பால் அணியை எதிர்த்து அம்மன் அணி மோதியது. இதில் அல் இக்பால் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்துமாலை 4.30மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நியூ பைட் அணியை எதிர்த்து வளர்பிறை அணி மோதியது. இரண்டு அணியினரும் தலா 2 கோல்களைப் பதிவு செய்ததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

(ம-23)

# சென்.அன்ரனிஸ் அணி அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், மே 30

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென்.அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.



கழுகுகளின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உதயதாரகை அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணி மோதியது. சென்.அன்ரனிஸ் அணியின் வீரர் சுதர்சன் ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். 24 ஆவது நிமிடத்தில் ஜோன்சனின் உதவியுடன் இரண்டாவது கோலைப் பதிவு செய்ய அன்ரனிஸின் ஆதிக்கம் மிகையாக ஆரம்பித்தது. 33ஆவது நிமிடத்தில் றிசிதரனும், 44ஆவது நிமிடத்தில் ஜோன்சனும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய, முதல் பாதியின் முடிவில் 4:0 என்று முன்னிலை வகித்தது சென்.அன்ரனிஸ். வெற்றியை உறுதிப்படுத்தும் முனைப்பில் அன்ரனிஸ், பதிலடி கொடுக்கும் முனைப்பில் உதயதாரகை. ஆரம்பமானது இரண்டாம் பாதி. 47ஆவது நிமிடத்தில் றோமன் ஐந்தாவது கோலைப் பதிவு செய்ய முடிவில் அந்த அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணியின் சுதர்சன் தெரிவானார்.

(ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யு.இ.எவ்.ஏ. சம்பியன்ஸ் லீக்; மகுடம் சூடியது ரியல் மட்ரிட்

ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு (யு.இ.எவ்.ஏ) இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதியாட்டத்தில் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் மூலம் வெற்றிபெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்றியது ரியல் மட்ரிட் அணி.




ரியல் மட்ரிட், அத்லெட்டிகோ மட்ரிட் அணிகளுக்கு இடையிலான இந்த இறுதியாட்டத்தில் ஆட்டம் ஆரம்பித்து ஒன்பதாவது நிமிடத்திலேயே ரமோஸ், ரியல் மட்ரிட் அணியின் சார்பாக முதலாவது கோலைப் பதிவுசெய்தார். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் [illegible] உருண்டோட ரியல் [illegible] வெற்றி உறுதியாகிக் கொண்டிருந்தது. இருப்பினும் அதிகப்படியான இளம் வீரர்களைக் கொண்டிருந்த அத்லெட்டிகோ மட்ரிட் அணி விடாப் போராட்டத்தை வெளிப்படுத்தியது. இதன் பயனாக ஆட்டத்தின் 79ஆவது நிமிடத்தில் அத்லெட்டிகோ அணியின் யானிக் பதில் கோலைப் பதிவுசெய்தார். தற்போது நிலைமை 1:1. அரங்கமே அதிர்ந்து கொண்டிருந்தது. எந்தவொரு அணியும் ஏக ஆதிக்கம் செலுத்திய பாடில்லை. நிமிடங்கள் முடிவடைய சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பின் ஐந்து வாய்ப்புக்களையும் ரியல் மட்ரிட் சரியாகப் பயன்படுத்த முடிவில் அந்த அணி 5:4 என்ற கோல் கணக்கில் கிண்ணம் வென்றது.

**காயத்துடன் கலக்கிய ரொனால்டோ**

இறுதியாட்டத்துக்கான பயிற்சியாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் நட்சத்திர வீரரான ரொனால்டோவின் காலில் காயம் ஏற்பட்டது. அதனால் இந்த ஆட்டத்தில் அவர் களமிறங்குவதில் சந்தேகம் நிலவியது. இருப்பினும் காயத்தைப் பொருட்படுத்தாது ரொனால்டோ களமிறங்கினார். அவர் வழக்கம் போல அதிகமான வாய்ப்புக்களை எதிர்கொள்ளாவிடினும் அத்லெட்டிகோ மட்ரிட் அணி எடுத்த வியூகங்களை ஒன்றின் பின் ஒன்றாக முறியடித்துக் கொண்டிருந்தார்.

**பென்சிமா வெளியேற்றப்பட்டது ஏன்?**

78ஆவது நிமிடத்தில் பென்சிமாவை வெளியேற்றி மற்றொரு வீரரைக் களத்துக்கு அனுப்பினார் ரியல் மட்ரிட்டின் முகாமையாளரான சடான். 78ஆவது நிமிடங்கள் வரை விளையாடிய ஒரு வீரரை வெளியேற்றி வேறொரு வீரரைக் களமிறக்கினால் ஆட்டத்தில் விறுவிறுப்புத் தன்மை இருக்கும். ஆனால் அதற்காக அனுபவ வீரரான பென்சிமாவை வெளியேற்றியமை தவறே. பென்சிமா திருப்பியெடுக்கப்பட்ட அடுத்த நிமிடத்தில்தான் பதில் கோலைப் பதிவுசெய்தது அத்லெட்டிகோ மட்ரிட்.

**120 நிமிடங்கள் நீடித்த ஆட்டம்**

சமநிலைத் தவிர்ப்பு உதைகளைத் தவிர்த்து இந்த ஆட்டம் 120 நிமிடங்களுக்கும் அதிகமாக நீடித்திருந்தது. ஆட்டத்தின் இருபாதிகளையும் சேர்த்து 20 தடவைகளுக்கும் அதிகமாக வீரர்கள் ஒருவருடன் ஒருவர் மோதுண்டு விழுந்தெழும்பினார்கள். இதனாலேயே இந்தத் தாமதம்.

**12ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு**

குறித்த ஆட்டத்துக்காக சான் சிரோ அரங்கிலும், நகர்ப்புறங்களிலும் 12ஆயிரம் பொலிஸாரைப் பாதுகாப்புக்கு அமர்த்தியது இத்தாலி. அரங்கின் பிரமாண்டத் தன்மையைக் கருத்திற் கொண்டும் ஐ.எஸ். ஐ.எஸ். இயக்கத்தினரின் அச்சுறுத்தலை முறியடிக்கும் விதமாகவுமே இத்தகைய உயர் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

**அதிர்ந்தது அரங்கம்**

உலகில் உள்ள பெரிய கால்பந்தாட்ட அரங்குகளில் இத்தாலியின் சான் சிரோவும் ஒன்று. கிட்டத்தட்ட 85ஆயிரம் பார்வையாளர்களைக் கொள்ளக்கூடிய அரங்கம் இடப்பற்றாக் குறையால் நிரம்பி வழிந்தது. ஆட்டம் முழுதும் கூக்குரல்களுக்குப் பஞ்சம் இருக்கவில்லை. (ம)

## கலட்டி றோ.க.த. பாடசாலை அணி மாகாண மட்டக் கபடியில் சாதித்தது




மாகாண மட்டக் கபடித் தொடரில் 19 வயது ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை கலட்டி றோ.க.த. பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் கலட்டி றோ.க.த. பாடசாலை அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் கலட்டி றோ.க.த. பாடசாலை அணி 23:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கிண்ணம் வென்றது. மூன்றாமிடத்தைக் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணிதனதாக்கியது. (ம-422-108)

## விடுவிக்கப்பட்டார் ஸ்ரீக்

பங்களாதேஷ் அணியினது பந்துவீச்சுப் பயிற்சியாளரான ஸ்ரீக் குறித்த பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீக்கின் ஒப்பந்த காலம் ஜுன் மாதத்துடன் முடிவுக்கு வருகிறது. பங்களாதேஷ் நிர்வாகம் அவரது பயிற்சிக் காலத்தை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், புதிய ஒப்பந்தம் மேற்கொள்ளாததை அடுத்து அவர் பந்துவீச்சுப் பயிற்சியாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுவது உறுதியாகியுள்ளது. (ம)

## நல்லூர் பிரதேசம் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 30

யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரம் தொடரில் ஆண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலக அணி சம்பியனானது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி மோதியது. இதில் நல்லூர் பிரதேச செயலக அணி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## ஜெகமீட்பருக்கு வெற்றி

கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டுவந்த கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜெகமீட்பர் அணி வெற்றிபெற்றுள்ளது.

கனகபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து உருத்திரபுரம் அணி மோதியது. இதில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. சிறந்த வீரராக உருத்திரபுரம் அணியின் குணேஸ் தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக வலைப்பாடு ஜெகமீட்பர் அணியின் தர்சன் தெரிவானார். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரம் படைத்தது ஹைதராபாத்

பெங்களூரை 8 ஓட்டங்களால் வீழ்த்தி நடப்பு வருடத்தின் ஐ.பி.எல்.கிண்ணத்தைக் கைப்பற்றியது ஹைதராபாத்

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக வோர்ணர் மற்றும் தவான். வோர்ணரின் அதிரடி இந்த ஆட்டத்திலும் இருக்கத் தவறவில்லை. இலக்குச் சரிவை காத்து நின்றார் தவான். தவான் செய்ய வேண்டியதையும் சேர்த்துக் கவனித்தார் வோர்ணர். 5.2 பந்துப்பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களை எட்டியது ஹைதராபாத். அந்த அணியின் ஓட்ட எண்ணிக்கை 63ஆக இருந்த போது 28 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் தவான். ஹைதராபாத்தின் சகல துறை வீரரான ஹென்றிக்ஸ் நேற்று துடுப்பாட்டத்தில் கைவிட்டார். 24 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் வோர்ணர். வோர்ணர், யுவராஜ் இணை நீண்ட நேரம் அச்சுறுத்தவே செய்தது. குறிப்பாக வற்சனின் பந்துப் பரிமாற்றங்கள் முறையாகக் கவனிக்கப்பட்டன. அதிக ஓட்டங்களை விட்டுக் கொடுத்த வகையில் அரைச்சதம் கடந்தார் வற்சன். 68 ஓட்டங்களுடன் அரவிந்திடம் வீழ்ந்தார் வோர்ணர். வோர்ணர் ஆட்டமிழந்த பிற்பாடு மிரட்டினார் யுவராஜ். 38 ஓட்டங்களுடன் பவிலியனுக்குத் திரும்பவும் செய்தார். கடைசிக்கட்ட அதிரடியை முன்னெடுத்தார் கட்டிங். வற்சன் வீசிய இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் மூன்று சிக்சர்களும் ஓர் பவுண்டரியும் உள்ளடங்கலாக 24 ஓட்டங்கள் கட்டிங்கால் குவிக்கப்பட்டன. முடிவில் ஹைதராபாத் 208-7.



பந்துவீச்சில் பெங்களூரின் சார்பாக ஜோர்டான் மூன்று இலக்குகளையும், அரவிந் இரு இலக்குகளையும், சாஹல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அரங்கம் அதிரும்படியான ஆரம்பத்தைக் கொடுத்தது. கெயிலின் தாண்டவத்தில் விறைத்துப்போய் நின்றார் வோர்ணர். இன்னும் சொல்லப்போனால் பவர்பிளே முடியும் வரை களத்தடுப்பு வியூகங்களில் பெரிதான மாற்றம் இருக்கவில்லை. பவர் பிளே முடிவில் பெங்களூர் 59-0. இதில் கெயிலின் பங்கு 48 ஓட்டங்கள். கெயிலுக்கு அதிகளவான வாய்ப்புக்களை வழங்கிக் கொண்டிருந்தமையே கோக்லியின் நிதானத்துக்குக் காரணம். பத்தே பந்துப்பரிமாற்றங்களில் இலக்கை இழக்காமல் நூறு ஓட்டங்களை எட்டியது பெங்களூர். 25 பந்துகளில் பதிவானது கெயிலின் அரைச்சதம். அணியின் ஓட்டம் 114ஆக இருந்தபோது 76 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கெயில். கெயில் ஆட்டமிழந்தபோது 57 பந்துகளில் 94 ஓட்டங்கள் தேவையென்றிருந்தது. கோக்லி, வில்லியர்ஸ், லோகேஷ் ராகுல், சச்சின் பேபி, பின்னி, வற்சன் என்ற பலமான வரிசை வெளியே இருந்ததால் இத்தகைய அரணைத்தகர்த்து ஹைதராபாத் வெற்றிபெறும் என்று எவரும் நினைத்திருக்க மாட்டார்கள். நேற்றும் அரைச்சதத்தை பதிவுசெய்த கோக்லி 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததுதான் தாமதம் பெங்களூரின் துடுப்பாட்ட வரிசை ஒன்றன் பின்னர் ஒன்றாக முடிவுக்கு வந்து கொண்டிருந்தது. ஒருவரேனும் களத்தில் நிலைக்கவில்லை. ஆனால் அவ்வப்பொழுது ஓரிரு பவுண்டரிகள் பதிவாகிக் கொண்டிருந்தன. முடிவில் 8 ஓட்டங்களால் பெங்களூரை வீழ்த்தி கிண்ணத்தைக் கொண்டு சென்றது ஹைதராபாத்.

பந்துவீச்சில் ஹைதராபாத்தின் சார்பாக கட்டிங் 2 இலக்குகளையும், சரண், ரகுமான் விபுல் சர்மா மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

**நிறைவேறாத வில்லியர்ஸின் கனவு**

ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக கருத்துத் தெரிவித்திருந்த வில்லியர்ஸ், இறுதியாட்டத்தில் களமிறங்கும் அனுபவமும், அதிர்ஷ்டமும், கிண்ணத்தைக் கையிலேந்திய தருணங்களும் என்னிடத்தில் இல்லை. எனவே இந்த இறுதியாட்டம் இத்தகைய எனது நீண்டநாள் விருப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று தெரிவித்திருந்தார். ஆனால் இந்த ஆட்டத்திலும் அவரது கனவுகள் நிறைவேறாமல் தள்ளிப் போயுள்ளன.

**தோல்விக்குக் காரணமாகிய வற்சன்**

பெங்களூரின் தோல்விக்கு பிரதான காரணமாக வற்சனே சொல்லப்படுகிறார். 4 பந்துப்பரிமாற்றங்களை முழுமையாக வீசிய அவர் எந்தவொரு இலக்கையும் கைப்பற்றாமல் 61 ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருந்தார். தவிர களத்தடுப்பி லும் கோட்டை விட்டார்.

**கைகொடுத்த புவனேஸ் குமார்**

ஹைதராபாத்தின் வெற்றிக்கு வோர்ணர், யுவராஜ், கட்டிங் போன்றோரது துடுப்பாட்டம் பிரதான காரணமாக அமைந்தாலும் எல்லாவற்றிலும் மேலாக கவனிக்க வைக்கிறது புவனேஸ்குமாரின் பந்துவீச்சு. கொளுத்திய கோக்லி, மிரட்டிய கெயில் இவ்வாறான அச்சுறுத்தல்களையெல்லாம் சமாளிக்க[illegible] அவர் தான் [illegible] பரிமாற்றங்களில் 25 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்திருந்தார்.

**ஆயிரத்தை தவறவிட்ட கோக்லி**

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்தவராக கோக்லி இருந்தாலும் அவர் ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லைத் தவறவிட்டுள்ளார். 973 ஓட்டங்களைக் குவித்த அவர் வெறும் 27 ஓட்டங்களாலேயே அதைத் தவறவிட்டார்.

**விருதுகளை அள்ளிய விராட்**

அதிக சிக்சர்களைப் பதிவுசெய்தமைக்கான விருது, அதிக ஓட்டங்களைக் குவித்தமைக்கான விருது, பெறுமதி மிக்க வீரருக்கான விருது, தொடராட்ட நாயகன் விருது போன்ற விருதுகளை அள்ளிச் சென்றார் விராட்.

**கனவு அணியின் தலைவரான டோனி**

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் அனைத்து அணிகளையும் சேர்ந்த பதினொரு வீரர்களைத் தெரிவுசெய்து கனவு அணி வெளியிடப்பட்டது. இந்த அணிக்கு டோனி தலைவராக குறிப்பிடப்பட்டார். அணி விவரம் (துடுப்பாட்ட வரிசையின் படி) வோர்ணர், கோக்லி, வில்லியர்ஸ், ரெய்னா, யுவராஜ், டோனி, வற்சன், யூசுப் பதான், சாஹல், புவனேஸ்குமார், ரகுமான். (ம)

இறுதிக் கருத்தரங்கு
Jun- 04, 05, 11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள
SLAS
(OPEN)
பரீட்சைக்கான இறுதிக் கருத்தரங்கு
31.05.2016 Tue - 4.00 - 7.00 pm
01.06.2016 Wed - 1.00-7.00 pm
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்.
T.p:- 077 469 6695

SLAS
Open
இறுதிக்கருத்தரங்கு

German Institute
German, Swiss, Ostria நாடுகளுக்கான Deutsch மொழிகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் A1 - Deutsch-Embassy Certificate க்கு ஏற்றவாறு ஜேர்மனியிலிருந்து வருகை தந்த ஆசிரியையினால்
Mrs.P.Kajenthini TP: 077 160 4823
in, Jaffna.

(CBF/ABF), (DBF/DABF)
Note :-

## சூதாட்டத்தில் மனைவியை இழந்த கணவன்; ஐ.பி.எல். தொடரில் அதிர்ச்சிச் சம்பவம்

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் ஐ.பி.எல். தொடருடன் தொடர்புடைய சூதாட்டம் ஒன்றில் மனைவியை வைத்து தோற்றுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.பி.எல். தொடரின் தீவிர ரசிகரான குறித்த நபர் சூதாட்டத்தில் ஈடுபட்ட பணம் இல்லாததால் மகாபாரத பாணியில் மனைவியை வைத்து தோற்றுள்ளார். இதனை அடுத்து அவருடன் சூதாட்டத்தில் ஈடுபட்டு வென்றவர்கள், அந்தப்பெண்ணை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டும், நேரில் சந்தித்தும் தொல்லை கொடுக்க ஆரம்பித்துள்ளனர். பிரச்சினையை உணர்ந்துகொண்ட அந்தப் பெண் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதை அடுத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட அத்தனை பேருக்கு எதிராகவும் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது. (ம)

## இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இலங்கை போராட்டம்

இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாளில் இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸிற்காக 101 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்ததுடன் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 397 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்து நாள் முடிவில் 309-5 என்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 498-9 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக மொயின் அலி ஆட்டமிழக்காமல் 155 ஓட்டங்களையும், கேல்ஸ் 83 ஓட்டங்களையும், ரூட் 80 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கை சார்பாக பிரதீப் 4 இலக்குகளையும், சிறிவர்தன, லக்மல் இருவரும் தலா 2 இலக்குகளையும், கேரத் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை 101 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக குசல் மெண்டிஸ் 35 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக புரோட் 4 இலக்குகளையும், வோக்ஸ், அன்டர்சன் இருவரும் தலா 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக தொடர்ந்து துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்டது இலங்கை. கருணாரத்ன, சில்வா இணை இம்முறை சற்று அதிகம் நிதானித்தது. இணைப்பாட்டமாக 38 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கருணாரத்ன. சில்வாவுடன் மெண்டிஸ் இணைய இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்கக்கூடிய வகையில் அடித்தளம் அமைத்தது இலங்கை. அன்டர்சனின் பந்தில் பவிலியன் திரும்பினார் மெண்டிஸ். மறுமுனையில் சில்வாவின் அரைச்சதம் பதிவானது. மொயின் அலியின் பந்துவீச்சில் போல்ட் செய்யப்பட்டார் திரிமன்னே. சந்திமல், மத்தியூஸ் இணை நேற்று தமது திறனை நிரூபித்தது. 200 ஓட்டங்களை எட்டியது இலங்கை. 80 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் மத்தியூஸ். சந்திமல்லுடன் இணைந்தார் சிறிவர்தன. இறுதிவரை இணைப்பாட்டம் பிரிக்கப்படாத நிலையில் நாள் முடிவில் இலங்கை 309-5 என்றுள்ளது. சந்திமல் 54 ஓட்டங்களுடனும், சிறிவர்தன 35 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.